உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: உ. அட்சய கார்த்திகை. மலர்: ௩, ௪.

உ

தொல்காப்பிய மரபியல்.

தமிழ்மக்களது பழநிதியாகக் கிடைத்துள்ள நூல்கள் பலவற்றுள்ளும், தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் காலத்தால் முற்பட்டதாகும். இந்நூல், யாவரால் எக்காலத்து ஆக்கப்பட்டது என்பது, இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு திண்ணமாகக் கூறவியலாததாகும். இந்நூலின் காலத்தைத் திண்ணமாக வரையறுத்துக் கூறுவிடினும், புலவர் பலரும் இந்நூல் காலத்தால் முற்பட்டதென்பதை ஒப்புக்கொள்ளாதிரார். இப்பெருநூலின் இறுதிப்பகுதியாகிய மரபியலை, ஒரு முறை மேற்பார்வையாகப் பார்ப்போர்க்கும், இப்பழநூலில் இப்பகுதியின் சில சூத்திரங்கள் பிற்காலத்துப் பெரியோர்களாற் சேர்க்கப்பட்டுள்ளனவோ; அன்றி, மக்களது உள்ளங்கடந்த காலத்தின்பாற் படுதலின், அச்சூத்திரங்களின் சொற்கள் இவ்வாறு மயங்கச் செய்கின்றனவோ என்னும் தடுமாற்றங்கள் உண்டாகாமற்போவதில்லை. இவ்வாறு ஐயுறச்செய்யும் சில கருத்துக்களைப் பேரறிஞர்கள்பாற் றெரிவித்து ஐயந்தெளிதற்கென வெழுந்ததே இச்சிற்றுரையாகும்.

மரபியற் சூத்திரங்களிற் காணப்படும் சில சொற்கள், பிற் காலத்துச் சொற்களென ஐயுறத்தக்கனவாயிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒட்டகம் என்னும் ஒரு சொல் "ஒட்டகமவற்றொ டொருவழி நிலையும்" என்னும் கஅ-ஆம் சூத்திரத்தும்

"ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக்குரிய"

என்னும் ௫௨-ஆம் சூத்திரத்தும் காணப்படுகின்றது. மரபியலுட் கூறப்பெறும் மாண்புடையதாய விச்சொல் தொல்காப்பியத்துக்குப் பிற்றோன்றிய, இதுவரை வெளிப்பட்டுள்ள, சங்கவிலக்கியங்கள் பலவற்றுள்ளும் காணப்படுவதாகத் தெரியவில்லை. பின்னும் இப்பெயரால் நாம் அறியக்கிடக்கும் விலங்கு இயற்கையாகப் பிறந்து வளர்ந்து வாழ்வதற்கு ஏற்ற இடவமைதி நாம் காணும் தமிழகத்தேயுளதாகக் கூறவுமியலாது. மேலும் நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளுக்குமுன் இவ்விலங்கு தமிழ் நாட்டிட் புகுந்ததாகவும் கூறுதற்கேற்ற சான்றுகளும் கிடைத்தில. இவ்வாறிருப்ப, இந்த "ஒட்டகம்" என்னும் சொல் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டதாகக் கருதுவதாற்போந்த இழுக்கென்னை? என வொரு ஐயம் நிகழ்தலும் இயல்பேயாம்.

மரபியல் இறுதிச் சூத்திரத்துள் "ஞாபகங் கூறல்" என்னுமிடத்துக் காணப்பெறும் "ஞாபகம்" என்னும் சொல்லும் பிற்காலச் சொல்லாகவே தெரிகின்றது. இச்சொல்லும் பழவிலக்கியங்களுள் காணற்கரிதாகின்றது.

---

1. ஒட்டகம்.

சொல்லத் தகுமுகட் டொட்டகம் வெட்டுந் துணைமருப்பா
ரில்லத் தெருமை கழுதைக ளென்றிவை யேறிநின்றே
மெல்லத் தரையி லிழிவதன் முன்னம் விழித்திடுமேற்
கொல்லத் தலைவரு மாற்றருஞ் சீற்றத்துக் கூற்றுவனே."

கணூல். அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

2. ஞாபகம்.

"தாமரைப்பூப் படைப்பிற்கு முதலாகவந்து மலரு
மென்பதற்கு, வேதம் ஞாபகவேதுவாதலின், அதற்கு
அதனை ஒடையாக உபசரித்துக் கூறினர்."

பரிபாடல், பரிமேலழகர் உரை.

இவ்விரு சொற்களும் உரையாசிரியர்கள்காலத்தே வழக்கி லிருந்துள்ளன வென்பது கொண்டு யாம் இவற்றைப் பழஞ் சொற்களாகக் கருதுவதற்கில்லை.

தமிழ்ப் பழநூல்கள் பலவற்றுள்ளும், பாடபேதங்களும் இடைச்செருகல்களும் நிகழ்ந்துள்ளனவென்பது யாவருமுணர்ந் ததே. இப்பொழுது காணப்பெறும் நூல்கள் சிலவற்றுள், முன்னோரால் குறிப்பிட்டுள்ள பாடல்களின் தொகை, மிக்கும், குறைந்தும் காணப்பெறுவதே, இவ்விடைச்செருகல்கள் நிகழ்ந் துள்ளமையை வலியுறுத்தும். இத்தகைய மாறுதல்கள், முழு முதற்செந்தமிழ் நூலாம் நம் தெய்வத் தொல்காப்பியத்துள்ளும் நிகழ்ந்துள்ளனவென்பதை எண்ணவும் நம் உள்ளம் இடர்ப்படு கின்றது. உண்மையைக்காண முயலுமிடத்து, நமது கொள் கையையும், விருப்பத்தையுஞ் சிறிது ஒதுக்கி வைக்கவேண்டிய தும் இன்றியமையாததாகின்றது. தொல்காப்பியத்துள், உரை யாசிரியர்கள் காலத்திலேயே சில பாடபேதங்களிருந்தனவென் பது, "இனி, இக்காலத்துள்ள ஆசிரியரில் ஒரு சாரார் தொ ண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்றொன்றுமெனப் பாடந் திரிப்பாரும் இன்னொரு சாரார் எழுநூற்றொன்று மெனப் பாடந்திரிப்பாரும் உளர். ஒரு பகுதியார் ஒன்றுமென்பன முற்றுவினை யென்ப, மெய்பெறுமரபிற் றொடைவகை பத்துக் குறை யெழுநூறென்னும் எண்ணினொடு ஒன்றுமெனக்கூட்டுப. பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்பது அவர் கருத்து. ஒன்றுமென்பதனை எண்ணுப்பெயர் முற்று மைப்படுத்ததென்பாரும் அதுவே கூறுப: அவரறியார். அவ் வாறு சூத்திரஞ் செய்வது ஆசிரியர் கருத்தன்று. அல்ல தூஉம் ஒன்பதென்ப வுணர்ந்திசினோரே என்பது பழம்பாடமாக லானும் அஃதமையாதென்பது." எனவரும் செய்யுளியலின் உரையால் நன்கு தெரியலாகும்.

இவ்வாறு பாடந்திரிக்கும் ஆசிரியர்கள் கைப்பட்ட நம் நூலில், காணப்பெறும் பழஞ்சொல்லல்லாதனவென நாம் கொள் ளும் சில சொற்களைக்கொண்டு மரபியலுட் சில சூத்திரங்கள்

பிற்காலத்துச் சேர்க்கப்பட்டனவோ வெனவும் ஐயுறுதற்கிடனு கின்றது. தக்க பிற சான்றுகளின்றி, மரபியலின் சூத்திரங்களுட் சில இடைப்பெய்தனவென வொரு முடிவுசெய்தல் பேரிழுக்கா மென்பதும் நாம் நன்குணரத்தக்கதேயாகும். வேறொருவகை யாக நோக்குவோமாயின்-

இக்காலத்து மக்களால் எண்ணி அறியமுடியாத ஒரு பழங்காலத்தெழுந்த நமது தொல்காப்பியம், தான் தோன்றிய காலத்திலேயே தொன்மையுடைதெனக் கொள்ளத்தக்க பலபொருள் கள் பொறித்துள்ளதோர் அழியாப் பட்டயமாகலின், அதன் கட்காணப்படும் சொற்களையும், பொருள்களையும் இக்காலத்திய நூல்களாற் பெற்றதொரு நமது அறிவினுல் ஆராய்தல் இழுக் காகும். தொல்காப்பியத்திற் காணப்பெறும் சில வழக்குக் களும் சொற்களும் உரையாசிரியர்கள் காலத்திலேயே தோன்று தொழிவனவாயின. உரையாசிரியர் 'குதிரையைச் சேவலென் றல் இக்காலத்தரிதாயிற்று' எனவும் "இது முதலூழியில் வேளாளர்க்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது................ எனவே முற்காலத்து நான்கு வருணத்தார்க்கும் காணம் ஒன் றாய் நிகழ்ந்தது என்பதாம். அது இரண்டாம் ஊழிதொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது என்பதூஉந் தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே காணம் ஒன்றாகச் செய் யுள் செய்தார் என்பதூஉங் கூறியவாறாயிற்று. உதாரணம் இக் காலத்தின்று" எனவும் "இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல்செய்தலின் முதனூலாசிரியர் கூறியவாறே களவுநிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் காணம் யாத்த வாறுங் கூறினர்" எனவுங் கூறுமாற்றால் பழந்தமிழ் நூல்கள் பல வும் நிலைபெற்றிருந்த உரையாசிரியர்கள் காலத்திலேயே, சில தொல்காப்பிய வழக்குக்களும், சொற்களும் காணப்படாவாயின வென்பது நன்கு தெரிகின்றது. எனவே, 'ஒட்டகம்' 'ஞாப கம்' என்னுஞ் சொற்கள் பிற்காலத்துப் பழநூல்களுள் காணப் பெறுமை கொண்டு, அவை இடைப்பெய்யப்பட்டனவெனக் கொள்ளுதல் எவ்வாறமையும் ? எனவும் வினவலாம்.

நாம் காணும் தமிழகமாகிய வேங்கடத்தின் தென்பால் முப்புறமும் கடல் சூழ்ந்துள்ளதொரு சிறு நிலப்பரப்பில் ஒட்டகம் வாழ்தற்கேற்ற இடவமைதி காணாதது கொண்டு ஒட்டகம் தமிழ்நாட்டு விலங்குகளுள் ஒன்று அன்றெனக் கூறவுமியலாது. இந்துமாகடல் என்னும் பெருநீர்ப் பரப்பு, பெருநிலப்பரப்பாய்த் தமிழகத்தின் ஒரு பகுதியாய் நிலைபெற்றிருந்த பழங்கால மொன்றுளதென நாம் அறிகின்றமையாலும், அக்காலத்துத் தமிழகத்தின் ஐம்பெரும்பிரிவுகளுள் ஒன்றாய்ப்பாலையை வைத்தெண்ணப் பட்டமையாலும்; பாலை, ஒட்டகம் வாழ்தற்கேற்ற அமைதிகளுடையதாதலாலும் ஒட்டகம் தமிழகப் பழவிலங்குகளுள் ஒன்றெனக்கோடலில் இழுக்கொன்றுமின்று. தமிழகப் பெரும்பகுதியைக் கடல் கொண்டபின்னர் அவை இங்குக் காணப்பெறாது வேற்றுநாட்டுவழிப் பிற்காலத்து மீண்டும் தமிழகத்தே புகுந்திருத்தல்கூடும். ஏனையசொற்களையும், இவ்வாறே, பழங்காலத்து வழங்கிப் பின்னர் மறைந்து மறுமுறை வேறுவழியாகத் தமிழ்மொழியிற் புகுந்தனவாகவுங் கொள்ளலாம். ஆகவே, இச்சில சொற்களைக் கொண்டு மரபியற் சூத்திரங்களை ஐயுறவேண்டாவென்பது பிறிதொரு தோற்றமாகும்.

இவ்வாறு, ஒருவழி நோக்கின் ஒரு தோற்றமும், வேறொரு வழி நோக்கின் முன்னையதின் மாறுபட்டதொரு தோற்றமும் காணப்பெறுதல், பழந்தமிழ்நூல் பலவற்றிற்கும் பொதுவாகவே கொள்ளலாம். மரபியற் சூத்திரங்கள் சில இடைப்பெய்தனவா? அன்றா? எனவெழுந்த ஐயத்திற்கு யான் ஒருவகை முடிவும் செய்ததாகவாவது, செய்ய முயன்றதாகவாவது கருதல் கூடாது. பரந்த நூற்பயிற்சியும், சிறந்த கேள்வியுமில்லாத சிற்றறிவுடையேனால், இஃது இயலாததென்பதை நன்குணர்வேன். எனது ஐயத்தையும், அதனாலெழுந்த தோற்றத்தையும் பெரும்புலவர்கள்பாற் றெரிவித்து, அப்பெரியோரது சிறந்த ஆராய்ச்சியின் பயனாகக் கிடைக்கக்கூடிய முடிவால், தெளிவடையலாமென்ற பேருவகையொன்றே கொண்டுள்ளேன். இத்தகைய எளிய பொருள்களைப்பற்றி ஆராய்தற்குப் பெரியோர்கள

கருதாராயினும், அறியார்க்கு அறிவுறுத்தல் என்னும் பேரருள் பூண்டவர்களாகலின், இச்சிறு பொருள் குறித்தும் தமிழ்ப் பொழில்வழி, கட்டுரை வரைவார்களெனுந் திண்ணமான எண்ணத்துடன், எதிர்பார்க்கின்றேன்.

நீ. கந்தசாமி.

ஓர் நல்வரவேற்பு.

இது திரு. தி. கு. தங்கவேலுப் பிள்ளையவர்கள், பீ. ஏ., பாரிஸ்டர், எம். எல். ஸி., புலவர்களுக்குக் கூறியது.

'பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேயவாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
யொருவழித் தோன்றி யாங்கு'

பற்பல ஊர்களிலிருந்தும், தமிழ் மொழியின்பால் வைத்துள்ள பேரன்பினால் 'தமிழ்ப்புலவர் பெருங்கூட்டத்தின்' இரண்டாந் திருவிழாவைக் கொண்டாட இவண் எழுந்தருளியுள்ள சான்றோராகிய புலவர்களே! உங்களுக்கு 'வாழி பல்லூழி! வாழி பல்லூழி!!' என வாழ்த்துக்கூறுதலன்றி, யான் செயத்தகும் கைம்மாறு பிறிதென்னை? உலகத்தோர் யாவரும் அவரவர்கள் முன்னேற்றத்திற்கு அவரவர்கள் மொழியை மேம்படச்செய்தல் இன்றியமையா தென்பதை யுணர்ந்து, அவ்வாற்றிலொழுகி, இயன்றனவாற்றி எழில்பெறும் இந்நாள், நாமும் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியின் முன்னேற்றத்தை நாடவேண்டு மென்ற ஊக்கம் துரப்ப, அதற்கேற்ப உழைத்தலே கடனென உணர்ந்து, அவ்வுணர்ச்சியை உறுதியாகக்கைக்கொண்டு, தமிழ்ப் பணிக்காகவே வாணாளெல்லாம் பயன்படுத்த வேண்டுமென்று உள்ளத்தை நிலைநிறுத்திய நீயிர் ஒருங்கு கூடியிருப்பதைக்

காணும்பொழுதே, 'தன்னேரிலாத தமிழ்மொழி முன்னேற்றமடைந்தது! முன்னேற்றமடைந்தது!' என விரிச்சிகூறி என் உள்ளம் என்னை மகிழ்விக்கின்றது.

பெரியோர்களே!

உ. இஞ்ஞான்று வையத்தே பீடுபெறவழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும் நமது தமிழ்மொழியே பழமைவாய்ந்ததென்பது அறிவுடையோர் பலருங்கண்ட உண்மையாகும். தமிழ்போன்று பழமைவாய்ந்த மொழிகள் சில இன்றும் உளவெனினும், மக்களது உள்ளவளர்ச்சிக்கேற்ப வளரவாற்றுதனவாய், வழக்காறற்றிருக்கின்றனவேயன்றி, மொழியாலாம் பயன் முழுவதையும் மக்களுக்களிப்பனவாயில்லை. தமிழ்மொழி சீரடைந்து தனக்கென ஒரு நிலைமையைப் பெற்றதற்குப்பின் தோன்றிய மொழிகளிற் பல நாளடைவில் வடிவுதிரிந்து, சில நூற்றாண்டுகட்கு முன்னர் அவை பெற்றிருந்த அமைப்போடுஇன்று அவை பெற்றிருக்கும் அமைப்பை உற்றுநோக்குவார்க்கு, அவை வேறுமொழி இவை வேறுமொழி எனத் தோன்றும் வண்ணம் பலதிறப்பட்ட நிலை திரிந்து அலைவனவாயின. நமது தமிழ்மொழியோ மக்களது காலக் கணக்கைக் கடந்ததோர் பழங்காலத்திலேயே ஒரு சீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடையோர் எனப்படும் பாபிலோனியர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மைநோக்கின் தமிழைவென்றவர்களல்லர். உலகந் தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரையும் மலைக்கச்செய்வதும், ஈடும் எடுப்புமற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாகவுள்ளதென யாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதுமான பேரிமையர்மலையும் தோன்றுதற்கு முன்னரே தான்றோன்றித் தனிச்செங்கோலோச்சியது தமிழ்மொழியென்னின், இதன் பழமையை ஆராயவல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்துகிடக்கும் தென்னாழி (The Indian Ocean) முழுதும் நிலப்பரப்பாய் விரிந்திருந்தஞான்று அந்நிலப்பரப்பில் வழங்கிவந்தது நமது பழந்தமிழே யாகும். அவ்வாறு பரந்துகிடந்த பெருநிலப்பகுதிதான் இவ்வுலகத்து

முதன்முதற் றோன்றிய நிலப்பகுதியென்றும், அந்நிலப்பகுதியிற்றான் மக்கள் முதன்முதற் றோன்றினார்களென்றும் இப்பொழுதைய பழங்கலைப் புலவர்கள் பலரும் அறிவிக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந் தமிழ்மொழியே கைக்குறியால் கருத்தை விளக்கி வந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியா யெழுந்த முதல்மொழி யென்பது பெறப்படுகின்றது. இப்பொழுதைய மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச் சொற்களுக்கு இயைந்தனவாயிருப்பதும், செவ்வையுறாத சில மொழிகளின் சொற்களும், அமைப்பும் மிசு நெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும், தமிழொலிகள் இயற்கையொலிகளுக்கேற்ப வமைந்துள்ளதும், ஒரு பொருளைக் குறிக்கும் பல தமிழ்ச் சொற்கள் மக்களது அறிவு வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு காலத்தில் அவர்கள் கண்ட அப்பொருளினது ஒவ்வொரு தன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பிப்பதும், மொழியாராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையையும் விளக்கி மகிழ்விப்பனவாகும் இம்மொழியின் பழஞ்சொற்களைச் சொல்வோமானால் இம்மொழிக்கு அயலாயுள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக்கூடிய இயற்கையொலி அவற்றின்கண் வாய்ந்திருத்தல் நன்கு விளங்கும். தமிழ் மொழியில் ஒரு பறவையின் பெயரைச் சொல்வோமானால் அப்பறவை தமிழுணர்ந்ததுபோல் தன் பெயர் சொல்லக்கேட்டவுடன் நம்மிடம் விரைந்து பறந்து வருமாயின், இம்மொழி மக்களுக்கேயன்றி உயிர்வாழ்வன பலவற்றிற்கும் பொது மொழியென்று கூறல்மிகையாகுமா?

௯. இங்ஙனம் எல்லா உயிர்களுக்கும் பொதுமொழியென்று சொல்லக்கூடிய தமிழ்மொழி பண்டை நாட்களில் பாண்டியர்களாற் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்கள் சங்கங்களை நிலைநாட்டிப் புலவர்களைப் புரந்து வந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உள்ளத்திற்கேற்ப நூலெழுதிப் பரவச்செய்வாராயின், நல்ல நூல்களால் நன்மை விளைவதுபோல், ஒழுங்கற்ற நூல்களால் தீமையும் விளைவதியல் யென்பதை அவர்கள் உணர்ந்து, யாவர் எந்நூலெழுதினும் அந்நூல் சங்கப்புலவர்

களால் ஒப்புக்கொள்ளப்பெற்ற பின்னரே நூலென்னும் தகுதி பெற்று உலகில் வழங்க வேண்டுமென்ற ஒரு வரையறை ஏற்படுத்தியிருந்தார்கள். அறிஞர் பலரால் பல அரிய நூல்களாக்கப்பட்டு, சங்கமேறி அக்காலத்து வழங்கிவந்தன. மக்களது வாழ்விற்கும் இன்பத்திற்கும் உயர்விற்கும் இன்றியமையாத பல கலைகள் அக்காலத்திய அறிஞர்களாலாக்கப்பட்டிருந்தன. அவற்றுட்பல தத்தம் பெயர்கூட நமக்குத் தோன்றுவண்ணம்மறைந்து போயின. சில நூல்கள் பெயர்கள் மட்டில் நமக்குக்காட்டி மறைவுற்றன. இப்பொழுது நமக்குக் கிடைப்பனவாகஇருப்பவை **தொல்காப்பியம்** என்னும் இலக்கணமும், கடைச்சங்கத்தாரால் தொகுக்கப்பட்டனவும் ஆக்கப்பட்டனவுமாகிய **நற்றிணை, புறநானூறு** முதலிய எட்டுத்தொகை நூல்களும், **பழமொழி, திருக்குறள்** முதலிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், **பத்துப்பாட்டு** முதலிய சில நூல்களுமேயாம். இவைகளில் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலுள்ள பல பிரிவுகளுக்கும் 'மரபு', 'இயல்', 'ஆக்கம்' என்னும் ஏற்ற பெயர்களைக் கொடுத்திருப்பதே அதன் பெருமையை விளக்குவதாகும். பொருளிலக்கணத்தில் மக்களது உள்ளப்பாங்கு முதலியவற்றைப் பலபட விரித்து விளக்கியிருக்கும் தன்மை, அவ்வளவு பழங்காலத்தில் ஒரு நாட்டாரும் அறிந்து வெளியிடாத மாண்பு வாய்ந்திருக்கின்றதோடு, இக்காலத்து அறிவும் எட்டிப்பாராத நுட்பம் வாய்ந்திருக்கின்றதென்பது நுண்ணிய வாராய்ச்சியாளர்க்குத் தெள்ளிதிற் புலப்படக்கூடிய உண்மையாகும். **திருக்குறள்** என்னும் அருமைத் தமிழ் ஆணை நூல் உலகத்திலுள்ள பேரறிஞரது உயர்கருத்தையெல்லாம் தெள்ளியெடுத்து எளிய பாக்களிற் புகுத்தி நமக்கு அறிவூட்டுகின்றது. இந்நூலிற் கூறிய அரசியல், அமைச்சியல் ஒழுக்கமுறைகள், முதலியவற்றை உலக வரலாற்றோடு ஒப்பு நோக்குவார்க்கு உலக வரலாறு என்னும் பேரிலக்கியத்திற்கே **திருக்குறள்** ஒரு பெரும் இலக்கணம் என்பது நன்கு புலப்படும். ஒவ்வொரு குறட்பாவும் வெளிப்பார்வைக்கு எளிதாகத் தோன்றினும் ஆழநோக்குவார்க்கு அளவிறந்த பெரும்

பயன் தருவதாயிருக்கின்றது. மக்கள் கைக்கொண்டொழுகற் காற்றுதவைகளைக் கூறும் ஆணை நூல்கள் போலல்லாது, மக்கட் பிறப்பினர்யாவரும் வேற்றுமையின்றிக் கைக்கொண்டொழுகக் கூடிய கட்டளைகளையே கூறுவதினால் இந்நூலது ஆணைவண்ணம் ஒழுகிவருபவர்கள், இன்பமும், எழிலும், ஏற்றமும் பெறுவார்களென்பது திண்ணம். பத்துப்பாட்டு முதலிய நூல்கள் இயற்கை வனப்பைக்கூறுவதில் இணையற்றன. உள்ளதை உள்ளவாறே கூறுவதினால் அந்நூல்களில் உரைக்கப்படும் பொருள்கள் நம் உள்ளத்தில் உடனே பதிந்து பயன் தருவனவாகின்றன. கடுங்கோடையில் 'நெடுநல்வாடை' என்னும் நூலைப்படிப்போமாயின் வெளித்தோன்றும் கோடையை நம் உள்ளத்தே தோன்றும் வாடை மறைத்து நம் உடலையும் குளிரச்செய்யுமெனின், அந்நூலது இயற்கையைக் கூறும் தன்மையையும் முறைமையையும் கூறவும் வேண்டுமோ? **புறநானூறு, சிலப்பதிகாரம்** முதலிய நூல்கள் அக்காலத்திய தமிழ் வேந்தர்களது நடுநிலைமை, தமிழ் மக்களது வீரம், தமிழ்ப்புலவர்களது பெருமை, தமிழகத்தினது மேன்மை முதலியவற்றை நன்கு விளக்குகின்றன. அக்காலத்தில் தமிழ்ப்புலவர்களை முடியுடை வேந்தரும் போற்றிவந்தனர். புலவர்களால்தாங்கள் பாடப்பெறுவதே பிறவியெடுத்தலின் பெரும்பயன்களுள் ஒன்றாகக் கருதிவந்தனர். **பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்னும் வெஞ்சினவேந்தன் வேற்றவர்ப்பணிப்ப வஞ்சினங்கூறியெழுந்த ஞான்று, நான் மாற்றாரை வெல்லேனாயின்,

'மாங்குடி மருதன் றலைவனாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை'

என உரைப்பானாயின், புலவர்களையும் அவரது பாடல்களையும் அரசராயினார் எவ்வளவு மேலாக மதித்து வந்தனர் என்பது கூறவும் வேண்டுமோ? அக்காலத்திய புலவர்களும் காசுபணங் கொடுத்தவரையெல்லாம் காரி, பாரி என்று பாடிவிடாமல், உயர்திறம் உடையவர்களையே சார்பாகவடைந்து அவர்களது உண்மைச் செயல்களையே உரைத்துவந்தார்கள். மாறுபாடு செய்

பவர்கள் மன்னர்களாயினும் அன்னோர்க்கு அறிவுகூறி நல்வழிப் படுத்தும் பேராண்மை வாய்ந்தவர்களாகவுமிருந்தார்கள். அதியமானெடுமானஞ்சியுழைச்சென்ற பெருஞ்சித்திரனர் என்னும் புலவரை அவன் காணுது பரிசில் கொடுப்பப் புலவர் அகப்பட்டதை அடித்துக்கொண்டு போவோமென்றெண்ணுது, தன் திறனறியாது கொடுத்த பரிசிலைக்கொள்ள உளம் பொருராய்,

'காணு தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே'

எனச்சொல்லியதை நோக்கும்பொழுது அந்நாளைய புலவரது நெறியும், ஒழுக்கமும், ஆண்மையும் எவ்வளவு மேலானவென்று தெரிகின்றன.

ச. கடைச்சங்க காலத்திற்குப் பிறகு சைவசமய குரவர்களும், வைணவசமயத்து ஆழ்வார்களுந்தோன்றித் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய அருணூல்களைத் தோற்றுவித்துத் தமிழ் மொழியே கடவுளர்க்கும் உவப்பினை விளக்கும் தனிமொழி என்று காட்டியுள்ளார்கள். இந்நூல்களின் பெருமையும், இவற்றை அருளியோர்களின் பெருமையும் நம்மால் அளவிட்டுரைக்கற்பாலன அல்ல. இராமகாதை முதலியன வடமொழியிலிருந்தே தமிழ் மொழிக்குச் சேர்க்கப்பட்டனவாயினும் உள்ளப்பாங்கை விளக்கும் பகுதிகளெல்லாம் தமிழரது இயல்புக்கியையவே யிருக்கின்றன. நடுக்காலத்திய பெரும்புலவர்களாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியர் முதலாயினோர் சோழரது பேரவைக்கு அணியாக விளங்கினர். அக்காலத்தும் அப்புவிவேந்தர்கள் இக்கவி வேந்தர்களைத் தம்மினும் மேலாக மதித்து வந்தார்களென்பது பலரும் அறிந்த உண்மை. இங்ஙனம் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டுகாறும் பொன்னேபோற் போற்றப்பட்டுவந்த தமிழ்மொழியானது தமிழ் வேந்தர்களின் ஆற்றல் குன்றிய பிற்காலத்துப் பெருமைகுன்றத் தலைப்பட்டது. அக்காலத்தில் திருவாடுதுறை முதலிய விடங்களில்

மடங்கள் நிறுவப்பட்டன. அவற்றின் தலைவர்கள் தமிழையும் சமயத்தையும் புரந்துவந்தார்கள். தமிழ் மொழியில் தத்துவத் தொடர்பான நூல்கள் புதியனவாகவும் மொழிபெயர்ப்பாகவும் பல இயற்றப்படுவனவாயின. மடத்தலைவர்கள் பெரும்பாலும் தங்கள் மடத்தைச் சார்ந்தவர்களையே ஊக்கிவந்தபடியாலும், பொதுமக்களிடத்துத் தமிழ்ப்படிப்பும், பற்றும் குறைந்துவந்த படியாலும், உண்மைப் புலவர்களின் தொகை குறைவதாயிற்று உண்மைப்புலவர்கள் குறைவாராகப் போலிப்புலவர்கள் மிகுந்து பரவுவாராயினர். இவ்வாறு தோன்றிய புலவர்கள் தமிழ்மொழியிலுள்ள இலக்கண நூல்களின் தொகைகூட அறியாராயினும் 'இலக்கணக்கடல்' என்று பட்டம் வைத்துக்கொண்டும், சீரும் தளையும் உணராராயினும் 'பெருங்கவிப்புலவர்' என்று பெயர் வைத்துக்கொண்டும், தங்களைத் தாங்களே புலவர்கள் என்று சொல்லிக்கொள்வதால் பொதுமக்களும் தங்களைப் புலவர்கள் என்று மதித்துப் பணியவேண்டும் என்ற எண்ணமுடையவராய்த் திரிவாராயினர்.

ரு. இவ்வாறு தமிழ் தளர்வடைந்துவந்த காலத்தில் தாயுமானவர், குமரகுருபரர் முதலியோர் தோன்றி பலகலைகளையுங் கற்று, உலகியலினும் பெருநிலைபெற்றுத் தமிழ் மொழியைச் சிறப்புச் செய்வாராயினர். இக்காலத்திற்றான் இத்தாலிய நாட்டிலிருந்து வந்த இத்தாலியம் இலத்தீன் முதலிய பலமொழிகளையும் நன்குகற்ற வீரமாமுனிவர் (Constantius Joseph Beschi) தமிழ் மொழியின் வனப்பால் கவரப்பட்டு, அதனைக் கற்றுத் 'தேம்பாவணி' என்னும் தமிழ் நூலை அணிபெற இயற்றுவாராயினர். பிறநாட்டுப் பேரறிஞருளமெலாங் கவர்ந்த நம் மருமைத் தமிழ் இப்பொழுது தன்னாட்டாராலும் தக்கவாறு புரக்கப்படாது நிற்பது பெரியதோர் வியப்பே.

சு. மேனாட்டுக் கல்வி தமிழகத்தில் பரவிய பின்னர் ஆங்கில வுணர்வுபெற்ற சுந்தரம் பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, பரிதிமாற்கலைஞன் (சூரியநாராயண சாஸ்திரி) முதலிய அறிஞர்களால் பண்டைய தமிழ்ப்பாக்கள் போன்ற செய்யுட்களும்

அரிய உரை நூல்கள் சிலவும் எழுதப்பட்டன. போப்பையர் (Rev. G. U. Pope), காலடுவேலர் (Dr. Cald well) முதலிய மேனாட்டுப் புலவர்களும் தமிழைக்கற்று அதன் அருமை பெருமைகளை நன்குணர்ந்து பல நூல்களெழுதியும், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் தமிழ்ப்பணி தலைக் கொள்வாராயினர். இன்றைக்குத் தமிழிருக்கும் நிலைமையும், பொதுமக்கள் அதனிடம் கொண்டுள்ள பற்றுள்ளமும், கல்விக் கழகத்தாரது கண்ணோக்கும் யான் கூறவேண்டுவதில்லை. நிலங் கடலாகவும் கடல் மலையாகவும் கண்ட பழமை வாய்ந்ததும், பல நாட்டுப் பேரறிஞர்களையும் தன் வனப்பாலழைத்துப் பேரின்ப மீந்ததும், திருக்குறள் முதலிய ஒப்புயர்வற்ற உறுதியான ஆணை நூல்களும் பத்துப்பாட்டு முதலிய இயற்கையை உரைப்பதில் இணையிலாச் சங்க நூல்களும் உள்ளக்கிளர்ச்சிகளைத் தெள்ளிதி னுணர்த்தும் கம்பராமாயணம் முதலிய நூல்களும் அருளொளி காட்டி மருளிருள் நீக்கும் திருவாசக முதலிய பெருநூல்களும் பிறவும் தன்னிடத்தேகொண்டு பிறங்குவதும், பலவாண்டுகட்கு முன்னரே பலவாண்டுகளாகப் பாண்டியர்களால் பாதுகாக்கப் பட்டு வந்ததும், 'பழையம்; பழையம்' எனப் பறையறைந்து கொண்டு வாயிழந்து நிற்கும் வானுலக மொழிகளையெல்லாம் 'நேற்றைய! இன்றைய!' எனக்கூறத்தகும் பழமை வாய்ந்ததும், என்றும் நின்று நிலவுவதுமான தென்றமிழ்மொழியை அம் மொழி வழங்கும் நாட்டிலேயுள்ள கல்விக் கழகத்தார் ஏன் இவ் வாறு புறக்கணித்தார்களோ? புறக்கணிக்கின்றார்களோ? அறியேம்! அறியேம்!

அருமைப் புலவர்களே!

ஏ. தமிழ்மொழியின் வரலாற்றை ஆராயுங்கால் அது வளம் பெற்றிருந்த பொழுதெல்லாம் தமிழ் நாடும் வளம் பெற்றிருந்த தெனவும், அது வளங்குன்றியபொழுது நாடும் வளங்குன்றிற் றெனவும் தெரிதலால், இப்பொழுது நம் நாடு மேன்மையடைய வேண்டுமாயின் தமிழ் மொழியின் வளர்ச்சியே முதலிற் கருதப் படல்வேண்டும். தக்க தமிழ்ப்புலவர்கள் நகரந்தோறும் ஊர்கள்

தோறுஞ்சென்று ஆங்காங்குள்ள மக்களின்உள்ளமாகிற வறண்ட நிலத்தைத் தம் சொற்பொழிவுகளாற் குளிரச் செய்யவேண்டும். இங்ஙனம் நம் நாட்டின் மேன்மை தமிழையும், தமிழ்ப்புலவர் களையும் பொறுத்ததாயிருக்கிறதென்பதை யெடுத்துக்காட்டவே பண்டிதர்களாயுள்ள தங்கட்குமுன் யான் இவ்வரவேற்பினைக் கூறத்துணிந்ததுமாகும். இங்ஙனம் நாட்டின் நன்மை யாரைப் பொறுத்திருக்கின்றதோ அவர்களுடைய நிலைமை பெரிதும் இரங்கத்தக்கதாயிருக்கின்றது. தமிழ்ப்பண்டிதர்களின் ஆற்றலை யெல்லாம் குறைத்துவிட்டு நாட்டை வளம்படுத்தப்பார்ப்பது கருவியின்றிச் சித்திரம் எழுதப்பார்ப்பது போலாம்.

அ. கல்விக் கழகத்தார் செயல்கண்டு நீவிர் கவலன்மின். 'வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையான், உள்ளத்தில் உள்ளக் கெடும்' என்பதை உளங்கொண்மின். தமிழ் தாழ்வுறாது! தாழ் வுறாது! நீவிர் எல்லீரும் ஒருங்கே ஒத்துழைப்பீரேல் இன்றே தமிழ் முன்னேற்றமடைந்து, உலகமெலாம் தன் புகழ்பரப்பிப் பெருநலனுறச் செய்துவிடும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. நாம் பழங்காலத்தில் பெருமைபாக வாழ்ந்தோம், நம்மொழி பெருமாண்புற்றிருந்தது என்று சொல்லிக்கொண்டு, இனி முன் னேற்றமடைவதற்கேற்ற வழிகளைத்தேடாது வாளாவிருத்தல் பெருநகைப்புக் கிடனாகுமேயன்றிப் பிறிதில்லை 'பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்—தாள்வினை யின்மை பழி' என்பதை உங்கள் உள்ளத்தில் இருத்திக்கொள்ளுங்கள். கலைக்கழகத்தாரும் பொதுமக்களும் புறக்கின்றார்களில்லையெனினும், புலவர்களாக வுள்ள நீவிரே தமிழைத் தக்கநிலைக்குக் கொண்டுவந்து கல்விக் கழகத்தாரும் பிறரும் இதனைக் கண்ணோக்குமாறு செய்தல் வேண்டும். தமிழ்ச்சுவையை ஒருக்கால் கண்ட பிறநாட்டுப்புல வர்கள் இதன் பயனைத் தாங்கள் முழுதுமடையவேண்டி பிற நாட்டுக் கல்விக் கழகங்களில் ஊக்க முயல்கின்றாரெனின், நம் நாட்டார் அதன் சுவையை உணர்வாரேல், புறக்கணித்து நிற்பார் களா? நில்லார்! நில்லார்! அதன் சுவையைப் பிறருணரச் செய்ய வேண்டுவதே உங்கள் கடமையென்பதை உணர்மின்! உணர்மின்!

௬. இனி, நீவிர் தமிழுக்கு ஆற்றவேண்டிய தொண்டுகள் பலவுள. முதற்கண் பண்டைய நூல்களை யாவருமுணரும்வண்ணம் வெளியிட்டும், அந் நூல்களது அருமை பெருமை நுட்பங்களை ஆராய்ச்சி செய்தும் பணிசெயல்வேண்டும். இப்பணியில் தலைநின்றவர்களாகிய ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை, சாமிநாதையர் முதலாயினோர்க்குத் தமிழுலகம் என்றும் மறவா நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இம் மொழியிலுள்ள சொற்களை, அவைகள் பலபல காலங்களில் என்னென்னபொருளை உணர்த்திவந்தன வென்பதை நன்காராய்வீர்களாயின், அவ்வாராய்ச்சி சொற்களது தோற்றத்தையும் விரிவையும் புலப்படுத்துவதோடு மக்களது அறிவு வளர்ச்சியையும் அவர்கள் எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தப்பொருள்களின் எந்தெந்தத் தன்மைகளை உணர்ந்துகொண்டார்களென்பதையும் தோற்றுவித்து, நமக்கேயன்றி இவ்வுலகுக்கே பெரும்பயன் விளைவிப்பதாகும். நூலோடும், சொல்லோடும் ஆராய்ச்சிகளை நிறுத்திக்கொள்ளாது எழுத்தையும் ஆராய்வதே கல்விக்கின்றியமையாததாகும். எழுத்துக்களின் வரிவடிவையும் ஒலிவடிவையும் ஆராய்ச்சிசெய்து, நமது தலைவராகிய திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்கண்டு பிடித்திருக்கும் உண்மைகள் கணக்கிறந்தனவாயிருக்கின்றன. ஒரு எழுத்தின் வரிவடிவைக்கொண்டு அவர்கள் கண்டுபிடித்த உண்மைகள் நமக்குக் கிடைக்கக்கூடிய நூல்வடிவிலிப்பொழுதிருந்து வருவதைத் தாங்கள் கண்டு மகிழ்ந்து பயனடைந்திருப்பீர்களென்று எண்ணுகின்றேன். அவர்கள் சிறுகத்தி முதலிய நுண்ணிய கருவிகளால் உடலைக்கூறுசெய்து ஆராய்ந்து உண்மைகளைக்காணும் உடல் நூலாரும் இதுவரை காணாத உண்மைகளை ஒரு தமிழ் எழுத்தின் வரிவடிவுகொண்டு உறுதி கண்டார்களெனின், தமிழ் எழுத்துக்களது மாண்பும் நம் தலைவரவர்களது ஆராய்ச்சித்திறனும் நாம் புகழவல்லேமல்லேம். இம்மட்டோ! புலவர்களே! பாருங்கள்! தமிழ் எழுத்துக்களின் ஒலிவடிவு கொண்டும் இலக்கணங்கொண்டும் உலகத்தில் இதுவரை எவருங் கண்டுபிடிக்காத, எல்லா ஒலிகளையும் தமிழில் எழுதக்கூடிய ஒப்பற்ற வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்கில

நாடு சென்று விளக்கிய புதுக்கணக்கு முறைகளையும் தமிழ் கொண்டே கண்டதாகக் கூறுகின்றார்கள். இன்னும் எவ்வளவோ கலைகளைத் தமிழெழுத்துக்கொண்டு காண்கின்றார்களெனின் அவர்கள் மாண்பு யாம் கூறுந்தகைத்தோ! தமக்குள்ள பலவேலை களினிடையே கிடைக்கும் சிறு ஓய்வுகளைக்கொண்டும், இரவில் துயிலும் பொழுதைக் குறைத்து அதிலேற்படும் பொழுது கொண்டும் தமிழுலகுக்கே பெரும் பணிசெய்து வரும் **நமது தலைவரவர்கள்** நல்லுடம்போடு, செல்வமெலாம் மல்க, பல் லாண்டு வாழ இறைவனை வணங்குவோமாக.

ம. பழவாராய்ச்சி செய்து ஒரு சாரார் நம்மொழியது பழ மாண்புதெரிக்க, வேறொரு சாரார் இப்பொழுதைய பல கலை களையும் நம்மொழியிலாக்கியும், புதுக்கலைகள் கண்டுபிடித்தும் மற்றும் பல வேறுமொழிகளிலுள்ள உயர் நூல்களை யெல்லாம் மொழிபெயர்த்தும், புது நூல்களாக்கியும் பணிசெய வின்றி-யமையாததாகும். இவ்வாறு செய்வதற்குச் செய்யுள் நடையை விட உரைநடையே பலர்க்கும் பயன்படுவதாதலால், நம்மவர் பலரும் உரைநடையைப் பெருக்கற்கான வழியில் நிற்றல் நல மாகும். இப்பொழுது பெரும்பான்மையனவாய் வழங்கும் பிற மொழி கலந்த தமிழ்நடை மொழிக்கு எவ்வளவும் நன்மை தருவ தல்லதாதலோடு, மொழியின் சிறப்பையும் அம்மொழி வழங்கு வாரதுஉள்ள உயர்வையும் மெல்லக்கெடுக்கும் கள்ளவழியுமாகும். உரைநடைக் கதை, வரலாறு முதலியன எழுதுபவர்கள் பிற மொழிச் சொற்களைக் கலந் தெழுதுவதற்குக் கூறும் சாக்கு என்னையெனின், அச்சொற்கள் மக்களது பேச்சு வழக்கிலிருந்து வருகின்றன வென்பதேயாம். இவ்வாறு பேச்சுவழக்கிலுள்ள சொற்களை நூல் வழக்கில் கொண்டு வருவோமானால் நம் முடைய பழஞ்சொற்கள் மறைந்துவிடுவனவாம். பொதுவான உரிமைச்சொற்கள் மறைந்து வழக்குச்சொற்கள் பெருகுமாயின் ஒரு மரபார் வழக்குச் சொல் மற்றொரு மரபாரது வழக்குச் சொல்லினும் பிறிதாயிருப்பதால் ஒருவரெழுதிய நூல் மற்றொரு வருக்குப் புலப்படாது இடர்ப்பட வேண்டியதாகும். இப்

பொழுதே சில சொற்கள் மறைந்துகொண்டு வருகின்றன. 'வட்டம்' என்றசொல் இப்பொழுது நம்மவரில் பெரும்பாலரிடத்தில் வழக்கொழிய, 'ரவுண்டு' (Round) என்ற ஆங்கிலச்சொல் பயின்றுவருகின்றது. நூல் வழக்கிலும் இது பயிலுமேல் 'வட்ட' மென்னும் சொல் அடியோடொழிந்து, இனிமேல்வரும் மொழியாராய்ச்சியாளர், 'தமிழர்கள் ◯ (வட்டம்) முதலியவற்றை உணராத அறிவிலிகளாயிருந்தார்கள்: ஆங்கிலர் வந்த பின்னரே தெரிந்து கொண்டாராகலின் 'ரவுண்டு' என்னும் ஆங்கிலச்சொல் வழங்குவதாயிற்று' என முடிவுகட்டி விடமாட்டார்களா? இவ்வாறு பலசொற்களும் மறையுமாயின் தமிழின் தனிநிலை என்னவாகும்? பெரிதும் பேச்சு வழக்கிலிருந்துவரும் பிறமொழிச் சிதைவான போலிச்சொற்களைக் கலந்து அத்தகைய மொழிகளை வழங்கி யறியாதவர்களிடம் உரையாடுவதினால் உண்டாகும் மிகப் பேரிடர்களை நோக்குங்கால் நகைப்புக்கிடமாகின்றது. என் நண்பர் ஒருவர் என் வீட்டிற்கு வந்து அங்கிருந்த நாற்காலியில் அமரச்சென்றபொழுது 'பேனா! பேனா! உட்காராதே' என்றேன். உடனே அவர் சினந்து 'வீடு தேடிவந்த என்னைப் பேயே நாயே என்று இகழ்வது உனக்குத்தகுமா?' என்று என்னை ஏசுவாராயினர். பேன் (Pen) என்னும் ஆங்கில மொழிச் சிதைவாய்த் தமிழில் பெரிதும் வழங்கிவரும் 'பேனா' என்னும் எழுதுகருவி நாற்காலியிலிருந்தமையால் அதில் உட்கார்ந்து விடுவாரென்று நான் எச்சரிக்க, அவர் பேய் நாய் என்று நான் ஏசியதாகக் கொண்டு சினங்கொண்டாரெனின், இத்தகையசொற்களை நூலிற் புகுத்திவிட்டால் எவ்வளவு கேடு விளையுமென்பதை எண்ணிப் பாருங்கள். இத்தகைய உரை.நடையைக் கொண்டுவர முயலும் மக்களை எவரென்று சொல்வேன்? இத்தகைய நடை பரவக் கூடாதென்று மறுப்பதிற் பொழுது போக்குவதைவிட, எளிய தனித்தமிழ் நடையில் யாவருக்கும் பயன்படக்கூடிய நூல்களை யியற்றிப் போலித் தமிழ்நடை தலையெடுக்கவொட்டாது தடுத்தலே தங்கள் கடனாகும். புதுக் கலைகளைத் தமிழிலாக்கப்புகுவோர், புதுக் கருத்துக்களையும், புதுக் கலைகளையும் உணர்த்தும் சில

சொற்கள் தமிழ் மொழியிலில்லாதபடியால் அக்கருத்துக்களையும் அக்கலைகளின் பெயர்களையும் தெரித்தற்பொருட்டுப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதின்றியமையாதென்றும் சொல்கின்றார்கள். புதுக்கருத்துக்களையும், கலைகளையுமுணர்த்தும் சொற்கள் சிலதமிழில் காணப்படாதது உண்மையேயெனினும், அதற்காகப் பிறமொழிச் சொற்களைப் புகுத்தவேண்டுமென்ற ஆணையொன்றுமில்லை. புதுக்கருத்து, கலை முதலியவற்றைத் தமிழில் எழுதும்பொழுது அவற்றைக் குறிக்கும் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைவிட அக்கலை, கருத்து, பொருள் முதலியவை எந்தெந்தத்திறம், தன்மை, வினைமுதலியவற்றைத் தனித்தோ கூட்டியோ உணர்த்துகின்றவோ அந்தந்தத்திறம் தன்மை வினை முதலியவற்றைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களைத் தனித்தேனும் கூட்டியேனும், அவற்றைக் குறிப்பதற்கு அமைப்பதே நலமுடையதாகும். Physiology என்னும் ஒரு கலைக்குத் தமிழ்ப் பெயர் கொடுக்கவேண்டின், ஆங்கிலச்சொல்லையே 'பிசியாலசி' என்றேனும், 'சரீர சாஸ்திரம்' என்னும் வடமொழிச் சொல்லாலேனும் உணர்த்துவதைவிட அக்கலை உடலைப்பற்றிய தென்பதுணர்ந்து அதற்கு **'உடல்நூல்'** அல்லது **'உடற்கலை'** என்ற தமிழ்ப் பெயராலேயே அழைப்பது பயனுள்ளதாகும். பிறமொழிப் பெயரைப் புகுத்துவோமாயின் நம் உள்ளத்திற்கு யாதொரு முயற்சியுமில்லாமலும், பொருள்தெரியாமலும், சொல்லியதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போலாகிவிடுவோம். குருட்டுவழியாகப் பிறர் கூற்றைப் பின்பற்றுவோமாயின் நம்முடைய தன்னோக்கம் (Originality) கெட்டுவிடுகின்றது. நம்மொழிச் சொற்களைக்கொண்டே அக்கலைகளின் பெயரை உணர்த்தும்பொழுது, அக்கலைகளின் பொருள் நமக்குத்தெரிந்து உள்ளத்தை உயர்த்தித் தன்னோக்கைப் பெருக்குகின்றது. இவ்வாறு, விளங்கிய உள்ளமும், பெருகிய தன்னோக்கமுமே நம்மை மற்ற வழிகளில் மேம்படச் செய்வனவாகும். அடிப்படையான மொழிப் பயிற்சியிலேயே தன்னோக்கம் குன்றுமாயின் பிறவழிகளில் நாம் உயர்வது எப்படி? முடிவாகக் கூறின், பிறமொழிச் சொற்களை எடுத்துக் கையாண்டு தமிழைப்பெருக்க முயல்பவர்கள், பிறர்

தேடிய பொருளைக் கொள்ளைகொண்டு பயன்பெற முயலும் கள்வர்களுக்கொப்பாவார்கள். தம்நாட்டு முயற்சியின்றிப் பிறர் பொருளை வெளவ எண்ணுவதினல் இருவர் உள்ளப்பாங்கும் ஒன்றே யாகின்றமையால் இவ்வாறு சொல்லத்துணிந்தேன். தமிழ்ச் சொற்களைக்கொண்டே தமிழைப்பெருக்க முயல்பவர்கள் தம் பொருளை முயற்சியினற் பெருக்கி மேல்நலம் அடையும் பேரறிஞர்களாவார்கள்.

அரும்பேறற் புலவீர் !

௧௯. மேற்குறித்த பலவழிகளிலும் நீவிர் முயலவேண்டும். முயற்சியினல் எல்லாம் கைகூடும். கல்லூரிகளிற் புலவர்களாயுள்ளவர்களுக்குப் பிறமொழிகளையும், கலைகளையும் கற்றுக்கொள்ளுவதற்கு ஏற்ற வழிகளிருப்பதால் அவர்களெல்லோரும் தமிழ் மொழியோடு தங்களாற் கூடியமட்டும் பிறமொழிகளையும், கலைகளையும் கற்று விரிந்தஅறிவுடையவர்களாக விளங்கவேண்டும். இனி, பற்பல இடங்களிலிருந்தும் வந்து இங்குக் குழுமியிருக்கும் உலகமுறை தெரிந்த பேரறிவாளர்களாகிய நீங்கள் நன்காய்ந்து நற்றுணைத் தலைவராகத் தேர்ந்து கொண்டிருக்கும், தமிழ்த் தொண்டிற் றலைசிறந்து விளங்குபவரும் நான் முன்னரே குறிப்பித்தபடி, பேராற்றல் வாய்ந்தவர்களுமாகிய திரு. மாணிக்க நாயக்கரவர்களது தலைமையில், தமிழ் தன் உரிமைமேம்பாடு பெறுதற்கும், தாங்கள் உயர்வடைதற்கும், ஆன வழிகளையும், கல்விக் கழகத்தாரும், பல்கலைக் கழகத்தாரும், தமிழ் நாட்டுப் பெருநிதிக்கிழவரும், பொதுமக்களும், பிறரும் செய்யவேண்டியவற்றையும் ஆய்ந்து பணிப்பீர்களாக.

புலவர்களே !

௨௰. அறிவு மிகப்பெற்ற நல்லாசிரியர்கள் எக்காலத்தவராயினும், அவர்களை நீவிர் வேண்டும்பொழுது பக்கத்தேயுடையவர்களாகிப் பயன்பெறும் உங்களிலும் உயர்வாயினர் யாவருள்ர்? தன்னேக்கத்தோடு உண்மையை விடாது உறுதியாக ஒத்து உழைப்பீர்களாயின் தமிழ் இப்பொழுதே உயர்நிலையடைந்து

விட்டது! தமிழ் மக்களும் உயர்வடைந்துவிட்டார்கள்! தந்நலம் பாராது தமிழ் நலம் நோக்கிவந்த தலைவரவர்களுக்கும், தங்களுக்கும் இன்னொருமுறை என் அன்பையும், நன்றியையும் செலுத்தி, எல்லோர்க்கும் எந்நலனும் இனிது பெருகுமாறு தமிழிறைவை இறைஞ்சுகின்றேன்.

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னுலுரை கால மிரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாடலைக் கொண்டு பணிகுவாம்.

வாழிய வேந்து! வாழிய தமிழகம்! வாழிய புலவோர்!
வாழி நந்தலைவர்!

உ

மூவர் தமிழ்.

(ஆராய்ச்சி)

மூவர் தமிழின் சிறப்பு.

கல்வியே மாந்தர்க்குக் கண்ணிணையா மென்றார் திருவள்ளுவனார். அது யாவரையும் உய்யுநெறியில் உறுவிப்பது. அத்தகைய கல்விதானும் சின்னாட் பல்பிணிச் சிறுமையையுடைய இப்பூவுலக வாழ்க்கைக்கு உரிய பொருட் செல்வத்தினை அளிக்கும் ஆற்றலையுடைய 'தொழிற்கல்வி' என்றும், பல்லூழிக்காலமும் கடந்து நித்தியமாய நிலைபேறுகி நிற்கக் கூடியதாய்ப் பரலோகப் பெருவாழ்விற்கு உரிய சமயக்கல்வி என்றும் இருபெரும் பகுப்புடைத்து. அவற்றுள் முந்தியதாம்தொழிற்கல்வி தச்சன்மகன் தச்சன், உழவன்மகன் உழவன் என்கின்ற இத்தகைய பிறப்புரிமைபெற்றுப் பெரும்பாலும் வாழையடி வாழையாக வருகிற முறைமைப்படி தொட்டிற் பழக்கத்திலேயே வந்துவிடக்கூடிய எளிமையுடைமைபானும்; பாத்தை நாடக்கூடிய பெரியோரால்

ஊட்டுவிப்பான் ஒருவன் உளனென்று கருதப்பட்டுத் தம் சிந்தையை அவ்வாவழிவிடாது அடக்குமுறைமையிற் சிறிதும்போற்றப்புடாத தொன்றுமாதலானும்; அஃதின்றித் தன் வயிற்றின் கொடுமையைத் தானே முயன்று தீர்த்துக்கொளல் வேண்டுமென்னுங் கொள்கையுடையோர் ஒருநாள் சிறிதுபகுதியே அத்தொழின் முயற்சியில் செலவழிக்கப் போதியதாக விருத்தலானும்; எஞ்சியபெரும்பகுதி உயிர்க்குறுதி செய்தலில் ஈடுபடற்குரித்தாதலானும் அஃது அத்துணைச் சிறப்புடைத் தொன்றாகாதென்பதை அறிவாளர் ஒப்புவர். ஆனல் சமயக் கல்வியோ தொழில் செய்யும் பொழுதும் செய்யாத காலத்தும் வாழ்விலும் தாழ்விலும் மனஉறுதியையும் மகிழ்ச்சியையுங் கொடுத்து, இப்பிறவியில் அறத்தாற்றின் வழியே செலுத்தி, இனிவரும் பிறவிகளில் பெருமையை அடையச் செய்வதொன்றாகலானும், இந்திரன் முதலிய இறையவர் நிலைகளுக்கும் இன்னும் முடிவிலின்பத் தழிவில் வீட்டிற்கும் வித்தாய் நிற்பதாலும் யாவராலும் பெரிதும் போற்றி விரும்பத் தகுவதொரு பொருளாகும்.

அத்தகைய பெருஞ் செல்வத்தை ஒருவன் பெறுவான் றொடங்கில் அவன்முன் வந்திருப்பது சமயநூற்களாகிய ஒரு பெருங்கடல். இவற்றைக் கரைகடந்தேறும் அருமையினைக் கண்ட **மணிவாசகனர்** 'கல்வியென்னும் பல்கடற்பிழைத்தும்' என்று உயிர்த்தடைகளை ஒழித்துக்கொண்டே செல்லும் ஓருயிர் தான் பிழைத்துச் செல்லற்குரிய பல இடையூறுகளில் இக்கல்வியையும் ஒன்றாகவைத்தார். ஆதலின் சிலபலநாட்டிற் பல பல மொழிகளுட் செறிந்து விளங்கும் மிகப்பலவாகிய சாத்திரங்களின் பெயரைக் கூறவே பன்னாளாகுமெனின் அவற்றை முழுதுங் கற்பான்றொடங்கல் மிக அருமையாகுமாதலின் அவற்றுட் சிறந்துவிளங்குவதுயாது என்று பாலுண்குருகிற் றெளிதல் மிகவும் இன்றியமையாதது.

அவ்வாறு ஆராயின் இந்நிலவுலகின் ஐந்துகண்டங்களுள் ஆசியாக்கண்டமே இக்காலத்து நிலவுகின்ற பல்பெருஞ் சமயங்களுக்கும் தாயகமாக விளங்குகின்றது. என்னை ? கிருகத்துவ

சமயத்திற்குப் பிறப்பிடமாகிய ஆசிபாமைனர் என்கிற தேயமும், மகம்மதிய மதத்திற்குப் பிறப்பிடமாகிய அரேபியா தேயமும், கன்பூசிய மதத்தை (Confucianism) உதவிய சினதேயமும், பாரசிகமதம் (Zorastianism) தலையெடுத்த பர்சியாதேயமும், சுமணமதம் தளர்ச்சியுடன் தள்ளாடிக்கொண்டிருப்பதும் புத்தமதம் பிறந்ததும் இந்துமதம் நின்று நிலவுவது முடைய இந்தியாதேயமும் ஆசியாக்கண்டத்தனவன்றே! ஆதலின் சமயங்களின் உட்கருத்தை நாடப்புகுவோர் இக்கண்டத்து நூற்களையே பற்றுக்கோடாகக்கொள்ளுதல் இன்றியமையாதது. இக்கண்டத்துள்ளும் மேற்குறித்த தேயங்களுள் உலகத்திலுள்ள மனிதர்களின் மூன்றிலொருபங்கினர் இந்தியாவின் சமயங்களாகிய இந்துசமயம் புத்த சமயம் என்னும் இரு பெருஞ் சமயங்களையே பின்பற்றுகின்றனரெனின் இந்தியாவின் பெருமைக்கு அளவுதானும் சொல்லுவதரிதாகும். மேற்குறித்த ஏழுமதங்களுள் மூன்று இந்தியாவில் வளர்ந்தனவென்பதும் பிற நாடுகள் நாகரிகம் அடைவதற்குப் பல்லூழி முன்னரேயே இந்தியாவில் உயர்ந்தசமயங்கள் ஏற்பட்டிருந்தனவென்பதும் இந்தியாவின் சமயங்கள் ஒவ்வொன்றும் உயிர்க்கு உறுதிபயப்பதாய் நிற்ப மற்றவை ஊறுசெய்வனவாயிருப்பதையும் நோக்க இந்தியாவின் சமயமுதிர்ச்சியும் பெருமையும் தெற்றெனத் தெளிவடையும். இம்மூன்று மதங்களுள்ளும் மிகச்சிறந்தது இந்துமதமேயென்பது மிகஉறுதியாய் யாவராலும் மறுத்தற்கரிதாய் விளக்கியுள்ள அருள்நந்திசிவாச்சாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியார் பரபக்கத்துட் காண்க. ஆங்கு அவர் புறச்சமயங்களெல்லாம் உலகெலாம்புடைத்தளித்தழித்துமறைத்தருளும் பரம்பொருளைக் கூறுதன வாதலின் உண்மைச்சமயமல்ல வென்பதையும் சுபக்கத்தில் உண்மைச்சமயம் சைவமேயாகுமென்பதையும் நாட்டுகின்றார். இன்னும் வீடுபேறு அடையும் வழியைப் பக்தி, கர்மம், யோகம், ஞானம் என்னும் நான்கு பாகுபாடுபடுத்தி அவரவரியல்பிற்கேற்ப ஒவ்வொன்றின் வழியாகப் பரம்பொருளைக் கூடும் நெறியினை விளக்கமாய்க் கற்பிக்கும் சமயம் வேறொன்று மிலது. இதனால் கிருத்துவ

மகம்மதிய சமயத்தினும் இந்துசமயம் சிறப்புறுதலை நோக்குக. ஆதலின் சைவத்தை உச்சியாக்கொண்ட இந்துசமயமே ஆராய்ந்தறிந்து மேற்கொள்வதற்குப் போந்ததொன்றென்பது பெற்ரும்.

இஃது எம்போன்ற பலருக்கும் ஒத்த துணிபேனும் இந்து சமயத்தினரில் செம்பாகமாக விளங்கும் வைணவர்கள் இவற்றை முற்றிலும் ஒப்பாது தங்கள்சமயமே தலைசிறந்ததொன்றெனக் கொள்ளுவர். எனினும் அவர்கள் சைவத்தைப்போற்ருதொழிவதுமில்லை. அங்ஙனமே சைவர்களும் வைணவத்தை ஒப்பித் 'திருமாலுக் கடிமைசெய்' என்பன முதலாகிய பலதிருமொழிகளாலும் தங்கள் சைவஆலயங்களில் திருமால் இலக்குமி முதலிய பல பிரதிட்டைகளிலும் வணங்கி வருகின்றனர். ஆனல் இவர்கள் இருவரும் தங்கள்தங்கள் தெய்வங்களாகிய திருமால் சிவம் இவர்களையே பரம்பொருளெனக் கொள்ளுகின்றனர். எனினும் இவ்விருபெருங்கடவுளரும் இரவும் பகலுஞ் சத்தியுஞ்சிவமும் போன்று ஒருபொருளின் இருபக்கமாகக் காணப்படுதலால் இவ்விருபெரும்பகுப்பினரும் மாறுபட்டவரல்லர். ஆதலின் வெறுப்பின்றி நோக்குமிடத்து வைணவநூற்களும் சைவநூற்களும் உடன்பிறப்புரிமையுடையனவேயாகும். அவற்றுள் சைவநூற்களுட் சிறந்தனவாகிய தேவார திருவாசகங்களுக்கொப்ப வைணவநூற்களுட்சிறந்த நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தையும் தமிழ்நூற்களுட்சிறந்தவெனத்தேர்ந்து அவற்றையும் பின்னர் ஆராய்வாம்.

இச்சமயத்தின் விரிவை இந்தியாவிலுள்ள பல்பெரும்மொழிகள் விளக்கினும் பழமையும் சிறப்பும் உற்று நிற்பன ஆரியம்தமிழென்னு மிருமொழிகளுமேயாகும். இவை யிருமொழியுமே தெய்வச்செயல்கள் பெற்றுச் சிறப்பு நூற்கள்யாவையும் தம்முள் அடக்கிவைத்திருப்பன. இவை இரண்டுள்ளும் தென்மொழியே சிறப்பும் எளிதுமான மொழியென்பது யாவரும் உணர்ந்த பொருள். வடமொழி உயிரற்றதாய் ஒலிகளை எளிதிற் பயிலக் கூடாததாய் பிறப்புரிமையால் மேம்பட்டாரெனும் ஒருவகையினர்க்கே மிக உரித்தானதாய் மற்றைய மக்கட்குச்சிறந்தநூற்

களைப் பயிலுந்திறனை அருளாததாய் உலகவழக்கொழிந்ததா யுள்ளதொருமொழி. ஆனால் தமிழோ என்றும் இளையதாய் அழகிதாய் மெய்யெழுத்துக்களை முதலிற் பொருந்தாத உயிர் பெற்ற மொழிகளையுடையதாய் யாவரும் எளிதிற் கற்கக்கூடிய தாய், ஓசைகள்யாவும் எளிதானவாய் எந்நாளும் யாவருக்கும் உரித்தானதாக அதன்வழக்குகள் இன்றும் உலகில் நின்றுநிலவ ஒப்புயர்வற்றதொரு மொழியாகும். அன்றியும் தமிழ்நூற்களே சமயத்தேர்ச்சிக்கும் இறைவனை யெய்துதற்கும் மேம்பட்டன வென்று உணர்த்துவான் வேண்டிக், கண்ணுதற்கடவுளே கழக மோடமர்ந்தும், 'கொங்கு தேர்வாழ்க்கை' 'திருமலிபுரிசை' முத லிய பலசெய்யுட்களையும், இறையனாரகப்பொருள் முதலிய நூற் களையு மியற்றியும் 'பித்தாபிறைசூடி' 'தில்லைவா ழந்தணர்த மடி யார்க்கு மடியேன்' 'உலகெலாம்' முதலிய பல பாடல்களின் அடியெடுத்துக்கொடுத்துப்பாடுவித்தும் பெருமைப்படுத்தியுள்ள பெருமொழிக்கு ஒரு மொழியும் நிகராமோ ?

அம்மொழியின் பெருமையை யுணர்ந்து சமயநூலாராய்ச்சி யிற் புகும் ஒருஅறிவாளன் கண்டுதிகைக்க நிற்பன பற்பலநூற் கள். அவற்றுள் எவற்றைத்தெரிந்தெடுப்பதென்னுங் கவலையு டையானுக்கு அறிவுகொளுத்துவோர் இருபெரும்புலவர். அவ ருள் அறிவே பழுத்துவிளங்கும் ஔவையா ரொருவர்; அன் னார் கூற்று:—

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

மற்றையோர் பலசாத்திரங்களையும் ஆராய்ந்து தாமும் நூற்கள் பலஇயற்றி ஒல்காப்பெரும்புகழ் மெய்கண்டதேவரால் **அநுபூதி பெற்ற** சந்தனாசாரியருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியார்.

அன்னோர் மொழி:—

வள்ளுவர்நூ லன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகைசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

இவற்றுள் ஔவையார் ஏழு நூற்களையும் உமாபதிசிவம் ஆறு நூற்களையுந் தெரிந்தெடுத்திருக்கின்றனர். இவை யாவற்றையும் ஓதுதற்குச் சிந்தையுஞ் செயலும் இல்லோன் ஆராயத் தகுவதொன்றுண்டு. இப்பெரியார் இருவரும் தம்முளொத்துக் கூறுவன மூன்று நூற்கள். அவை வள்ளுவர் நூலாகிய தேவர் குறள், அன்பர்மொழியாகிய மூவர்தமிழ், திருவாசகம் ஆகியன. இம்மூன்றையும் ஓதுதல் ஒருவாறெளிதேனும் இதனுள்ளுஞ் சிறந்ததொரு நூலைத் தெரிந்து அதன்வயத்தனாதல் சிறந்ததொரு கொள்கையாம். 'ஒருவனைப்பற்றி ஓரகத்திரு' என்னும் மொழி ஒருவனைச் செய்யப்பட்ட நூலிற்கும் உரித்தாதல் இயற்கையே. அன்றியும் ஒவ்வொருவருக்கும் ஓர் நூலிடத்தே உரிமைத்தெய்வம் போன்று சிறந்ததொருபற்றும் மற்றைய நூல்களிடத்து அச்சிறப்பு நூலைச்சார்ந்த அத்துணைப்பற்றும் எழுதல் இயல்பே. ஆதலின் இவற்றுள்சிறந்ததாய்ப் பெரிதும் பற்றுவைக்கத்தகுந்த நூல் யாதென ஆராய்வோம்.

இம்மூன்று நூற்களையும் ஆராயுமிடத்து அவற்றை இரு பகுப்பாகப் பிரிப்பதியல்பே. தேவாரமுந் திருவாசகமும் ஒரு தன்மையன. அவை பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பரமபதியிடை மனத்தைப் பதிவிப்பன. ஆனால் வள்ளுவர் நூலோ அவ்வாறின்றித் தக்க இன்ன தகாதன இன்னவென்று யாவரும் ஒப்ப நாட உரைத்ததொரு நூலேயாகும். இஃதொருகூறே எம் மதத்தவரும் சம்மதத்துடன் போற்றப்படுவது. இவற்றுள் மனிதர்க்கு உறுதிபயப்பன யாவும் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய பல அழகுகளுடன் அமைந்துகிடக்கின்றன. இவற்றின் பெருமையை எடுத்துக் கூறப்புகின் இறந்தாரை

எண்ணிக்கொண்டற்று. 'அறம்பொரு ளின்பம்வீ டடைதல் நூற் பயனே' என்னும் ஆன்றோர்வாக்கிற்கிலக்கியமாக வமைந் துளது இஃதொன்றன்றி வேறெம்மொழியிலும் ஒருநூலும் இல தென்றே பலர் கூறுவர். * இவற்றையுணர்ந்த ஔவை, உமாபதி சிவமென்னும் இருபெரும் பெரியாரும் தம்முளொத்து இதை முற்கூறியுள்ளார். எனவே யாவரும் இந்நூலையே தலைசிறந்த தாகக் கொள்ளுவர். எனினும் மற்றய நூற்களையும் ஆராய்வோம்.

'அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே' யெனி னும் அவற்றை நூற்கள் இருவேறு வகையாக அடைவிக்கின்றன. அவற்றுள் திருக்குறள்போன்ற நீதிநூற்கள் இன்னின்ன செய் யத்தகுவன இன்னின்ன தகாதன வென்றும், இத்தகைய செய லைச் செய்யின் இதுவிளையும் இது எய்தாதென விதிவிலக்குக் களால் தெளிவித்தும், இவற்றைக் கசடறக்கல், கற்றபின் அதற் குத்தக நில் என்று சிறப்பில்லார்க்கு இயலாத இரு பெருங் கட் டளையிட்டும், முன்பின் சென்றறியாத வேற்றூருக்குச் செல்வா னொருவனுக்கு வழியிலுள்ள இடையீடுகள்தோறும் இதுவழி இதுவழியன்று எனத்தெளிவித்து வழிநடையுட் படும் பசி தாகம் சோர்வு பயம் முதலியவற்றை நீக்காதுநிற்கும் கைகாட்டிபோன் றும் நிற்பனவாம். அவை பொறிவாயிலைந்தவிக்கும் பேராற்றலும் பேரறிவுமுடைய தக்கார்க்கு உரித்தேயன்றி மற்று மனம் ஒருவழி, செயலொருவழியாக நிற்கும் சிற்றறிவும் சிறுதொழிலு முடைய உயிர்க்கோடிகளுக்குச் சிறிதே பயன்தருவனவாகும். ஆனால் மற்றொருவகையான தேவார திருவாசகங்கள் போன்ற நூற்களோவெனின் ஓதும்பொழுதே கருங்கன்மனமுங் கரைந் துகக், கண்கள் தொடுமணற்கேணியிற் சுரந்துநீர்பாய, மெய்ம் மயிர்பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி அன்பராக்குவதன்றி மேற் கூறிய உறுதிப்பொருள் நான்கினையும் அடைவிப்பனவுமாகும். திருஞானசம்பந்தப்பெருமான் அருளிய நல்லூர்ப்பெருமணப்

* தேவார திருவாசகங்களும் அறம் பொருளின்பம் வீட்டையடை விக்கின்றன வென்பதைப் பின்னே காட்டுதும்.

பதிகத்தின் திருக்கடைக்காப்பில் 'உறும்பொருளாற் சொன்ன வொண்டமிழ்வல்லார்க் கரும்பழி பாவமவலமிலரே' யென்றும், 'செங்கலங்கழனிப்பழனத்தயலே' யெனும்தொடக்கத்துத் திருப்பூந்தராய்ப்பண்ணில் 'பூந்தராய்ப் பகவனுருரைப் பரவு சொன் மாலைபத்தும் வல்லாரகல்வர் தீவினை நல்வினையோடுடனவரே என்றும், அல்லவை தேய **அறம்** பெருக்கும் ஒரு நெறியாகிய வழியையும், அன்னார் திருவீழிமிழலையுளோதிய 'தடநிலவியமலை நிறுவியோர்' என்றற் றொடக்கப் பதிகத்தில் பயில்பவரொழில் மலர்மகள் கலைமகள்சமயமகள் இனமலி புகழ்மக ளிசைதர இருநிலனிடை யினிதமர்வரே, என்று **பொருள் இன்பத்திற்** சிறந்ததொரு பேற்றினையும், அன்னார் திருக்குரங்கணின்முட்டத்துட் பாடியருளிய 'விழுநீர் மழுவாட்படை' என்றற் றொடக்கத்த 'தமிழ்மாலை செவிக்கினிதாக-வல்லார்க்கெளிதாம் பிறவா வகை வீடே' என்று யாதினும் அரிதாம் **வீட்டின்பத்தை** எளிதிற் பயக்கத்தக்க தொருவழியையும் அருளிச் செய்திருக்கின்றனர். இது சிந்தைக்கும் எட்டாத தூரத்திலுள்ள ஓரிடத்திற்கு வழிதெரியாது, தெரிந்தும் போகும் ஆற்றலில்லாது, போக முயன்றும் பல இடையூறுகளால் வருந்துவானொருவனை எளிதில் மிக்கஇன்பத்தோடு அடைவிக்கும் புட்பகவிமானம் போன்றதொரு நூலேயன்றோ! ஆதலின் இஃதொன்றே நிறைமொழியாகிய மறைமொழியும் மனத்தை ஒருவழிப்படுத்தும் மந்திரமொழியுமா மென்பது பெற்றாம். *

இன்னும் பொதுவகையாற் சிறப்புற்றுவிளங்குவது திருக்குறளொன்றே யெனினும் சிறப்புவகையாற்றன்னிகரற்றது தேவாரதிருவாசகங்களேயாகும். எவ்வாறெனின் வீட்டுநெறியை அடைந்துய்வதற்குரியவழி பற்றறுதலென்றார் அப்பற்றைவிடப் பற்றுக பற்றற்றான் றாளினை என்றாரேயன்றித் திருவள்ளுவர் அப்பற்றற்றான் றாளினை விரித்தாரில்லை: அதனை யடையக்

* இதன் விரிவைத் 'தமிழ்மறை' என்னும் பாகத்தில் விரித்துரைப்பாம்.

கூடிய கருவிகளை உதவினரில்லை. ஆனால் தேவார திருவாசக முதல்வர்களோவெனின், அகளமாயிருந்து சகளமாய்விளங்கியும் தலைமைக் குணங்களோடும் செயலோடும் பொருந்தியிருக்கிற பரம்பொருளை நேரேவிளித்தும் கலந்தும்உறவாடியும் பலருக்கும் பயன்படச் செய்ததன்றித் தம்பின்னோரும் உய்யுமாறு அதன் அருளைப் பெறும் வழியும், அதற்குப் புறக் கருவிகளாகிய திருநீறு அக்கமணியின் பெருமையும், அகக்கருவியாகிய ஐந் தெழுத்தின் பயனும், அப்பொருள் எங்கும் நிறைந்து பரந்து கிடப்பினும்—பால் பசுவினுடலெங்கும் வியாபிக்கினும் அது நமக் குக் கிடைப்பது முலைக்காம்பின் வழியேயாதல்போல்—அப்பரம் பொருளின் அருட்சத்தி நிறைந்த திருக்கோயில்களின்னவெனக் குறித்தும், அது அருவாயிருப்பினும் எம்மனோருய்யுமாறு அருட்டிருமேனி கொண்ட உருவின் இலக்கணமின்னதென வரையறுத்தும், அவ்வுருவின் திருவடி நீழல் இத்தகையதெனச் சிறப்பித்தும், அவ்வடியைச் சேர்வதற்குரிய தொழிலிற் சிறந்தது அருச்சனையே யென்று அதைப்போற்றிசெய்யும் வழியை உணர் வித்தும், அவ்வாறு உணர்ந்து நீத்தாரின் பெருமைகளையும், அவர் தம்மை ஒறுத்தல் இவ்வளவுதூரம் எட்டுமென்பதையும், அவர் பெற்றுள்ள சத்தி இன்பத்தின் அளவையும், அவருக்கே தொண்டுசெய்தலினாலாகிய பயனையும் விவரித்து அவற்றை மிக எளிதாகஅடையும் வழியையும் அருளியிருக்கின்றனர். ஆதலின் நூற்பயனாகிய நாற்பொருளை அடைதற்கும் அவற்றுட் சிறந்த வீட்டின்பத்தை எய்துதற் கோரொப்பற்ற வழியாகத் தெரிந் தெடுக்கப்பட்ட சமய நன்னெறிக்கும் திருக்குறளினுஞ் சிறந்த தொருநூல் தேவார திருவாசகங்களென்பது அறியக்கிடக் கின்றது.

இனி இவை இரண்டுள்ளும் எது மேம்பட்டதென ஆரா யப் புகுகின்றேம். * நூற்சத்தியிலும் நுதலிய பொருளினும்

---

* சில சைவர் சிவபெருமானையே பொருளாகஉடைய நூற்கள் யாவும் சமமேயென்றும் உயர்வு தாழ்வுகூறல் பாதகமென்றும் அதற்

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் விரகிலும், அகம், புறம் என்னும் பொருள் விரிப்பிலும் அன்பினைந்திணை என்னும் அகனில வரைப்பை ஐவகைப் பாகுபடுத்தி அதற்கேற்ற உரிப் பொருள், கருப்பொருளுடன் அவற்றை யழகுபட வுரைப் பதிலும் இன்னோரன்ன பல்வேறு வகையிலும் பரந்து நோக் கினும் திருவாசகம் தேவாரத்திற் கிணையாகாதென்பது தெற் றெனத் தெளிவடைகின்றது.

முதலாவதாக நூற்சக்தியை நோக்குமிடத்து மணிவாசகப் பெருமான் எம்பிரானின் திருவருள்பெற்றதன் பயனுக் நரியைப் பரியாக்கியும், பிட்டுக்கு மண்சுமப்பித்தும், உலக முழுவதும் பிரம்படி படுவித்தும், பரமனேடெழுதக் கோவைபாடியும் இன் னோரன்ன பல திருவிளையாடல்களையும் செய்வித்தார். ஆனல்

காதாரமாக 'ஒருவாசகமென்றே யுணர்' என்ற ஔவையார் வாக்கை யுங் கூறுவர். எனினும்,

வேதம் பசுவதன்பால் மெய்யாகமம் நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்.

எனும் பாவே அதற்குத்தக்க மறுப்பாம். மேற்கண்ட பாவில் நால்வ ரோதுந் தமிழெனவும், ஒரு வாசகமென்றே யுணரெனவும் தேவார திரு வாசகங்களைச் சமப்படுத்திக்கூறியது அவற்றுட்டடங்கிய பத்திஞானச் சுவையைப் பொதுப்பட நோக்கியென அறிக. அன்றித் தனித்தனிச் சீர் தூக்கின் தேவாரமே தலைசிறந்ததென்பதைப் பின்னர்க் காட்டுதும்.

நிற்க, கற்புடை மகளிர்க்கு அரசனிலும் கணவனே மேம்பட்டவ னென்பதுபற்றி அவ்வவர்கள் தங்கள் தங்கள் இட்டதெய்வத்தையே பரம்பொருளென்றும் அதற்குரிய நூல்களில் தன் கருத்துக்கிசைந்த நூலொன்றுமே தலைசிறந்ததெனவுங் கொள்ளுதல் இயல்பே. அவ்வாறு கொள்ளற்குத் தங்கள் மனவிருப்பே காரணமென்று கூறுதலல்லது வேறு காரணங்கூறல் பொருத்த முடைத்தன்று. ஆனல் தனக்கேற்ற நாயகனைச் சுயம்வரத்தால் தேறுவான் தொடங்கிய ஓர் கன்னி போல் யாவற்றையுஞ் சீர்தூக்கி யாதுசிறந்ததெனக் கொள்ளலேவேண்டும்.

இவற்றுள் ஊமைப் பெண்ணைப் பேசுவித்ததை யொழிய மற்றெல்லாம் அன்னார் பாடிய நாவின் வழியாலன்றி இறைவன் திருவருட் சக்தியை இடையறாச் சிந்தனையாலும் பேருணர்வினாலும் எழுப்பியதாலேயாம். ஆனால் மற்றை மூவரோவெனின் அவர்கள் இயற்றிய எல்லா அற்புதச் செயல்களையும் தங்கள் பதிக மகிமையாலேயே திருவருட் சக்தியை எழுப்பி இயற்றினர். இதனாலன்றோ

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்றார் திருவிளையாடற் புராணமியற்றிய பரஞ்சோதியார். இவர் கூறிய 'தண்டமிழ்ச் சொல்' தேவாரத்திற்கே பொருத்தமாவதன்றித் திருவாசகத்திற்கு அத்துணைப் பொருத்தமாகாமை காண்க.

இதனால் திருவருட் சக்தியை எழுப்பும்சக்தி நிறைந்து ததும்புவது திருவாசகத்தினும் தேவாரமேயாமென்பது பெற்றாம். நாற்பொருளாகிய நூற்பயனை எளிதில் அடைவிக்கும் சக்தியிலும் சிறந்தது தேவாரமே யென்பதற்குச் சம்பந்தர் சுந்தரர் தாம் இயற்றிய பதிகங்கள் ஒவ்வொன்றின் திருக்கடைக் காப்பினும் இப்பதிகத்தை ஓதும்பயன் இதுவென விதந்தும் பல்வேறிடங்களில் ஆணையிட்டுங் கூறவும் அப்பர்சுவாமிகள் மூன்று பதிகங்களிற் பயன்கூறவும்* மணிவாசகப் பெருமான் தான்பாடியருளிய சிவபுராணத்தில்மட்டும் பயன்கூறி ‡ வேறொன்றினுங் கூறுதொழிவதுமே சான்றாகும். இன்னும் மூவரும் பன்னூறு சிவத்தலங்களுட்சென்று அவற்றைப் பாடற் றலம் என்னும்

* 'சொற்றுணைவேதியன்' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தினும், பாவநாசத்திருப்பதிகத்தினும், திருவிராமேச்சுரத்துத் திருநேரிசையினு மென்றறிக.

‡ "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவர், செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப், பல்லோரு மேத்தப்பணிந்து."

பெருமையும் சக்தியும் அடையச் செய்வித்துளார். ஆனால் மணிவாசகனார் பாடல்களால் * ஏழுதலங்கள்தாம் பெருமையும் சக்தியும் உறுவன. ‡ இன்னோரன்ன பல்வேறு காரணங்களினால் திருவாசகத்தினும் தேவாரமே திருவருட் சக்தியிற் றேக்குறும் நூலென்பது பெற்றாம். $

இரண்டாவதாக நுதலிய பொருளை ஆராயின் இருபெருநூலினும் பரம்பொருளையே பொருளெனக்கொண்டு கூறினும் திருவாசகத்தில் அதிகமாக நீத்தல் விண்ணப்பம், செத்திலாப் பத்து, திருப்புலம்பல், வாழாப்பத்து, குழைத்தபத்து, எசறவு, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, என்பனவாகிய செய்திகளைக் கூறும் பதிகங்களன்றி மற்றைய பதிகங்களிலும் பரிதவித்து அவர் தம்மை இழித்துத்தாம் இந்திரியவபமயங்கி இறப்பதற்கே காரணமாயிருத்தலையும், தம்காயம் சிவபெருமான் திருக்கோயிலை யணுகி ஆடுகின்றதிலை யென்றும், தம்மனம் கூத்துடையான் கழற்கன்புடைத்தில்லை யென்றும், தம்நா என்புருகிப்பாடுகின்றதிலதென்றும், தம் கை பணிகிலதென்றும் இவ்வாறு நாயிற் கடைப்பட்ட நாயேன் இக்காயமாயத்தைக் கழிப்பதற்குச்செய்வ

---

* திருப்பெருந்துறை, தில்லை, உத்தரகோசமங்கை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருத்தோணிபுரம், திருவாரூர்.

‡ இச்சக்தியடைய எம்பெருமானே இச்சையுற்றனரென்பதற்குச் சுந்தரமூர்த்திநாயனார் கூடலையாற்றூர் செல்லாது திருமுதுகுன்றஞ் செல்லும்வழியினைச்செல்வார்முன் வேதியராகி வழிகாட்டுவார்போல் 'கூடலையாற்றூ ரேறச் சென்றவ்வழிதானென்று செல்வழித் துணையாய்ச் சென்று" முதுகுன்றைக் காட்டாது கூடலையாற்றூரைப் பாடச் செய்வித்த திருவிளையாடலைப் பெரியபுராணம் ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணத்துள் 100—104-ம் பாடல்களிற் காண்க.

$ பரமனேயெழுதக் கோவைபாடிய திருவிளையாடலைக் குறித்துத் தேவாரத்திற்கு இன்னோரன்னசெயல் பொருந்தாமையால் திருவாசகம் மேம்பட்டதென்று சொல்லுவர் சிலர். அன்னார் பரமன் எழுதியது கோவையேயன்றி வாசகமன்றென்பதையும் பரமன் அடியார்க்கு உண்டி முதலிய இரந்துமுதவும் பான்மையால் அன்னார்க்கு எழுதுங் கணக்காயரில்லாததால் எழுதினரென்பதையும் உணர்வாராக.

தொன்று மறியேனே யென்றும் திகைத்து இறைவனை எத்துகின்றார். 10 இவையாவும் உண்மைப் பொருளறிந்தும் அனுபவ ஞானம் பெரிதும் பழுத்தும் இடையிடையே சிறிது முரண்படு சிந்தையுடையா ரொருவர் அவ்வப்போது இரங்கித் திருந்தும் பொழுதுண்டாம் *உள்ளநிகழ்ச்சியாம். ஆனால் தேவாரத்தில் விதந்துகூறிய பொருள்களோவெனின்,

> " குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
> அரனுருவு மென்றலைமே லாக்குந்—திருவடியுஞ்
> சிட்டான வர்ச்சனையுந் தொண்டு "

மாகிய எட்டுமாம். இவைகளைத் தனித்துக்கூறிய பதிகங்களிலன்றி மற்றைய ஒவ்வொரு தலத்தையே சிறப்பித்துப்பாடிய பதிகங்களிலும், திருநீலகண்டப் பதிகம், கோளறுபதிகம், திருப்பாசுரம், திருஅங்கமாலை, தசபுராணம், பாபநாசத்திருப்பதிகம், நினைந்ததிருநேரிசை, ஆருயிர்த்திருவிருத்தம், பசுபதித்திருவிருத்தம்காலபாராயணம்,மறக்கிற்பனேயென்னுந்திருக்குறுந்தொகை, தொழற்பாலதே என்னுந் திருக்குறுந்தொகை, இலிங்கபுராணம் சித்தத்தொகை, மனத்தொகை, உள்ளம், பாவநாசம், ஆதிபுராணம், அடையாளத்திருத்தாண்டகம், காப்புத்திருத்தாண்டகம், திருவினாத்திருத்தாண்டகம், திருமறுமாற்றத்திருத்தாண்டகம், நமக்கடிகளாகிய அடிகள், நம்பியென்ற திருப்பதிகம் என்கின்ற ஒருதலத்தையும் பற்றாது தனித்து நிற்கும் பொதுப்பதிகங்களிலுங்காணலாம். இவையாவும் ' மாசில்வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கை

* இதனாலன்றோ ஒருவாசகத்திலுமில்லா உருக்கம் திருவாசகத்திலமைந்துகிடக்கின்றது. இதனால் சிலர் திருவாசகத்திற்குத் தேவாரத்தினும் மேலான பெருமை கூறுவர். அன்னோர் தேவாரம் உருக்கத்தில் ஏறத்தாழசமத்துவமேயுடைய நூலென்பதையும், மனஉருக்கம் மாத்திரம் ஒருநூலின் பெருமைக்குக் காரணமாகாதென்பதையும் அவ்வுருக்கத்தை இன்னும் விசேட பலத்துடன் கைத்தொண்டினாலும், அடியார் கூட்டத்தாலும், ஆராதனை முதலிய பல்லாற்றாலும் பெறலாமென்பதையும் உணர்வாராக.

யும், போன்றதாம் ஈசனெந்தை இணையடி நிழலையே பெருமிதத்துடனும் களிப்புடனும் விரித்துரைக்கின்றவாதலின் அவை எம்பிரானை அடைந்து மனமாசுமுற்றும் அல்லதுபெரும் பான்மையு* மற்றுச் சிறுபான்மை மன்னுயிரின் நலங்கருதி, நற்காரியங்களைத் தாங்கிப் பிறருக்குப் பயனுறுமாறு மிகச்சக்தியுடனும் திடத்துடனும் பாடுகின்ற பேராசிரியரின் பாக்களாம். எனவே இரங்கற்றிணையில் தன் சிறுமையையும் அவன்பெருமையையும் உடனுரைக்கின்ற பாடல்களினும் தானென்பதற்றுப் பெருமகிழ்வுடன் அவன் பெருமையையே பெரிதும் பாராட்டும் தேவாரமே சிறந்ததென்பது பெற்றும். ‡

இனி இயற்றமிழின் பாகுபாடுகளாகிய ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரயமென்னும் ஐந்திலும் இசைவன்மையிலும், நாடகத்தமிழை நவில்வதிலும், அகப்பொருட்டுறை, புறப்பொருட்டுறை, ஐந்திணையின் வருணனை இவைகளைக்கையாளுவதி

---

*இவண் 'முற்று'மென்றது ஒன்றிற்கு மஞ்சாத சிங்கமாய்ப் பிராரப்தத்தையும் தனக்கேயன்றித் தன்னடியடைந்தோர்க்கும் நீக்கும்பேராற்றலுடன் பொருந்திய சம்பந்தப்பெருமானையும், பெரும்பான்மையுமென்றது மற்றிருவரையுங் குறிக்கும் எனஅறிக.

‡ இவண் சிலபலவிடங்களில் அகத்தியனார் திரட்டியருளிய எட்டு விடயங்களும் திருவாசகத்தில் விரவிநிற்பதையும், இன்னும் சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, சென்னிப்பத்து. திருவார்த்தை பண்டாய நான்மறையாகிய பதிகங்களில் எம்பெருமானின் யாவர்க்குமேலாம் அளவிலாச்சீர்களே பயில்வதையும், சம்பந்தர் நீங்கலாக மற்றிருவரும் சிலசமயங்களில் ஐம்பொறி சிறிது அவாவழி நிற்கப் புகுவதைக்கண்டஞ்சி யிரங்கியதையும் மறந்தோமில்லை. ஆனால் நூற்களை ஒப்பநோக்குமிடத்து சிறுபான்மைத்தாகிய மாறுதல்களைத் தள்ளி, பெரும்பான்மையாக விளங்கும் பொதுக்குணத்தையே கொள்ளல் பொருத்தமுடைத்தென்பதுபற்றி இவ்வாறு மொழிந்தோம்.

னும் மூவர் முதலிகள் தேவாரத்துட் சிறந்துவிளங்கியுள்ளாரென் பதையும் திருவாசகத்துள் அவை மிகச்சுருங்கியும் பற்பல காண் பரிதாயுமிருக்கின்றன வென்பதையும் இவ்வாறு தலைப்பின்கீழ்ப் பின்னர்க் காட்டுதும்.

இவற்றால் யாமறிவதென்னெனின் தொழிற்கல்வி சமயக் கல்வி என்னும் இருவகைக்கல்வியுட் சமயக்கல்வியே உயர்ந்த தென்பதும்,அதையடையச் சிறந்ததொருநூலைத்தெரிதல் இன்றி யமையாதென்பதும்,அந்நூல் ஆசியாக்கண்டத்துஇந்தியாதேயத் தே சிறந்துவிளங்கும் சைவசமயப் பாங்காயிருத்தலே பொருத்த முடைத்தென்பதும், அச்சமயத்தை விளக்கும் மொழிகளுள் தமிழே தலைசிறந்ததென்பதும், அம்மொழி நூற்களுட் சிறந்து விளங்குவது திருக்குறள் தேவாரம் திருவாசகமென்பதும், அவற்றுள்திருக்குறளினும் மற்றைய இருநூற்களும் பொதுவகை யால் மேம்பட்டதன்றிச் சிறப்புவகையால் இணையற்றதென்பதும், எஞ்சிய இரண்டனுள்ளும் எண்வகையில் தேவாரமே உயர்வெய் திய தென்பதும், எனவே நூற்களுட் டலைமை தேவாரத்திற்கே எவ்வகையாலும் உரித்தென்பதுமாம். *

(தொடரும்.)

திருவாளர், வேலாயுதம்பிள்ளையவர்கள்,
B. A., L. T.,
உரத்தநாடு உயர்தரப் பள்ளிக்கூடம்.

---

* இக்கருத்து 'வேதம் பசு' வென்றற் றொடக்கத்து முற்கூறிய பாட லில் அழகுடன் அமைந்துகிடப்பதை நோக்குக. ஆங்குப் போதத்தை நெய்யின் சுவையாகக்கொளினும் நெய்யின்றிச் சுவையின்றாதலால் போ தத்திற்கும் தேவாரமே இன்றியமையாமை காண்க. அன்றியும் திருக் குறள் பொதுவகையால் ஞானநூலாதல்போல் போதம் சைவத்திற்குச் சிறப்புவகையால் ஞானநூலாதல்பற்றித் திருக்குறளினும் தேவாரமே சிறந்ததென்பதற்குரிய காரணங்கள் போதத்தினும் தேவாரமே சிறந்த தென்பதற்கும் உரித்தாதலை உற்று நோக்குக.

வரலாற்று மொழிகள்.

அய்யர்.

(முற்றொடர்ச்சி.)

தம் வரலாற்றைத் தாமே உணர்த்தவல்ல மொழிகளில் அய்யர் என்னும் மொழியும் ஒன்றாகும். நம் தமிழ்நாட்டின் கண்ணுள்ள அந்தணர் பலரும் தம் குடிப்பெயராகவேற்றுத் தம் இயற்பெயரோடு கூட்டியுரைக்கும் அய்யர் என்னும் சொல் தமிழ்ச் சொல்லா? ஆரியச் சொல்லா? தமிழ்ச் சொல்லாயின் எதனடியாகப் பிறந்தது? இவைகளை முதற்கண் சிறிது ஆராய் வாம். ஒரு சாரார் கூறுவது:- ஆரிய வகுப்பைச் சேர்ந்த அந் தணர் தம்பெயர் ஆரியச் சொல்லாகவே யிருத்தல் வேண்டும்; ஆரியவென்னும் பதமே அய்யரெனத் தமிழிற்றிரிந்து வழங்கிய தென்பர். அங்ஙனமாயின் அச்சொல் அவ்வாறே பண்டை நாற்கண்ணுவது வடமொழியாளர்க்கு முற்காலம் தொடங்கி உறைவிடமாகும் வடநாட்டுவழக்கின்கண்ணுவது அந்தணர் தம் பெயரோடுகூட்டி இப்பொருளுடன் வழங்கப் பெறுகின்றதா வென்று ஆராயப்புகின் எதிர்மறைவிடையே பெறப்படுகின்றது. பின்னும் "ஆரிய" எனும் வடமொழிச்சொல் எத்தாதுவின்கண் ணின்று எழுந்தது? இப்பொழுது வழங்கும்பொருட்கும் அத் தாதுவிற்கும் இயைபு என்ன? என்ற இன்னோரன்ன ஆராய்ச்சி வடமொழியாளரிடத்தும் முற்றுப் பெற்றதாகக் காண்கிலம். என்னை? அச்சொற் பொருட்டாகச்சில ஆங்கிலப்பத்திரிகைகள் வாயிலாக எழுந்தவாராய்ச்சியே எங்கூற்றை வலியுறுத்தும். அன் றியும் ஓரியைபு கொள்ளினும் யாம் இனித் தமிழிற்காட்டும் இயற் கையின் இயல்புள்ளதாவென்றாராய்தல்வேண்டும். பின்னும் ஒரு நாட்டாரைச் சுட்டிக்கூறுதற்குக் கருவியாகியபெயர் அந்நாட்டுச் சொல்லாகவே இருத்தல் வேண்டும் என்னும் முறை யாண்டும் இன்று. ஒரு நாட்டார் அயல்நாட்டாரைச் சுட்டிக்கூறிய சொல்

லேயே அவ்வயல் நாட்டார் தம் பெயராக்கிக்கொடலே "ஹிந்து" என்னும் சொல்லாராய்ச்சி நன்குவிளக்கும். அதனான் வேறு தக்க கருவியின்றி ஆரியவகுப்பைச் சேர்ந்த அந்தணரைக் குறிக்கும் சொல் ஆரியச்சொல்லாகவே இருத்தல்வேண்டுமென்று நாட்டுதல் பொருந்தாது. பின்னர் அது தமிழ் சொல்லாமாறும் தமிழ்ச்சொல்லின்கண்ணும் இக்குறியாகாது காரணம் வெளிப்பட்ட தமிழ்ச்சொல்லாமாறும் கூறுதும். அது தமிழ்ச்சொல்லாகுமிடத்து எதனடியாகப்பிறந்ததென்று ஆராய்தல்வேண்டும். ஒரு சாரார் கூறுவது:—தலைவனையுணர்த்தும் "ஐ" என்னும் முதலடியாகப் பிறந்ததென்பது. அவர் கூற்று உண்மைக்கு மிகவும் ஒட்டியதேனும், நேரே கோடற்கும் பொருத்தமுடையதன்றும். ஐ யென்னும் முதனிலை வழக்கின்கண் அப்பொருளோடு இயங்குகின்றதாவென்றாராயின் இன்றென்பதே போதரும். அங்ஙனமாயின் நூற்கண்மட்டும் எங்ஙனுளப்பட்டதென்று ஆராய்தல் வேண்டும். வழக்காற்றின் இருந்தன்றே நூற்கட் சேறல் இயல்பு. உற்றுநோக்கின், ஐ யென்றசொல்லோடு பெரிதும் ஒற்றுமையுடைத்தாய் நூற்கண் தலைவனை யுணர்த்தும் "ஆய்" என்றவொருசொல்லுளது. அச்சொல் வழக்கின்கண் தனித்தியங்காது ஆண்பால் விகுதி பெண்பால் விகுதி பெற்றுத் தமிழ்மக்களில் பிறமொழிக்கலப்புப் பெறாத சிலவகுப்பினரிடம் ஆயான், ஆயாள், ஆயி எனத் தலைவன் தலைவி யென்ற பொருளுடன் வழங்குகின்றது. ஆயான் ஆயாள் என்னும்சொற்களே நூற்கண் ஆயன் ஆயள் எனவழங்குகின்றனவெனின் இழுக்குஇன்று. அங்ஙனமாயின் ஆயன ஆயள் என்றசொற்கள் இடையன் இடைச்சி என்ற பொருளுணர்த்துவதன்றித் தலைவன் தலைவி யென்று எங்ஙனம் பொருள்தருமென்னிற் கூறுதும். பொருளிலக்கணத்தில் ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்—ஆவயின்வரும் கிழவருமுளரே" என்ற சூத்திரத்திற்குப் பொருள்யாது? ஆயரென்னும்சொல் முல்லைநிலமக்களையும் தலைவரையும் உணர்த்தும் என்பதற்குவேறுஎன்னசான்றுவேண்டும். ஆயர்என்றசொற்குத் தலைவர் என்றபொருள் எங்ஙனம் அமையுமென்பதை ஒருசிறிது ஆராய்வாம். ஆவையுடையவர் ஆயர். ஆவை ஆ வெனத் தமிழர்

கொண்டது "ஆ" என அவை கூறும் ஒலிகொண்டென்பது இங்கு உய்த்துணரத்தக்கது. ஆவை யுடையவர் எவ்வாறு தலைவராவரெனிற் கூறுதும். மிகவும் பழங்காலத்தில் நாணயம் (Coin) நிலம் (Land) முதலியவைகளையுடைமையால் செல்வரென்றெண்ணுவதற்கு இடம் இன்றாயிருந்தது, நாணயம் என்பது அக்காலத்தில் தோன்றியிராது. நிலப்பரப்பைத் தாம்தாம் பகுத்துக் கொண்டு உழுதுபயனடையவேண்டிய நிலைமையும் பழக்கத்திற்கு வந்திராது. மிகப் பழைய அக்காலத்தில் மக்கள் ஆடுமாடு முதலியவற்றின் ஊதியத்தையே பேரூதியமாகவும் பெரும்பொருளாகவும் கொண்டு வாழ்ந்தனர். அக்காலத்து அவரவர் செல்வம் அவரவர்க்குரித்தான ஆடுமாடுகளையே எண்ணி மதிக்கப்பட்டு வந்தது. மேல்நாடுகளிற் சிலவற்றில் ஆடுகளையே நாணயமாக வழங்கிவந்ததாகவும் தெரிகின்றது. பெகூனியரி (Pecuniary) என்னும் ஆங்கிலச்சொல்லின் வரலாறு அதனை நன்குவிளக்கும். அவ்வாறே பல்லாக்களையுடைமை இத்தமிழ்நாட்டின்கண்ணும் செல்வமாகமதிக்கப்பட்டிருந்ததை யாவருமறிவர். இன்றும் நெல்லூர் முதலியவிடங்களிலும், ஆயர்கூட்டத்தும் பெருஞ்செல்வமாகக்கோடலைக் காண்கின்றோம். ஆதலின் மிகவும் பழங்காலத்து ஆயன் என்னும் சொல்லும் தலைவனென்னும் சொல்லும் ஒரு பொருள் குறித்தனவேயாம். ஆதலின், இதுகாறும் கூறியவாற்றான், ஆயர் என்னும் சொல்லே அய்யரெனத் திரிந்ததென்று கோடற்கு மயக்கமென்னை? பின்னர் அய்யரென்னும்சொல் அந்தணர்க்கு மாத்திரம் வழங்கிவருகின்றதா அல்லது தலைவனென்னும் பொருளுடன் யாவர்க்கும் வழங்கிவருகின்றதா என்றாராய்வாம். இக்காலத்தே ஆங்கிலேயப்பெரியார்சிலரும், சிறிதுபழமையாக வீரசைவரும், இன்னும் பிறரும் இதனை வழங்கிவருகின்றனர். அவை நம்மாராய்ச்சிக்கு அத்துணைப்பயன்படா. அவற்றை விட்டு மிகப்பழங்காலந்தொட்டு வழக்கின்கண் வழங்கிவருதலை ஆராய்தல்வேண்டும். தமிழ் நாட்டிற் றென்னாடாகும் திருநெல்வேலியில் இற்றைக்கும் தலைவன் தலைவி யென்ற பொருளுடன் "அய்யர், ஆய்ச்சி" என்று முறையே கூறுகின்றனர்.

சோழநாட்டின்கண்ணும் ஆய்ச்சி என்பது சில தமிழ்வகுப்பின ரிடம் வழங்கிவருகின்றது. அப்பர் என்னுஞ்சொல் திருநெல் வேலியில் மாத்திரம் வழங்கிவருகின்றது. இந்த "அப்பர்" என் னும் சொல் இச்சோழநாட்டினும் சிலவிடங்களில் மூதாதையைக் குறிப்பதற்கும் சிலவிடங்களில் தந்தையைக் குறிப்பதற்கும் வழங் கப்படுகின்றது. சிறிதுதிரிந்து அய்யவென்றும் சிறிதுநீண்டு அய் யாவென்றும் தலைவரைக் குறிப்பதற்கும் வழங்கப்படுகின்றது. இனி, யாம் மேற்கூறிப்போந்த பொருட்டுக்களால் ஆயரென்னும் சொல்லே அய்யரெனத்திரிந்து வழங்கி வருகின்றதென்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் புலப்படுமன்றே.

இவ்வாராய்ச்சியாற் போந்த உண்மைகள் யாவையெனிற் கூறு தும். ஆரியரும் தமிழரும் நெடுநாண் முன்னர்க்கூடி உடனுறைந்த காலத்துத் தமிழர் தம் தலைவர்களைக் குறிக்கும் அய்யரென்னும் சொற்கொண்டே ஆரியரை அழைத்தனரென்றும், அப்பெயர் மிகவும் நாகரிகம் அடைந்த தமிழ் மக்களிடத்து வழங்கிலந்தமை யானும், அவர்களால் அன்போடளிக்கப்பட்டமையானும் அதனை மிக்க ஆர்வத்துடன் ஆரியர் கைக்கொண்டனரென்பதும், தமிழ் மக்கள் தம்மிடத்துப் புதிதாக வந்தவரிடத்துப் பேரன்புபூண்டு நடந்துவந்தன ரென்பதும் நன்கு போதரும். பிற நாட்டாரை மிலேச்சரென இழித்துக்கூறும் சில மக்கட்டொகுதிபோலாது தமிழ்மக்கள் எற்றைக்கும் பிறரை உயர்த்திக்கூறும் இயற்கை நலம் வாய்ந்தவரென்பது பிற்றைநாள் வழக்காகும் துரை யென் னும் சொல்லானும் நன்குவிளங்கும். இஃதிங்ஙனமாகச் செய்ந் நன்றிமறந்தாராய வொருசிலர் அழுக்காற்றால் வேறுபடக் கூறு வர். தமிழ் மக்கள் தம்மின் மிக்காரைக் கண்டவிடத்து உயர்த் திக்கூறுது என்தான் கூறுவர் என்றும், பிறநாட்டாரைத் தம்மின் இழிந்தாரென்றும் மிலேச்சரென்றும் கூறுதலே உயர்ந்த நாகரிக மென்றுங் கூறுவாருளராயினர். அவர்க்கு அவர் கூற்றையே ஒப்பத்தமிழ்மக்களுட்சிலர் ஆவினையுடைமைபற்றியும் ஆவோம் பல்பற்றியும் தமக்கு ஓர்கால் எய்திய பெயரைத் தாம் அந்நிலை மையினின்றும் எழுந்து மிக்குயர்ந்தகாலத்து அந்நிலையினுள்ள

வராயிருந்த ஆரியரை அப்பெயர்கொண்டு அழைத்தனரென்றும் அன்றியும் சாந்தகுணம்பற்றியும் தம்மைத்தாமே காத்துக்கொள்ளும் திறம் இன்மைபற்றியும் "ஆனியற் பார்ப்பன மாக்கள்" என்றெண்ணப்பட்டனரென்றும் விடைகூறின் இழுக்காகாதென வறிக.

இனி இத்தமிழ்ச்சொல்லாராய்ச்சியால் இத்தமிழ்ப்பெயரை மேற்கொண்டொழுகும் ஆரியமக்கள் தமக்கொரு குறைநேர்ந்த தாக வெண்ணுவது இழுக்காம். இத்துணை ஆராய்ச்சியால் ஆரிய மக்கள் தம்முள் உயர்ந்தோரைக்கூறும் பெயர் ஒன்று பெற்றில ரென்றுவது அவ்வகைப்பெயர் அவர்களது மொழியில் இல்லை யென்றுவது கோடற்கு ஒருசிறிதும் இடமின்றும். அத்தகைய பெயர்கள் அவர் மொழியிற் பலவுள்ளனவென்பதும் அப்பெயர் களுடன் இன்றும் இத்தென்னுட்டினும் அழைக்கப்படுகின்றன ரென்பதும் "சாஸ்திரி, சர்மா" முதலிய பெயர்களுண்மையால் நன்கு விளங்கும். இவ்வாராய்ச்சி அவரில் ஒருசிலர் எண்ணுமாறு குறைவொன்றுனுமின்றி அன்னுரிடத்துள்ள நிறைவையே நன்கு விளக்கும். அந்நிறைவாவது அன்னுரிடத்துத்தமிழர் தம்தலைமைப் பெயரால் அழைப்பதற்குக் காரணமான ஆன்றமதிப்பும், அன்னுர் அப்பெயரை மகிழ்வுடன் கோடற்குக்காரணமாய்த் தமிழ் மக்களிடத்து அன்னுர்கொண்ட சீரியமதிப்பும் எனும் இவ்விரண் டின்கூட்டுறவேயாமென்க. இஃதிங்ஙனமாகத்தமிழ்மக்களுள்ளும் சிலர் பண்ணெணப் பாக்கியம்பண்ணித் தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினிற் றோன்றியதாக விறுமாந்து தமக்கு ஆவினைஉடைமை முதலியவற்றால் தலைமைப்பெயர் எய் தினவரெனக்கூறின் தம்மை இருவழியுமறியாதுசினந்து தம்மைத் தாமறிதல் எளிதன்றென்னு முண்மையைச் சாதிப்பர். அன் னுர்க்குத் தாம் தம் தாய்வயிற்றுதித்துப் பாலராயிருந்தமையை நினைவூட்டின் பேரிடர்ப்படுவர். அந்தோ! அன்னுர் வெறுப்பும் விருப்பும்ஒரு பொருளனவாக்கொண்டு மேற்செல்லினன்றி இத் தகையவாராய்ச்சி இனிதின்நடவா தாகலான் இவர்களையும் இவர் கள் கூற்றையும் அங்ஙனமேவிடுத்து மேற்செல்வாம். சரித்திர

ஆராய்ச்சிக்கண் உழன்றார்க்குப் பண்டைக்காலத்தில் தம்நிலைமை யென்னை? தம்தொழில் என்னை? தம் உணவு என்னை? தம் ஒழுக்கம் என்னை? என்றின்னோரன்ன வினாக்களுக்கு நூல்வழியானும் பிறவழியானும் விடைபெறுவாராயின் கெட்டதோர் பொருளைக் கண்டக்கால் எய்தும் மகிழ்ச்சியிற் பன்மடங்கு பெரியதோர் மகிழ்ச்சி எய்துவர்.

இனி இதுகாறும் யாம் கூறியவெல்லாம் தமிழ் நூலுடையார்க்கு உடன்பாடா இல்லையா வென்றெருசிறுதும் ஐயுறல் வேண்டா. தமிழில் மிகப்பண்டையதென்ற கூறுதற்கு இலக்கியமாயும் இலக்கணமாயும் அமைந்துள்ள தொல்காப்பியத்தின் கண்ணேயும் தன்னினும் முந்து நூற்கண்ணிருந்து எடுத்து ஆளப்பட்டதாகத் தோற்றும் "பெயரும் வினையும்" என்றற்றொடக்கத்தன மூன்று சூத்திரங்களும், "ஐய சிறிதென்னை யூக்கி" (37), "என்னையன்மார்க்குப்த்துரைத்தாள் யாய்" (39) "கொடைசூழ்ந்தார் தந்தையோ டையன்மா ரெல்லாரு மொருங்கு" என்ற கலித்தொகையடிகளும், "எம்மையர் சாலவு மூர்க்கரின்னே" என்ற கோவையாரடியும், இன்னும் பிற்காலத்து நூல்களில் பல மேற்கோள்களும் தக்கசான்று பகரும்.

இனி இப்பண்டை நூலாராய்ச்சியை இம்மட்டோடு நிறுத்தி இதுகாறும் கூறிவந்ததைச் சுருக்கிக்கூறின் ஒன்பது என்னும் சொல் தனிமொழியன்றென்பதும், தொடர்மொழியிலும் காரணம் வெளிப்பட்ட சொல்லென்பதும், தொல் என்னும் சொல்லும் பத்தென்னும் சொல்லும் புணர ஒன்பது என்றாயிற்றென்பதும், அங்ஙனமே தொல் என்னும்சொல்லும் நூறு ஆயிரம் என்னும் சொற்களும்முறையே புணரத்தொண்ணூறு தொள்ளாயிரம் என ஆயிற்றென்பதும், பத்தின்முன்னது ஒன்பது என்று கூறுதற்குக் காரணம் எட்டு ஒருகாலத்து இறுதியெண்ணாக இருத்தல் வேண்டுமென்பதும், பத்தை இறுதியெண்ணாகக் கொண்டதற்குக் காரணம் மக்கள் தம் கையுள் விரலின் தொகை நோக்கிக் கூறுவதுபோல, எட்டை இறுதிஎண்ணாகக் கொண்ட

தற்குத் தம்முடலினளவுநோக்கி வைத்துக்கொண்டனரென்றும், இறுதியெண்ணின் அளவுகொண்ட நாட்களை நம்முன்னோர் இறந்தார்பொருட்டு இயற்றும் கடனின் எல்லையாகக்கொண்டன ரென்றும் இனி அய்யரென்னும் சொல்லைப்பற்றிக் கூறுங்கால் அய்யர் என்னும்சொல் ஆரியச்சொல் அன்றென்றும் அது தமிழ்ச்சொல்லென்றும் தமிழ்ச்சொல்லினும் காரணம் வெளிப் பட்ட தமிழ்ச்சொல்லென்றும், அது முற்காலத்தில் ஆக்கலை யுடையவர்களை உணர்த்திப் பின் தலைவரை உணர்த்திற்றென்றும் தமிழ் மக்கள் தம்நாட்டிற்குடியேறித் தம்முடன் வதிந்த ஆரிய மக்களைத் தம் இயற்கை நலன்கொண்டு இச்சொல்லால் அழைத் தனரென்றும், அவ்வாரியர் இச்சொல்லையே தமக்கு ஒப்பற்ற ஒரு பின்னடைமொழியாகக் கொண்டு தமிழ் மக்களோடு நட்புற வாடி வாழ்ந்தனரென்றும், இவ்வாராய்ச்சி இருவருக்குமுள்ள மேன்மையை விளக்குவதன்றி ஒருவரையும் குறைகூற எழுந்த தன்றென்றும், இத்தகைய ஆராய்ச்சிகளால் தமிழ் மக்களுடைய பண்டை உரிமைகளும் தொழில் முன்னேற்ற முதலியவைகளும் நன்கு பெறப்படும் என்றும், இத்தகைய சொல்லாராய்ச்சியே நம் நாட்டின் சரித ஆராய்ச்சிக்கு அடிப்படையாவதென்றும் இத்தகைய ஆராய்ச்சிக்குப் பண்டை நூலாராய்ச்சியும் பண்டை வழக்கம் முதலியவற்றை ஊடுருவிப்பார்க்கும் விடாமுயற்சியுமே வேண்டற்பாலதென்றும் எம் சிற்றறிவிற்கு எட்டியவாறு கூறி முடித்தனமென்க.

திருவாளர் **சி. சோமசுந்தர முதலியாரவர்கள்**, கரந்தை.

உ

எட்டு, ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்.

திருவாளர், மு. கோவிந்தராய நாட்டாரவர்கள் B. A., L. T.

தமிழ்ப்பொழிலின் துணர் இரண்டு, மலர் முதல் இரண்டில், **திருவாளர் சி. சோமசுந்தர முதலியார் அவர்கள்** எழுதியுள்ள **வரலாற்று மொழிகள்** எனுங்கட்டுரையைப் பார்த்தேன். அஃதிதனை எழுதுவான் தூண்டிற்று. இக்கட்டுரையிற்போதரும் பொருள் முதலியாரவர்கள் கொண்ட கருத்தோடு முரணினும், பொருந்தினும் உண்மைகாண்பான் அவர்கள் முயன்றவாறே யானும் முயல்கின்றேனுதலால், அவர்கள் இதனை மறுப்பு என்று கொள்ளார்கள் என்னுந்துணிபுடன் இதனை யெழுதுகின்றேன். அவர்கள் ஆராய்ச்சியாற்பெறப்பெற்ற முடிவுகள், நிலைப்பனவோ, அலவோ வென்பதே என்னால் அறியக்கூடவில்லை. அவ்வாறே யானெழுது மிக்கட்டுரையிலும் வெளியாகும் முடிபுகள் உறுதியான உண்மைகளென என்னால் அறுதியிட்டுக் கூறமுடியாது. இவை தவறுனவை யெனப் பிறர் ஆராய்ச்சியால் எடுத்துகாட்டுதலுங் கூடும். அவ்வாறு எடுத்துக்காட்டுபவருக்குப் பெரிதுங் கடப்பாடுள்ளவனுமாவேன்.

முதலியாரவர்கள் ஆராய்ச்சியாற் பெறப்பெற்ற உண்மைகள் ஒருகாலத்தில் தமிழ்மக்கள் முதலெண்கள் எட்டுவரையுங்கொண்டனர் என்பதும், ஒன்பது என்னும் எண்ணுப்பெயர் தொன்பது என்பதன் மரூஉ என்பதுமாகும். இப்போது வழங்கிவரும் மொழிகளிலொன்றிலேனும் எட்டு இறுதிஎண்ணுகக் காணப்படவில்லை. நமதுளத்திற்கு எட்டுவரையுமாராய்ந்தாலும் இக் கொள்கைக்கு அடிப்படையான சான்றுகள் அகப்படுவது அரிதாகும். எட்டு இறுதிஎண்ணுகக் கொள்ளப்பட்டிருப்பின் அதன்பிறகு எட்டொன்று எட்டிரண்டு எட்டின்மூன்று எனவும், ஈரெட்டு ஈரெட்டொன்று ஈரெட்டிரண்டு எனவும் எண்கள் எண்ணப்பட்டிருந்தனவாகல் வேண்டும். அன்றியும் பத்துவரையுங் கொள்ளப்படுங்கால்த்துப் பேரெண்களாக வழங்கும் நூறு, ஆயிரம் என்

பனபோன்று, எட்டு எட்டிற்கும், எட்டெட்டு எட்டிற்கும் வேறு பெயர்கள் இருந்ததாகல் வேண்டும். இவ்வாறெல்லாம் எண்ணப்பட்டிருந்ததாக எண்ணப்படுவதற்குத் தக்கசான்றுகள் நமது பழைய நூல்களிற் காணப்பட்டாலொழிய இக்கொள்கை நிற்கு மாறு காண்கிலம். முதலியாரவர்கள் எடுத்துக்காட்டும் சான்று களையே அடிப்படையாகக் கொண்டு இக்கொள்கையினை நிறுத்து வது இயலாததொன்ருகத் தோன்றுகிறது.

ஒன்பது என்பது தொன்பதன் மரூஉவாவென வினியாராய் வேன். ஒன்பது என்னும் எண் பத்து, நூறு என்னும் பெயர்க ளோடு ஒன்றும்போது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன பிறக்கின்றனவென்று பிற்காலத்துத் தமிழ் இலக்கண நூலார் கூறுவது தவறென்றும், தொல்காப்பியத்து இது குறித்துக் காணப்படுஞ் சூத்திரங்கள் இடைப்பெய்யப்பெற்றனவென்றும், தொல்பத்து என்பது தொன்பதென்ருய் மருவி ஒன்பதாகி வந்த தென்றும், தொல்நூறு, தொன்னூருகித் தொண்ணூருயிற்றென் றும், தொல்லாயிரம் தொள்ளாயிரமாகியதென்றும் முதலியார் அவர்கள் கூறுகின்ருர்கள். தொல்காப்பியச் சூத்திரங்கள் இடைப்பெய்யப் பெற்றனவாவென்பதைப் பின்னர்க் காண்பன். தமிழொடு பொருந்திய உறவுள்ள மொழிகளில் மிகப் பழமைத் தான தெலுங்கில் ஒன்பது தொம்மதி யெனவும், பத்து பதி யெனவும், இருபது இரவை யெனவும், முப்பது முப்பையென வும் ... ... தொண்ணூறு தொம்பை யெனவும், நூறு நூறென வும், தொள்ளாயிரம் தொம்மதிநூறெனவும் வழங்கி வருகின் றன. தொம்மதி என்பதில் பத்தின் இயைபு காணப்படுகிறது. தொம்பை என்பதில் பத்தின் இயைபு காணப்படுகின்றதேயன்றி நூற்றின் சார்பைக் காணேம். தொம்மதி நூறு என்று கூறப்படு தலால் தொள்ளாயிரத்துக்கு ஆயிரத்தின் சார்பு இல்லையென்பது வெளிப்படை. ஆகவே மிகவும் பொருந்திய வழியிலேயே தொம் பை, தொம்மதிநூறென்பன தெலுங்கில்அமைந்துள்ளன வென் பது விளங்கும். தமிழிலக்கணங்கள் கூறும் வழியினைக்கருதுவோ மானல் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன பெரிதும் இறும்

பூதளிக்கின்றன. இதனல் முதலியாரவர்கள் கூறுவதே பெரிதும் சால்புடையதாகத் தோன்றும். அவர்கள் கருத்து எனக்கும் உடன்பாடெனினும், தொல் என்பதனிலும் தொள் என்று கொள்வதே மிகவும் பொருத்தமுடையதாக யான் நினைக்கின்றேன். தொல் என்பதற்குப் பழைய அல்லது முன்னையவென்றும் பொருள்களுண்டாதலால், தொல்நூறு, தொல்ஆயிரம் என்பன புதிய நூறு, புதியவாயிரமாயின், பின்னூறு, பின்னுபிரம் எவை யென்னுங் கடாக்களையெழுப்பும். தொள்நூறு, தொள் ஆயிரம் என்பன தொளையுண்ட அல்லது குறைந்த நூறு ஆயிரம் எனப் பொருள்படுதலால் இவ்வாறு கொள்வதே சிறப்புடையதாகத் தோன்றுகிறது. தொளை, தொள்ளல் என்பன காண்க. வலைஎன்னும் பொருளுக்குத் தொளையுடையது என்னும் பொருளுள்ள தொள்கு என்னுஞ் சொல் உளதாதலை ஒப்புநோக்குக. இன்னணம் கொள்ளுவதால் பொருட் பொருத்தமும் புணர்ச்சியியைபு மேற்படுகின்றன. தொல்லாயிரம் தொள்ளாயிரமாக மாறுவதினும் தொள்ளாயிரம் இயல்பாகவே தொள்ளாயிரமாவது சிறப்புடையதென்பதும், அவ்வாறே தொல்நூறு என்பதை விடத் தொள்நூறு தொண்ணூறுவதே சிறப்புடையதென்பதும் அறியக்கிடக்கின்றன.

இவ்வாறே ஒன்பது என்னும் பெயருக்கு வரலாறு கூறுவது இயலாததாகின்றது. தொல்காப்பியத்தில் ஒன்பது என்னுஞ்சொல்லே ஒன்பதன்பெயராக வழங்கியிருத்தலால் அதுவே அக்காலத்திலும் அதற்குமுன்னும் வழங்கியதென்பது வெளிப்படை. தொல்காப்பியத்தில் அறியப்படாத தொன்பது என்பது ஒன்று இருந்தது என்று கொள்வது சரியெனத் தோன்றவில்லை. ஒன்பதன் மற்றொரு பெயராகிய தொண்டு என்பது சங்கநூல்களிலும் பிற்றைநாள் நூல்களிலும் பயின்றிருத்தலால் அது மிகவும் பழமையானவொரு சொல்லென்பது கொள்ளப்படும். பரிபாடல், மூன்றும்பாடலில், "ஒன்றென விரண்டெனமூன்றென நான்கென வைந்தென வாறென வேழென வெட்டெனத் தொண்டென" என்று வருவதில், நாம் இப்

போது என்னுமாறே எண்ணப்பட்டிருத்தலும், ஒன்பதின் பதிலாகத் தொண்டு நிற்குமாறும் புலனாகின்றன. இனித்தொண்ணூற்றிற்கும், தொள்ளாயிரத்திற்குங் கூறியவாறே தொண்டு என்பதற்கும் வரலாறு கூறுதல் எளிதாகின்றது. தொள்பது, என்பது, தொள்-ஒ, தொண்-டு-எனவாகித் தொண்டென வாயிற்று. இனி, ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனார் இயற்றியன வல்ல வெனக்கூறப்படுஞ் சூத்திரங்கள் இடைப்பெய்யப்பெற்றனவா என்பதைச்சிறிதாராய்வாம். திருவாளர் முதலியாரவர்கள் "இச்சூத்திரம் தொல்காப்பியர் கூறியதாகச் சொல்வதற்கு இடமேயில்லை" என்று ஒருமையாற் கூறினும் அவர்கள் கூறிய முறைப்படி எடுத்துக் காட்டப்பெற்ற இரண்டு சூத்திரங்களையும் அவர்கள்குறிக்கின்றார்கள் என்றேகொள்கின்றேன். சூத்திரங்கள் தொல்காப்பியர் கூறினவே.

'ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கை குற்றிய லுகர
மாற னிறுதி யல்வழி யான'

எனமுன்மொழிந்து கோடலாகக் கூறியசூத்திரத்தினின்று ஒன்பது என்பது பத்துடன் புணரும் வகையும் கூறப்போகின்றார் என்பது வெள்ளிடை விலங்கலாம்.

பத்தின்முன், ஒன்றுமுதல் ஒன்பதுவரையுள்ள எண்களின் செய்கை கூறப்புகுந்து—

மூன்ற னொற்றே பகார மாகும்
நான்க னொற்றே றகார மாகும்
ஐந்த னொற்றே மகார மாகும்

எனக்கூறிவந்தவர் ஒன்பதன் செய்கை கூறாது விடுதல் எற்றுக்கோ? கூறியேயிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் கூறிய சூத்திரங்களை மறைத்துப் பிறசூத்திரங்களை இடைப்பெய்த பெருங் குற்றத்திற்கு உரையாசிரியர்களைக் குறியாக்கினொழிய இச்சூத்

திரங்கள் தொல்காப்பியருடையவல்லவென்று கூறுவதற்கு வழியைக் காண்கிலம். அன்றியும் சூத்திரங்கள், "நிற்றல்வேண்டும்"; "இயற்கைத்தென்ப," வெனப்பிறர் மதமாகக்கூறப்பெற்றமையும் நோக்குக. சூத்திரங்கள் தொல்காப்பியருடையவெனக் கண்டமையின் இக்கட்டுரை முன்னெடுபின் முரணுமாறு தெளிவாம்.

தமிழ்மொழியின் ஆழத்தையும் பரப்பையும் தமதறிவாலறிந்த தமிழ்ப்பேரறிஞர்கட்கு இக்கட்டுரை இறும்பூதெய்துவிக்கும். எனினும் உண்மையையறிய முன்வருவது எல்லோராலும் விரும்பப்படுவதொன்றாகலான் தெரிந்தவற்றை விரித்தேன். தண்மைநிறைந்த தண்டமிழறிஞர் இதன் உண்மையைக் கண்டறிவுறுத்துவர் என்றெண்ணுகின்றேன்.

உ

தஞ்சை யரசர்.

(38-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது இராஜராஜ சோழனால் "வெங்கியை ஆண்டுவரும்படி ஏற்படுத்தப்பட்ட சிற்றரசருள்ஒருவனான "விமலாதித்தியன்" என்பவன் சில ஆண்டுகளுக்குப்பின்பு இராசராசனது மகளை மணம்புரிந்துகொண்டு வெங்கிக்கு அரசனானான். அவனுக்குப் பிற்காலத்திலும் விமலாதித்தியனது மகன், பெயரன் முதலியோரும் சோழர்குடியிற்றோன்றிய பெண்களை மணம் புரிந்து வந்தனர். இவ்வாறு சோழர்குடியிற் பெண் கொண்டுவந்ததோருரிமைபற்றி விமலாதித்தியன் வழித்தோன்றலாகிய "முதலாவது குலோத்துங்கன்" என்பவன் தன்தாய் வழியாற் சோழநாடு தனக்குரியதெனக்கொண்டு தஞ்சையில் ஓர் புதிய ஆட்சி ஏற்படுத்தி அதற்கு அரசனானான். அவனைப்பற்றிய செய்திகள் பின்வரும் பகுதிகளில் நன்கு காணலாம்.

இராசராசன் பட்டத்திற்குவந்த சில ஆண்டுகளுக்குள் பத்துநூறாயிரம் போர்வீரர் கொண்டதொரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு மேற்கிலும் வடக்கிலுமிருந்த சாளுக்கியரை வென்று அவர்களென்றும் சோழநாட்டில் தலைகாட்டாதபடித் தோற்கடித்தான். மற்றும் இலங்கைக்குப் பக்கத்திலுள்ள கணக்கிலடங்காத பலதீவுகளையும் கைப்பற்றினனென்றும் தெரிகிறது. இவன் தனது நாட்டில் பலவிடங்களில் பலகோவில்களைக் கட்டியுள்ளான். அவற்றுள் முதன்மையானது தஞ்சையிலுள்ள "பிரகதீசுவரசுவாமிகோவில்" என்றதோர் பெரியகோவில். இக்கோவிலைக்கட்டுவதற்குத் தென்னிந்தியாவில் பலவிடங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள கோவில்கள் பலவற்றையும் பார்த்தானென்றும், திருச்சி நாட்டில் "கங்கைகொண்ட சோழபுரம்" என்னும் ஊரிலுள்ள கோவிலின் அமைப்பைத் தவிர வேறொன்றும் தன் மனதிற்கு ஒவ்வாததால் அக்கோவிலின் அமைப்பைப் போலவே, தஞ்சையிலும் இப்பிரகதீசுவரசுவாமி கோவிலைக் கட்டிமுடித்தானென்றும் சிலர் கூறுகின்றனர். இன்னும் இவ்விரண்டுகோவில்களும் அமைப்பில் ஒன்றிற்கொன்று தொடர்புடையனவாகவே தோன்றுதல் காணலாம். இவற்றுள் எந்தக் கோவில் முதலிற்கட்டப்பட்டதென்பது ஆராய்ச்சியாளரால் கருதத்தக்கது.

இராசராசன் தன் காலத்தில் நிகழ்ந்தவற்றையெல்லாம் அப்போதைக்கப்போது கோவில்களிலும் கற்பாறைகளிலும் கல்வெட்டுகள் செதுக்கிவைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இவனுக்குப்பிற்பட்ட மன்னர்களும் இவனைப்போலவே கல்வெட்டுகளால் அவரவர்கள் காலத்தில் நிகழ்ந்தவற்றை எழுதி வந்தார்கள். இவ்வாறு பொறித்துவந்தது இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குப் பெருந்துணையாகவிருக்கின்றது. இராசராசசோழன் பட்டத்திற்குவந்த பதினெட்டாவதாண்டில் "முட்டம்" என்றும் வள்ளுவநாட்டிலுள்ள தோரூரை "மும்முடிச்சோழநல்லூர்" என்று பெயரைமாற்றி, "திருநந்திக்கரை" யிலுள்ளதோர் கோவிலுக்கு ஐப்பசிமாதத்துச் சதய நட்சத்திரத்தில் விழாமுடியுமாறு ஓர் திருவிழா நடத்தவும், விழா

முடியுநாளில் அக்கோவிலின் தேவர்க்குத் திருநீராட்டிவைக்கவும், அக்கோவிலில் இராசராசனென்னும் பெயரால், ஓர் திருவிளக்கு எப்போதும் எரிந்து வருமாறும் தானம் செய்தமேதோர் செய்தியைக் கீழ்கண்டவாறு கல்லில் பொறித்திருக்கிறது.

‡ 1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] திருமகள் போலப் பெ—
2. [ரு] நிலச் செல்வியுந் தனக்கே[யு]
3. ரிமை பூண்டமை மனக்கொள காந்தளூர்ச[ா]—
4. லை கலமறு[த்தருளி] வேங்கைநாடும் கங்—
5. கபாடியும் தடிகைவழியும் நுளம்ப பாடி
6. யும் குடமலைநாடுங் கொல்லமுங் கலி—
7. ங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டல—
8. மு......ண்டிற வென்றித்தண்டா......டுதன்னெழில்
9. வளர் ஊழியுளெல்லாயாண்டும் தொழுத
10. [க] விளங்கும் யாண்டே செழியரைத்தே—
11. [ச]கொள் ஸ்ரீகோ இராசராசகேசரி வன்மர்க்கு
12. [யா]ண்டு பதினெட்டாவது [I*] இராசராசத்தென் [னு]—
13. [ட்டு] வள்ளுவநாட்டு முட்டம் முட்டமென்னும் பே—
14. [ர்த]விர்த்து மும்முடிசோழ நல்லூரென்று பே—
15. [ராக்கு] இந்நாட்டு திருநந்திக்கரை மாதேர்
16. க்கு பெருமாள் ஐப்பிகைச்சதையத்திருள்
17. ... ... நா ... ... திர த்திருவிழாவெடுத்து தி—
18. ... ... சதையத்தினுள் ஆருடி ஏமனஞ் செய்—
19. [வ்]விப்பத—கவும் [II*] நிசதம் நாழிநெய்யால்லு—
20. [ரு] திரு நந்தாவிளக்கு இராசராசனென்னும் தி—
21. .... பப் தாகவும் [II*] உச்ச ....

இராசராசன் தன் நாட்டில் கால்வாய்கள் பலவெட்டுவித்து வேளாண்மை வணிகம் முதலியவற்றைப் பல்வகையானும் வளம்படச்செய்தான். மற்றும் இவன் காலத்தில்தான் கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டு, குடிகளெல்லாம் பஞ்சாயத்தார்களுக்கு அடங்கி நடக்கவும் விதிகள் விதிக்கப்பட்டன.

‡ Travancore Archaeological Series, Volume I, page 292.

முதலாவது இராசேந்திர சோழன்:—

இராஜராஜசோழனுக்குப் பின் அவன் மகன் முதலாவது இராஜேந்திரசோழன் பட்டத்திற்குவந்தான். இவன் தன்தந்தை அரசனாகவிருக்கும் காலத்திலேயே, ஒரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு வட இந்தியாவிற்குச் சென்று கங்கை நதிக்கு அப்பாலுள்ள நாடுகளையெல்லாம் கைக்கொண்டு, தன்னாட்டிற்குத் திரும்பிவருகையில் திருச்சி நாட்டிலொரு சிற்றூரில் சில நாள் தங்கி, தான் கங்கைநதிக்கு அப்பாலும் சென்று கங்கை நதியை அவற்றின் இடையேயுள்ள நாடுகளுடன் கைக்கொண்டு திரும்பின தனது வீரச்செயல் என்றும் நிலைபெற்றோங்க, அச் சிற்றூருக்குக் "கங்கைகொண்ட சோழபுரம்" எனப் பெயரிட்டான். பின்பு அவ்வூரில் ஒருபெரும் சிவன்கோவில் கட்டிமுடித்து அவ்வூருக்குச் சிற்றரசனானான். இவை நிகழ்ந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர்த்தான், இவனது தந்தை இராசராசன், தன்மகன் இராஜேந்திரசோழன் முதன்முதலில் கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிமுடித்த அக்கோவிலைப் பார்த்துவந்து பின் அக் கோவிலைப்போன்ற தொன்றைத் தஞ்சையில் கட்டினனென்று சிலர் கூறுவதுண்டு. இராஜேந்திரசோழன், தன் தந்தை உயிரோடிருக்கும்பொழுதே பட்டத்திற்குவந்து, சில காரணங்களால், சோழர் தலைநகராகிய தஞ்சையைவிட்டுக் கங்கைகொண்டசோழபுரத்தையடைந்து, அதையே தனக்குத் தலைநகராக்கிக்கொண்டான். இவனுக்குப்பின் "முதலாவது இராஜாதிஇராஜதேவன் என்பவன் அரசனானன்.

முதலாவது இராசாதிராசதேவன் :—

இவன் பட்டத்திற்குவந்த சில ஆண்டுகளுக்குள், சோழரது வலிமையை ஒடுக்கவேண்டுமென்ற எண்ணத்தினல், பாண்டியர், சேரர், சிங்களவர், முதலாயினோர் ஒன்றுகூடி, ஒருபெரும்படையுடன் இவனை எதிர்த்தனர். பலநாள்வரையில் விடாது போர் நடந்துவந்தது. முடிவில் இராஜாதிராஜதேவனே வெற்றி பெற்றான். இவனை எதிர்த்துவந்த அரசர்கூட்டம் பலவகையாகச்

சிதைந்தது. சேரமன்னன் யானையால் இடறப்பட்டுப்போர்க்களத்திலேயே உயிர்துறந்தான். பாண்டியன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுப் போர்க்களத்தினின்றும் ஓட்டம் பிடித்தான். மற்றவர் பலவகையாக மாய்ந்தனர். இவன் யாவராலும் எண்ணுவதற்கு மியற்றுதவற்கும் அரியதோர் அசுவமேதயாகத்தைச் செய்து முடித்தான். முடிவில் பின்னொருகாலத்தில் இவனுக்கும் சாளுக்கியர்களுக்கும் மைசூரில் நடந்தபோரில் இவன் உயிர் துறந்தனனெனத் தெரிகிறது. இவனுக்குப்பின் இவன் தம்பி "இராஜேந்திரதேவன்" என்பவன் பட்டத்திற்கு வந்தான்.

இராசேந்திரதேவன்:—

இவன் தனது அண்ணன் இராஜாதிராஜதேவன் போர்க்களத்தில் இறந்தானென்ற செய்திகேட்டதும், ஒரு பெரும்படையுடன் மைசூரையடைந்து சாளுக்கியரை விடாது எதிர்த்தான். இருபுறத்தாரும் நெருங்கித்தாக்கவும், ஒருவரையொருவர் மாறி மாறிவென்று கொண்டே வர, முடிவில் சாளுக்கியர் முற்றிலும் தோல்வியடைந்து கடலுக்கப்பால் ஓடிஒளிந்தனர் சாளுக்கியர் தலைவரான "ஜெயசிம்மன்", "புலிகேசன்", "தாஸவர்மன்" முதலியோர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டு உயிர் துறந்தனர். இராஜேந்திரதேவன் சிறிதுகாலம் ஆண்டபிறகு, "வீரராஜேந்திரதேவன்" என்பவன் அரசனானன்.

வீரராசேந்திரதேவன்:—

இவன் காலத்தில் நிகழ்ந்தவைகளில்முக்கியமானவை பாண்டிய சேரர்களுடன் நடந்த சண்டையும், சாளுக்கியரின் தோல்வியும், வெங்கி என்னும் ஊரைக் கைப்பற்றியதுமாகிய இவைகளே. இவன் யானைப் படைகளைத் திரட்டிச்சென்று பாண்டிய சேரர்களைத்தாக்கி அவர்களில் பலரைத்தொலைத்து அவர்கள் வலிமையை ஒருவாறு ஒடுக்கினன். பின்புவெங்கியைக் கைப்பற்ற வேண்டி, மேற்கிலிருந்த சாளுக்கியரை எதிர்த்துப் போர்புரிந்து ஐந்தாறுமுறை வெற்றிபெற்று, முடிவில் சாளுக்கியர் தலைவரில் சிறந்தவனாகிய "ஆறுவது விக்கிரமாதித்தியன்" என்பவனுக்குத்

தன் பெண்ணைக் கொடுத்து மணம்புரிவித்து, சாளுக்கியரிடமிருந்து வென்ற நாட்டையும் திரும்பக்கொடுத்து, அவனை அதற்குச் சிற்றரசனுக்கினன். இவ்வாறு சோழருக்கும் சாளுக்கியருக்கும் பலஆண்டுகளாய் இருந்துவந்த பகைமை இவர்களுக்குள்ளேயே பெண்கொடுக்கல் வாங்கல் முதலியவைகள் நடைபெற்று வந்தமையால், இவர்களது பகைமையும் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாய் நீங்கலாயிற்று. இது இவ்வாருக, முன்பு முதலாவது இராஜராஜ சோழனல் வெங்கிக்கு அரசனுக்கப்பட்ட அவனது மருமகன் விமலாதித்தியன் என்பவன் இறந்தபிறகு அவன் மகன் " சாளுக்கிய இராஜராஜன் " என்பவன் வெங்கிக்கு அரசனுனன். அவன் சோழமன்னனுன இராஜராஜ சோழனுக்குப் பிற்பட்ட இராஜேந்திர சோழனது மகளை மணம்புரிந்துகொண்டு ' குலோத்துங்கன் " என்னும் பிள்ளையைப்பெற்முன். சாளுக்கிய இராஜராஜனுக்குப் பிறகு அவனது தம்பி "விஜயாதித்தியன்" என்பவன் அரசனுனைபொழிய, சாளுக்கிய இராஜராஜனது மகனுன குலோத்துங்கன் பட்டத்திற்கு வரவில்லை. ஏனெனில் குலோத்துங்கனுக்குத் தாய்வழியிற் பாட்டனுகிய இராஜேந்திர சோழன் குலோத்துங்கனைத் தனக்குச் சுவிகார புத்திரனுக வெடுத்துக்கொண்டமையாலும், குலோத்துங்கன் தக்கவயதடையும் வரையில் சோழநாட்டிலேயே வளர்ந்து வந்தமையாலும் குலோத்துங்கன் சாளுக்கியருக்கு அரசனுக முடியவில்லை.

பின்பு சோழமன்னனுன வீரராஜேந்திரதேவன் இறந்தவுடன், அவனது மகன் "ஆதிராஜேந்திரன்" என்பவன் சோழநாட்டிற்கு அரசனுனன். முன்பு கூறியதுபோல் முதலாவது குலோத்துங்கன் இராஜேந்திர சோழனுக்குப் பெயரனென்றும், சுவிகாரபுத்திரனென்றும், அதனுல் சோழநாடு தன்னைச்சேர வேண்டுமென்ற உரிமைகளைக்காட்டி ஆதிராஜேந்திர சோழன் மேற் படையெடுத்து அவனைக் கொன்று தான் சோழநாட்டிற் கரசனுனன். தன் மாமனுன வீரராஜேந்திரதேவன் இறந்ததும், அவனது மகனும் தனது மைத்துனனுமாகிய ஆதிராசேந்திர சோழனைக் கொன்று அவனது நாட்டைக் கைப்பற்றினதைக் கேள்வியுற்ற வெங்கிமன்னுன ஆருவது விக்கிரமாதித்தியன் ஒரு

பெரும்படையுடன் குலோத்துங்கனை எதிர்த்தான். முடிவில் குலோத்துங்கன் ஆறாவது விக்கிரமாதித்தியனை முற்றிலும் முறியடித்து வென்று அவன் நாட்டையும் கைப்பற்றிக்கொண்டு, அவனையும் துங்கபத்திரா நதிக்கு அப்பால் ஓட்டிவிட்டான்.

முதலாவது குலோத்துங்கன்:—

மேற்கூறிய சாளுக்கியமன்னனை இராஜராஜன் என்பவனுக்கும், இராஜேந்திர சோழனது மகளான "அம்மங்காதேவி"க்கும் பிறந்த இந்த முதலாவது குலோத்துங்கனை இவனது தாயைப் பெற்றபாட்டனர் சுவிகாரம்எடுத்துக்கொண்டமையால் இவனது இளம்பருவமெல்லாம் சோழநாட்டிலேயே கழிந்ததாகத் தெரிகிறது. இவன் பட்டத்திற்குவந்த சில ஆண்டுகளுக்குள் மீண்டும் வெங்கிநாட்டின்மேற் போர்தொடங்கி அதனைக் கைக்கொண்டான். தனக்குப் பலதடவைகளில் தீங்கிழைத்த தனது சிற்றப்பனை மீளவும் வடசாளுக்கிய நாடுகளுக்குச் சிற்றரசனாக்கினான். இவனதுபகைவனான ஆருவது விக்கிரமாதித்தியனுக்குச் சொந்தமான "கங்கா" என்னும் நாட்டை அவனிடமிருந்து போரில் வென்று கைப்பற்றிக்கொண்டான். குலோத்துங்கன் இறக்கும் காலத்தில், ஆருவது விக்கிரமாதித்தியன் திரும்பவும் கங்காவைச் சோழரிடமிருந்து மீட்டுக்கொண்டு சிறிதுகாலம் வெங்கியையும் ஆண்டுவந்ததாகத் தெரிகிறது. குலோத்துங்கன் ஒரு காலத்தில் "திருவாங்கூர்என்னுமிடத்தில் பலபீரங்கிகளை வைத்துத்தாக்கிக் கலிங்கநாட்டுடன் போர்புரிந்து அதனையும் தனது நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். பாண்டியர் சேரர்மேற் படையெடுத்து அவர்கள் மீண்டும் உள்நாட்டிற் புகாவண்ணம் தடுத்துவந்தான். பலநாட்களாக வணிகர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த உள்நாட்டு வணிகத் தீர்வையைத் தன் காலத்தில் வாங்காது நிறுத்திவிட்டான். தன்நாடு முழுவதையும் அளந்து அதற்கேற்பத் தீர்வைகள் ஏற்படுத்தினன். இவன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தாலும் இவனது ஆதிநகரம் கங்கைகொண்ட சோழபுரமாகவே யிருந்துவந்தது. குலோத்துங்கனுக்கு உட்பட்டிருந்த இலங்கைத்தீவு இவன் இறக்கு முன்னரே பலகாரணங்களால் தனிமை

யாக விலகிக்கொண்டது. குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் மகன், " விக்கிரமசோழன் " என்பவன் அரசனானன்.

பாண்டிய நாட்டின் நிலைமை:—

முதலாவது இராஜராஜசோழன்காலம்தொடங்கிக் குலோத்துங்கன் ஆட்சிமுடியப் பாண்டியநாடு பெரும்பாலும் சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்துவந்தது. அதற்கு "இராஜராஜ பாண்டிநாடெனவும்" அதன்தலைநகருக்குக் "கொற்கை" யெனவும் பெயர்வழங்கிவந்தது. சிறிதுகாலத்திற்குப்பின்பு பாண்டியர் கொற்கையினின்றும் தங்கள் தலைநகரை "சோழேந்திரசிம்மச் சந்திரவேதிமங்கலம்" என்னும் ஊருக்கு மாற்றிக்கொண்டனர். அக்காலத்தில் சோழநாட்டை ஆட்சிபுரிந்த முதலாவது இராஜேந்திரசோழன் தன்மரபினரில் ஒருவனைப் பாண்டிய நாட்டின் சில பிரிவிற்கு "சோழபாண்டியன்" என்னும் பெயருடன் அரசனாக்கினன். இது இவ்வாறாக, முதன்முதலில் இராஜாதிராஜதேவனும், இரண்டாவதாக வீரராஜேந்திரதேவனும், மூன்றாவதாகக்குலோத்துங்கச்சோழனும்திருவாங்கூரிலுள்ள "கோட்டார்" என்னுமிடத்தில் சிறிதும் தலையெடுக்கவிடாது அடித்துத் துரத்தப்பட்ட பாண்டியர், குலோத்துங்கனுக்குப்பிறகு, அவன் மகன் விக்கிரமசோழன் காலத்திலும், அவனுக்குப் பிற்பட்டவர்கள் காலத்திலும் சோழர்களை எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறே இலங்கையிலிருந்த சிங்களவரும் தாங்கள்பல நாட்களாய்ச் சோழர்களுக் குட்பட்டிருந்ததினின்றும் விலகிக்கொண்டு, இலங்கையிலிருந்த சோழர்களையும் துரத்திவிட்டனர்.

சோழநாட்டின் சிதைவு:—

முதலாவது குலோத்துங்கனுக்குப்பிறகு அவனது மகன் விக்கிரமசோழன் அரசனானன். விக்கிரமசோழன் சிறிதுகாலம் ஆண்டபிறகு " இரண்டாவது குலோத்துங்கன்" " இரண்டாவது இராஜராஜன்," " இரண்டாவது இராஜாதிராஜன் " முதலியவர்கள் சோழநாட்டை ஆண்டுவந்தனர். தங்கள் முன்னோரைப் போல் பகைவரை வென்று அடக்கியாளுந்திறமை இவர்களுக்

கில்லாமையால் இவர்கள் நாட்டிற்பலர் படையெடுக்கத்தலைப் பட்டனர். சோழர்களுக் குட்பட்டிருந்த தென்னுற்காடு, வட ஆற்காடு, தொண்டைமண்டலம் முதலிய நாடுகள் தனிமையாக விலகிக்கொண்டன. பாண்டியர் சேரர் முதலாயினோர் மற்றவர் களையும் ஒன்றுகூட்டிச் சோழர்களை எதிர்த்துப் போர்புரியவும் ஆரம்பித்தனர். இவ்வாருகச் சோழர் பன்னிரண்டாம் நூற்ரு ண்டினிறுதியில் பகைவரால் இடர்பட்டுக் கொண்டிருக்கையில் இலங்கை மன்னன் ஒரு பெரும் படையுடன்வந்து பாண்டிய சேரரையும் சேர்த்துக்கொண்டு சோழரை எதிர்த்து மதுரை யில் அவர்களை முற்றிலும் முறியடித்துத் திரும்பவும் சோழ நாட்டிற் புகுந்து பட்டுக்கோட்டை வரையிலும் சென்று, பல சிற்றூர்களை நெருப்புக்கு இரையாக்கிப்பிறகு அதினின்றும் புறப் பட்டு இராமேசுவரத்திற்குச் சென்று கோவில்களை இடித்து அவற்றிலுள்ள பொருள்களையும்கைக்கொண்டனன். இப்பெரும் போர் மூன்ருவது குலோத்துங்கன்" என்னும் சோழமன்னன் பட்டத்திற்கு வருமளவும் நடந்து கொண்டிருந்தது. மூன்ரு வது குலோத்துங்கன் அரசனுக வந்தவுடன் சிங்களவர்களை வென்று அவர்களை மூக்கு முதலிய உறுப்புக்களை அறுத்து அவர்களைக் கடலுக்கப்பால் துரத்திவிட்டான். பிறகு பாண்டி யரைவென்று மதுரையைக் கைப்பற்றிக்கொண்டு தன் மரபின ருள் ஒருவனையும் அதனை ஆளும்படி திட்டம் செய்தான். இவ் வாறு பாண்டியர் முதலாயினோரை வென்று அவர்கள் நாட்டை யும் கைப்பற்றியதனுல் அவர்களுக்கும் சோழர்களுக்குமிருந்த பகைமை வரவர அதிகமாயிற்று.

பாண்டியரும் ஹய்சாலியரும்:—

மூன்ருவது குலோத்துங்கனுக்குப் பிறகு சோழர்களுக்கு "மூன்ருவது இராஜ ராஜன்" என்பவன் அரசனுனன். இவர் காலத்தில்தான் சோழநாடு முற்றிலும் சிதைவுபட்டது. இவர் பட்டம் பெற்ற சில ஆண்டுகளுக்குள், முதலாவது "மாறவர் மன்சுந்தரபாண்டியன்" என்ற பாண்டியமன்னன் திரண்டபடை யுடன் சோழநாட்டிற் புகுந்து அவர்களது முக்கிய பட்டணங்

ளாகிய தஞ்சை, உறையூர் முதலியவற்றைக் கொள்ளையடித்துச் சிற்றூர் பலவற்றையும் நெருப்புக்கிரையாக்கிச் சென்றனன். இது இவ்வாறிருக்கப் பல்லவர் இளவரசன் ஒருவன் சோழமன்னரைப் பிடித்துச் சிறைப்படுத்தினன். அக்காலத்தில் மேற்கே சாளுக்கியரைவென்று அவர்களது நாட்டைக் கைப்பற்றி ஆண்டுவந்த "ஹய்சாலியர்" என்னுமோர்விதக் கூட்டத்தார் சோழர்களுக்குத் துணையாகவந்து பல்லவர்களை எதிர்த்து வென்று சோழமன்னரைச் சிறையினின்றும் விடுவித்தனர்.

சோழர் ஆட்சியின் இறுதி :—

முடிவில் சோழர்களுக்குக் கடைசிமன்னராக வந்தவர் "மூன்றாவது இராஜேந்திரசோழன்" என்பவன் இவன் கி. பி. 1240-ஆம் ஆண்டுமுதல் 1270-ஆம் ஆண்டுவரையிலும் ஆண்டதாகத் தெரிகிறது. இவன்காலத்திலேயே சோழர் ஆட்சி முற்றிலும் முடிவு பெற்றது. கடைசியாக "முதலாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்," "முதலாவது மாறவர்மன் குலசேகர பாண்டியன்," "இரண்டாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்," இரண்டாவது மாறவர்மன் குலசேகர பாண்டியன்," முதலான பாண்டிய மன்னர் சோழர்மேற் படையெடுத்து முற்றிலும் தலையெடுக்க வொட்டாது முறியடித்து வென்று பாண்டிய நாட்டை "நெல்லூர்" வரையிலும் விரிவுபடச் செய்தனர்.

இது இவ்வாறாக 14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தென்னிந்தியாவிற் பெருங்குழப்பங்களும் மாறுதல்களுமுண்டாயின. 1310-ஆம் ஆண்டில் "டெல்லி" (Delhi) நவாப்பின் போர்த்தலைவனை "மாலிக்காபர்" என்னுமுகமதிய போர் வீரன் பெரும்படையுடன் தென்னிந்தியாவின்மேற் படையெடுத்துவந்து ஹய்சாலியர் நாட்டையடைந்து அதினின்றும் "விஜயநகரத்தை" யடைந்து அதனையும் கைப்பற்றிக்கொண்டு பின்பு சோழபாண்டியர்மேற் போர்தொடங்கி வென்று, அவர்களது நாடுகளாகிய திருச்சிராப்பள்ளி, மதுரை, முதலியவற்றையும் கைப்பற்றி அவைகளை ஆளும்படித்தனது போர்வீரரில்.

சிறப்புற்ற சிலரைத் தலைவராக்கிவிட்டு டெல்லிக்குத் திரும்பினன். ஆகையினற்றன் இதற்குப்பிற்பட்ட சிறிதுகாலம் வரையிலும் மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய நாடுகள் முகமதியர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவ்வாறு சோழநாடு சிதைவுபட்டுத் திரும்பவும் பண்டைய நிலைமையுடையாமல் வரவரத் தளர்ச்சியடைந்துவந்தது.

பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறப்புடன் ஆண்டுவந்த சோழமன்னர்கள் தங்கள்நாட்டுக்குச்செய்த சில பொது நன்மைகளைப்பற்றியும அவர்கள் எவ்வாறு தங்கள்நாட்டை ஆண்டனர் என்பதைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். சோழர் தங்கள் நாட்டைப்பல கிராமங்களாகப்பிரித்து ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்தார்களை நியமித்தனர். கிராமங்களிற் கூட்டங்கள் கூட்டி அக்கூட்டத்தாரின் கருத்துக்கேற்பப் பஞ்சாயத்தார்கள் நடக்கவேண்டுமென்றும் கிராம அதிகாரிகள் தங்கள் வேலைகளைச்செவ்வனே செய்கிறார்களாவென்று கண்காணிப்பதற்கு மேலதிகாரிகள் பலரையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இவ்வாறு கிராமங்கள் பலவற்றைச்சேர்த்து அவைகளைச் சீர்பெறநடத்துவதற்கு ஒரு பெரிய அதிகாரியையும், விவசாயம், மராமத்து முதலியவற்றிற்குத் தனித்தனி அதிகாரிகளையும் ஏற்படுத்தி நாட்டைச்சீர்பெற ஆண்டுள்ளார். நிலம் முழுவதையும் அளந்து தகுதிக்கேற்ற தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாவது குலோத்துங்கன் காலத்திலேயே உள் நாட்டு வியாபாரத்தீர்வை முற்றிலும் நிறுத்தப்பட்டது. குலோத்துங்கனும் அவனுக்குமுற்பட்டவரும் பிற்பட்ட சோழமன்னரும் பல ஆறுகள், பெருங்கால்வாய்கள், ஏரிகள் முதலியன வெட்டி அவைகளுக்குப் பாலங்கள், அணைகள், கலுங்குகள் முதலியன கட்டி வேளாண்மையை மேம்படுத்தினர். அவற்றுள் முக்கியமானது தஞ்சை ஜில்லாவிலுள்ள Grand Anicut என்கிற கல்லணை. மூன்றுவது குலோத்துங்கன் திருச்சியில் ஓடிக்கொண்டிருக்கிற "உய்யக்கொண்டான்" என்னும் ஆற்றின் கலுங்கு முதலிய பாலங்களும் முசிறிக்குப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் "பெரிய வாய்க்கால்" என்

னும் கால்வாயின் கலுங்குகளும் 13ஆம் நூற்றாண்டினிறுதியில் கட்டப்பட்டன.

பகைவரை அஞ்சாமல் எதிர்த்துக் கொல்லும் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை முதலிய நால்வகைப் படைகளுமிவர்களிடமிருந்தன. தமிழ் மொழியைப் போற்றியும், தமிழ்த்தாயை வணங்கியும், தமிழ்ப்புலவரை ஆதரித்தும் வந்தனர். தவிரவும் ஒவ்வொரு சோழமன்னரும் தங்கள் இராச சபையில் ஒரு தமிழ்ப்புலவரை உடையராயிருந்தது மன்றி அவர்களாற் பாடப் பெறுவதைப் பெரும்பேறென மதித்து வந்தனர்.

(தொடரும்)

கோ. குப்புசாமிராசு,
பள்ளியக்கிரகாரம்,
தஞ்சை.

உ

மத்தியகாலச் சோழர் வரலாறு.

திருவாரூர், இலக்கணவிளக்கபரம்பரை, திரு. சோமசுந்தர தேசிகரவர்கள்.

(முற்றொடர்ச்சி.)

இவைகள் இவனது ஆட்சியாண்டு முப்பத்தேழுக்கு மேலேயே காணப்படுகின்றன. ஆகவே இவனது ஈழப்படையெடுப்பு முப்பத்தேழாவது ஆண்டான கி. பி. 944 ஆகும்.

இவ்வைந்தாம் தப்புலன் செய்த குற்றம் பாண்டியனுக்கு உதவி புரிந்ததென்று சொன்னோம். இதனைத் திருவாலங்காட்டுப் பட்டயம் 51-வது சுலோகத்தில் "பாண்டியன் சோழனது

சினத்தீ தணியும்வண்ணம் தனது பரம்பரையான நாட்டை விட்டுக் கடலிற் புகுந்தான்" என்று கூறுகிறது. இந்தக் காலத்தில் [தப்புலன் V கி. பி. 940—952] பாண்டியன் சோழர்கட்குப் பயந்து, தன் நாட்டைத் துறந்து, மரக்கல மிவர்ந்துசென்று, மகோததியில் இறங்கினன். அரசன் அவனை வரவேற்று வேண்டியனவெல்லாங் கொடுத்து நகருக்குப் புறத்தேவாழும்படி வேண்டுவன புரிந்தான். இலங்கையதிபன் 'இனிச் சோழரோடு போரிட்டுச் சில துறைமுகங்களைப் பிடித்துப் பாண்டியனுக்கு அளிப்பேன்' என்று சூளுரைத்துச் சேனைகளைத்திரட்டிக்கொண்டிருக்கையில் இவன் சோழனால் தோற்கடிக்கப்பட்டான்" என்று இலங்கைச் சரித்திரமான 'மகாவமிசம்' கூறுகிறது. முன்னொரு கால் படைத்தற் கடவுளான திருநெடுமாலே இராமமூர்த்தியாய்த் தோன்றி இலங்கையை யழித்ததற்கொப்ப இவனும் இலங்கையை யழித்ததால் சங்கிராமராகவன் என்ற பட்டம் புனைந்தான் என்று செப்பேடுகள் கூறுகின்றன.

இவனது தண்டத்தலைவனொருவனை செம்பியன் சோழவரையன் வடக்கே நெல்லூர்வரையிற்சென்று இவனது அரசியலை நிலைநிறுத்தி வந்தானென்று திருவொற்றியூர்க் கல்வெட்டாலறிகிறோம். ஆகவே இவனது ஆட்சி வடக்கே நெல்லூர்முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலும் மேற்கில் இராஷ்டிரகூட எல்லைவரையிலும் பரவியிருந்தது.

பராந்தகன் இவ்வாறு மிகப்பெருமையோடுஞ் சிறப்போடும் நாற்பத்தொரு ஆண்டு அரசாண்டனன். சிலர் இதற்கு மாறாக இவன் சகூ யாண்டு ஆண்டனனென்றும் அதற்குச் சான்று இவனது 46-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று காணப்படுவதென்றுங் கூறுவர். இவன் கி. பி. 907-க்குச் சகம் அநிகூ-ல் அரசுகட்டில் ஏறினன். இவன் 46 யாண்டு ஆண்டிருந்தால் அது கி. பி. 953-ல் செல்லும். கி. பி. 947-948-ல் அதாவது சகம் அசூகூ-ல் கன்னரதேவன் இராசாதித்தியனோடு போரிட்டு அவனைக் கொன்று சோழமண்டலத்தில் நுழைந்தானென்று சோழபுரம் கல்வெட்டாற் றெரிவதாக முன்னர்க் காட்டப்பட்

டிருப்பதாலும், கன்னியாகுமரிக் கல்வெட்டினாலும் அறியலாவ தோடு பின்னர்சாட்சிகளுக்கும் இடர்ப்படுகின்றது. திருவிடை மருதூர், கற்குடி* முதலிய விடங்களிலுள்ள கல்வெட்டுக்களால் கண்டராதித்ததேவரது மகனான உத்தமசோழரென்னும் மதுராந்தகதேவர் கலி சகூளம் (4070)ல் சோழசக்கரவர்த்தியானார் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இது ஆங்கிலவாண்டு (4070—3101) 969—970 ஆகும். கி. பி. 971-ல் இரண்டாம் பராந்தகதேவரென்னும் சுந்தரசோழர் இறந்தார். இவர் பதினேழு யாண்டு அரசாண்டதாகக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். அங்ஙனமாயின் இது (971—17) 954—955 வரையிற் செல்லும். கண்டராதித்ததேவர் எட்டாண்டு ஆண்டதாகக் கல்வெட்டுக்கள் உறுதி கூறுகின்றன. ஆகவே இவர் 948-ல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும். அக்காலத்துத்தான் முதலாம் பராந்தகதேவரான இவர் காலமாயிருக்கவேண்டும். 953 வரை அரசாண்டனராயின் கண்டராதித்தர், சுந்தர சோழரது ஆண்டுகளான 8+17 =25 ஆண்டுகள் கி. பி. 978 வரை நம்மை இழுத்துச்செல்ல, மதுராந்தகரது நடுவாட்சியிற் கலந்து இடர்ப்பாடடைவோம். இது பொருந்தாமை காண்க.

பராந்தகனுக்குக் கன்னரதேவனைச் சயித்ததால் **வீரசோழனென்ற** பெயரும், இலங்கையைக் கீழ்ப்படுத்திய பிறகு **சங்கிராமராகவனேன்றும்** பட்டமுமுண்டாயின வென்றோம். இவனுக்கு இவைகளைத் தவிர வீரநாராயணனென்று ஒரு பேரும் உண்டு. இவன் சேர அரசன் விஜயராகவன் மகளைப் பட்டத்தரசியாக உடையானென்றும் அவளுக்குக் **கோக்கிழானடிகள்** என்று பெயர் என்றும் உதயேந்திரத்துச் செப்பேட்டாற் றெரிகிறது. இவளைத் தவிர்த்து இவன் பீறன் ஆலப்பாடியூர் மகளை வதுவை செய்துகொண்டான். அவளுக்கு வளவன் மாதேவியார் என்று பெயர்.† இவளைத் தவிர்த்து முள்ளூர் நங்கையின் பெண்ணான **தென்னவன்மாதேவு** என்னும் பேருடைய மல்லந்தவ

* உய்யக்கொண்டான் திருமலை.

† திருஐயாறு ஐயாறப்பர் சந்நிதி மகாமண்டபம் கீழ்புறம் தெற்கு வாசல் வெளிவந்து மேல்புறம் செங்கற் சுவருக்கு அடுத்தபத்தி:—

னடிப்பிராட்டியார் என்று ஒரு தேவியுண்டு. இவருக்கு நாரா யண நங்கையாரென்றும் பேர்.*

பராந்தகதேவருக்குச் சேரன் மகளார் வயிற்றிற் பிறந்த இராஜாதித்தியனைத்தவிரக் கண்டராதித்தன், அரிஞ்செயன், உத்தமசிலி, அரிகுலகேசரி எனஐந்து மக்களுண்டு.‡ இவர்களுள் உத்தமசிலியும், அரிகுலகேசரியும் இளவரசர்களாகவும் தண்டநாயகர்களாகவும் இருந்து இறந்தனர். மூத்தவனை இராஜாதித்தன் தொண்டைநாட்டுக்கு அரசப்பிரதிநிதியாகத் திருநாவலூரில் தண்டுடன் தங்கியிருந்தான். (187 of 06) அரசன் தனது இராச்சியத்தைப் பிரித்துத் தனது மக்களைக்கொண்டு கண்காணித்து வந்தானென்று சொல்லக்கூடிய பல சான்றுகளுண்டு.

ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 30 அவரது திருவையாறுடைய மகாதேவர்க்குச் சந்திராதித்தவல் நிசதி நெய்யாலிரவும் பகலும் எரிவதற்கு நீறறலப்பரிடியர் மகளார் சோழப்பெருமானடிகள் தேவியார் வலவன் மா(தே)வியார் வைத்தபொன் 302; இவரே வைத்த வெள்ளிவிளக்கு உட்கருஉடன் நிறை ... . இதனை நோக்காது 1910-ம் ஆண்டு கல்வெட்டறிக்கை 37-வது இலக்கத்தில் திருக்கருகாவூர் என்னும் திருக்களாவூர் கல்வெட்டொன்றில் கண்டவ.........வன் என்பதை வல்லவன் என்று பூர்த்தி செய்துகொண்டது பொருந்தாமை காண்க.

* திருப்பழனமுடையார் கர்ப்பக்கிருகம் தென்புறம்:—ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு மூன்றுவது திருப்பழனத்து மகாதேவர்க்குச் சோழப்பெருமானடிகள் பரகேசரி பன்மர் தேவியார் சோழமாதேவியார் தாயார் முள்ளூர் நங்கையார் இரவும் பகலும் நொந்தா விளக்கு சந்திராதித்தவல் எரிவதற்கு.

தில்லைஸ்தானம் கர்ப்பக்கிருகம் தென்புறம்:—ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்டகோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு 304 ஆவது திருநெய்த்தானத்து மகாதேவர்க்குச் சோழப்பெருமானடிகள் மகாதேவியார் மல்லிந்தவனடிப்பிராட்டியார் தென்னவன் மகாதேவியாரான நாராயண நங்கையார் சந்திராதித்தவல் இரவும் பகலும் ஒரு நொந்தா விளக்கு நிசதம் உழக்கு நெய்...ண...,... திருப்பழனத்துக் கல்வெட்டில் சோழமாதேவி என்று காணப்படுவது பொதுப்பெயர் என்று கொள்க. மேற்காட்டிய கல்வெட்டின்கீழ் இவளது தாயார் முள்ளூர் நங்கையின் கல்வெட்டுமிருக்கிறது.

‡ கல்வெட்டறிக்கை 1909-ம் ஆண்டு.

இவன் சைவனுகவே, தில்லைத் திருமன்றத்தைப் பொன் வேய்ந்தானென்று திருவாலங்காட்டுச் செப்பேடு 53-வது சுலோகம் கூறுகிறது. கலிங்கத்துப்பாணியும் ஆனைமங்கலத்துப் பட்டயமும் அவ்வாறே கூறுகின்றன வென்பர் சரித்திர ஆசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள்.*

இவனைப்பற்றித் தமிழ்நூல்களிற் காணப்படுவன வருமாறு:—

கலிங்கத்துப்பரணி.

"வேழ மொன்றுகைத் தாலி விண்ணின்வாய்
விசைய டங்கவும் சையம் வென்றதும்
ஈழ முந்தமிழ்க் கூட லுஞ்சிதைத்
திகல்க டந்ததோ ரிசைபரந்ததும்" vii உரு.

"…. … … … நரபதியார்
தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியு
மீழமுங் கொண்ட விகலாளி"—குலோத்துங்க
[சோழதேவருலா.

"… …. … …. எழுபகலில்
ஈழ மெழுநூற்றுக் காதமுஞ் சென்றெறிந்து
வேழந் திறைகொண்டு மீண்டகோன்"—இராசராச
[தேவருலா.

'மதிரை கோப்பரகேசரி'
'மதிரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரி'
என்பன மெய்க்கீர்த்திகள்.

(தொடரும்.)

---

* Ancient India. பக். 101.

உ

சம்புவராய மன்னர்.

திருவாளர், தமிழ்ப்பண்டிதர், T. V. சதாசிவப் பண்டா ரத்தாரவர்கள், கும்பகோணம்.

வடக்கில் திருமால் எழுந்தருளியுள்ள வேங்கட மலையையும் தெற்கில் குமரிமுனையையும் கிழக்கினும் மேற்கினும் இரு பெருங் கடல்களையும் எல்லைகளாகவுடைய இந்நிலப் பரப்பு முற்காலத்தே தமிழகம் என்னும் பெயரினையுடையதாக இருந்தது. இத்தமிழகம் சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் என்னும் மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ் மூவேந்தர்களால் ஆளப்பெற்று வந்தது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், சோழமண்டலத்தின் வடபகுதி ஒருதனி மண்டலமாகப் பிரிக்கப்பட்டுத் தொண்டைமண்டலம் என்னும் பெயரெய்தியது. இத்தொண்டைமண்டலத்தை அந்நாளில் அரசாண்டவர்கள் தொண்டைமான் மரபினர் ஆவர். இவர்கள் சோழரின் வழியினர்; இவர்கள் தம் குடி முதல்வராகிய சோழரைப்போல் ஆத்திமாலையைத் தமக்குரிய அடையாளமாலையாகக் கொள்ளாமல் ஒரு காரணம்பற்றித் தொண்டைமாலையைத் தம் அடையாளமாலையாகக் கொண்டமையின் 'தொண்டைமான்கள்' என்று அழைக்கப்பெற்றனர். இவ்வேந்தர்களுள் முதல்வன் தொண்டைமான் இளந்திரையன் என்பவன்; இவன் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆட்சி புரிந்த சோழன் கரிகாற் பெருவளத்தானது பெயரன்; சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனது மகன்; கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் பெருமானால் பாடப்பெற்ற 'பெரும் பாணாற்றுப் படை' என்னும் பிரபந்தங்கொண்டவன்; செந்தமிழ்ப் புலமையிற் சிறந்தவன்; திருமால் பத்தியில் ஒப்பற்றவன்; இவனும் இவனது வழித்தோன்றல்களும்

காஞ்சிமா நகரைத் தலைநகராகக்கொண்டு தொண்டை மண்டலத்தை ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள், மக்களாகப் பிறந்தோர் இவ்வுலகில் அடையக்கூடிய உயர்நிலைக்கு எல்லையாகத் 'தோட்டி முதல் தொண்டைமான்வரையில்' என்னும் பழமொழியில் வைத்து இன்றும் பாராட்டப்பட்டு வருதல் காண்க. இவர்களது ஆட்சி, கி. பி. நான்காம் நூற்றாண்டு வரையில் தொண்டை மண்டலத்தில் நடைபெற்றது. அந்நூற்றாண்டின் தொடக்கத்தில் போர் விருப்பம் வாய்ந்த பல்லவர்கள் வடக்கேயுள்ள ஆந்திர நாட்டிலிருந்து தமிழகத்தின்மீது படையெடுத்து வந்தனர். அவர்கள் முதலில் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டனர்; பின்னர் தொண்டை மண்டலத்தையும் பிடித்துக்கொண்டு அரசாளத் தொடங்கினர். பல்லவர்களும் தொண்டை மண்டலத்தை அரசாண்ட காரணம்பற்றித் தொண்டைமான்கள் என்றழைக்கப்பெற்றனர். கி. பி. 830 முதல் 854 வரையாண்ட தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவன்மேற் பாடப்பட்ட நந்திக் கலம்பகத்திலும் அவ்வேந்தன் 'தொண்டையந்தார்' மன்னன் என்றும் 'தொண்டைமான்' என்றும் புகழப் பெற்றிருத்தலுக்குக் காரணம் இதுவேயாகும். பல்லவர்களது ஆளுகையும் தொண்டைமண்டலத்தில் கி. பி. 880-ல் முடிவெய்தியது. ஆயினும் கி. பி. 600 முதல் 880-வரை நிகழ்ந்த அவர்களது ஆட்சிக் காலம் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு சிறந்த பகுதியாகும். அக்காலத்தில் தமிழ்வேந்தர்களுள் ஒருபகுதியினராகிய சோழர்கள் தம் நாட்டை இழந்து தாழ்ந்த நிலையை எய்தினர். பல்லவர்கள் நெடுமுடி வேந்தர்களாகவும் உள்நாட்டுத் தலைவர்களிடத்தும் திறைவாங்கும் பெருமையுடையவர்களாகவும் விளங்கினர். அவர்களது ஆட்சிக் காலத்தேதான் சைவசமய ஆசாரியர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் முதலான பெரியோர்களும், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் முதலான வைணவ சமய ஆசாரியர்களும் நம் தமிழகத்தில் வாழ்ந்தனர். ஆகவே அப்பெரியோர்கள் எல்லாம் அரிய பெரிய அற்புதங்களை நிகழ்த்திச் சைவவைணவ சமயங்களை வேரூன்றுமாறு செய்து அவற்றை எங்கும் பிரவச்செய்த

ஒருகால விசேடமென்று அப்பகுதியைக் கூறுவது சாலப் பொருந்துமென்க.

இனி, ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் பல்லவர்களது தொண்டைமண்டலம் பிற்காலச் சோழர்களுள் முதல்வனுகிய விஜயாலயனது புதல்வன் முதலாம் ஆதித்தசோழனல் வென்று கொள்ளப்படவே, பல்லவர்களும் குறுநில மன்னர் ஆயினர். தொண்டைமண்டலமும் சயங்கொண்ட சோழமண்டலம் என்னும் புதியதோர் பெயரைப்பெற்றது. அந்நாளில் சோழமன்னர்களுக்குத் திறை செலுத்திவந்த பல்லவகுலச்சிற்றரசர்களும் தலைவர்களும் தொண்டைமண்டலத்தில் பலபகுதிகளில் வசித்துவந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் சோழமன்னர்களின் அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும் நிலவியதோடு சில உண்ணுடுகளையும் தனியூர்களையும் ஆட்சிபுரியும் உரிமையும் பெற்றிருந்தனர். இங்ஙனம் வாழ்ந்துவந்த பல்லவகுலச் சிற்றரசர்களுள் சம்புவராயர் என்ற பட்டப்பெயருடன் விளங்கியவர்களும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுயில் இருந்தனர் என்பது தெரிகிறது. இவர்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி செங்கற்பட்டு, வடஆற்காடு ஜில்லாக்களைக் கொண்டுள்ளதாயிருந்தது. இவர்கள் சோழமன்னர்களுக்குத்திறை செலுத்திவந்தனர். கல்வெட்டுக்களால் அறியப்படும் சம்புவராய மன்னர்களுள் செங்கேணிமிண்டன் அத்திமல்லன் சம்புவராயன் என்பவனே மிகப் பழமையானவன். இவன் மூன்றும் குலோத்துங்க சோழனது ஆட்சியின் 8-ஆம் ஆண்டில் (கி. பி. 1186) திருவல்லமுடைய மகாதேவர்க்குக் குற்றத் தண்டம், திரிசூலக்காசு இவற்றுல் கிடைக்குஞ் வருவாய்களைக் கொடுத்தனன் என்று ஒரு கல்வெட்டுக்கூறுகின்றது. (South Indian Inscriptions Vol. III No. 60) இக்கல்வெட்டின் இறுதியில் செங்கேணிகள் வம்சம் உள்ளவரைக்கும் இத்தர்மத்தைச் செய்யாமல் நிறுத்துவோர் கங்கைக்கரையிலும் குமரிக்கரையிலும் குரால் பசுவைக்கொன்றவனது பாவத்தையடைவர் என்று வரையப்பட்டுளது. இதனல் செங்கேணி என்பது குடிப்பெயர் என்று வெளியாகிறது.

மூன்றும் குலோத்துங்கனது ஆட்சியின் 11-ஆம் ஆண்டில் (கி. பி. 1189) செங்கேணி அம்மையப்பன் கண்ணுடைய பெருமானன விக்கிரமசோழச் சம்புவராயன் பலவரிகளால் கிடைக்கும். வருவாய்களைத் திருவல்லமுடையார்க்கு அளித்தனன். (S. I. I. Vol. III No. 61) முன்னவனுக்குப் பின்னவன் யாது முறையுடையான் என்பது இப்போது புலப்படவில்லை. 'சோழச் சம்புவராயன்' என்னுஞ் சொற்றொடர் இம்மரபினர் அப்போது சோழமன்னர்க்குக் கப்பஞ் செலுத்திவந்த சிற்றரசராயிருந்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றது. அன்றியும் பலவரிகளால் கிடைக்கும் வருவாய்களை அவன் திருவல்லமுடையார்க்கு அளித்திருப்பது அப்பகுதி அவனது ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதை நன்கு விளக்குகின்றது.

இவ்வரசனது புதல்வன் செங்கேணி விராசனி அம்மையப்பன் தனிநின்று வென்றான் தன்வசி காட்டுவான் அழகிய சோழனை எதிரிலி சோழச்சம்புவராயன் என்போன். இதனைக் காஞ்சிபுரத்திலுள்ள அருளாளப்பெருமாள்கோயில் கல்வெட்டொன்று 'அம்மையப்பன் மகன் சோழப்பிள்ளையான அழகிய சோழச் சம்புவராயன்' என்றுரைப்பதால் நன்குணரலாம். (Ins. 36 of 1893) இவனது கல்வெட்டு மூன்றாங் குலோத்துங்க சோழனது ஆட்சியின் 27-ஆம் ஆண்டாகிய கி. பி. 1205-ல் தான் முதலில் காணப்படுகிறது. ஆகவே அக்காலத்தேதான் இவன் ஆட்சி புரியத் தொடங்கியிருத்தல்வேண்டும். இவன் காலத்தில் பாண்டி நாட்டில் பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகர பாண்டியனுக்கும் ஆட்சி யுரிமையைப்பற்றிய விவாதம் உண்டாயிற்று. பராக்கிரம பாண்டியனுக்கு இலங்கைமன்னனாகிய பராக்கிரமபாகு என்பான் துணைப்படை யனுப்பினான். இலங்கைப் படைக்குத் தலைவனாக வந்தவன் இலங்காபுரித் தண்டநாயகன். குலசேகர பாண்டியனுக்குச் சோழமன்னர்கள் உதவிபுரிந்தனர். சோழர்களது படைக்குத் தலைமைவகித்து மகாசாமந்தனாகச்சென்றவன் நமது எதிரிலி சோழச்சம்புவராயனது புதல்வனாகிய திருச்சிற்றம்பல முடையான் பிள்ளைப்பல்லவராயன் என்பவனேயாம்.

பாண்டிநாட்டில் இராமேச்சுரம், திருக்கானப்பேர், தொண்டி, பொன்னமராவதி, மணமேற்குடி முதலான இடங்களில் இவ்விரு படைகட்கும் பெரும்போர்கள் நிகழ்ந்தன. முதலில் சிங்களப்படை வெற்றிபெற்றது. அதன் பயனாகப் பல நகரங்களும் கோயில்களும் இடிக்கப்பட்டன. இச்செய்திகளைக் கேள்வியுற்ற எதிரிலி சோழச்சம்புவராயன் பெரிதும் வருந்திக் காஞ்சிபுரத்திற்கருகிலுள்ள ஆரப்பாக்கத்தில் எழுந்தருளியிருந்த உமாபதிதேவராகிய ஞானசிவதேவரிடம் சென்று இச்செய்திகளை விண்ணப்பித்துச் 'சிங்களப்படை நம் சோழநாட்டிற் புகுந்தால் பலஆலயங்கள் அழிக்கப்பட்டுவிடுமே; அந்தணர் துன்புறுவரே; ஆதலால் அச்சிங்களப்படை தோற்றோடுமாறு தாங்கள் எவையேனும் உபாயங்கள் செய்தருளவேண்டும்' என்று கூறினன். இதனைக்கேட்ட அப்பெரியார் 'அன்னோர் இராமேச்சுரம்கோயில் வாயிலைஇடித்துச் சிவபெருமானுக்கு நித்தியபூசை நடைபெறாதவாறு இடையூறு புரிந்தனர் என்று கேள்வியுற்றேன்; எனவே அவர்கள் சிவாபராதம் செய்தவர் ஆவர். ஆகவே, அவர்கள் போரில் தோல்வியெய்தி ஓடுமாறு தக்கவழி தேடுவேன்' என்றுரைத்து இருபத்தெட்டுநாட்கள் இரவும்பகலும்தவம்புரிந்தனர். அப்போது திருச்சிற்றம்பலமுடையான் பிள்ளைப் பல்லவராயனிடமிருந்து 'இலங்காபுரித் தண்டநாயகனும் சகத்விசயதண்டநாயகனும் தோல்வியுற்று இலங்கைக்கு ஓடிப்போயினர்' என்று எதிரிலி சோழச்சம்புவராயனுக்கு ஒரு திருமுகம் வந்தது. இதனைக்கண்ட இச்சம்புவராயன் பெரிதும் மகிழ்ந்து ஆரப்பாக்கத்திலிருந்தசுவாமிகளிடம் கொண்டுபோய்க்காட்டவே, அவரும் உவகையுற்றனர். பின்னர் இவ்வேந்தன் ஆரப்பாக்கம் என்னும் கிராமத்தை அப்பெரியாருக்கு அளித்தனன். இச்செய்திகளை ஆரப்பாக்கத்திலுள்ள கல்வெட்டுக்களில் விளக்கமாய்க்காணலாம். [Ins. 20 of 1899].

இவ்வேந்தன் மூன்றும் இராஜராஜசோழன் காலத்தும் அவனது சிற்றரசர்களுள் ஒருவனாயிருந்தனன். விரிஞ்சிபுரத்திற்கருகிலுள்ளதும் பொய்கை என்று தற்காலத்தில் அழைக்கப்படுவதுமாகிய இராஜேந்திர சோழநல்லூர் சித்திரமேழிமலை மண்டல

விண்ணகரான அருளாளப்பெருமாளுக்குக் குமாரமங்கலம், புத்தூர், அத்தியூர் ஆகிய கிராமங்களைக் கி. பி. 1238, 1239, 1243-ஆம் ஆண்டுகளில் மலைமண்டலத்து வணிகன் இராமகேரளச் செட்டியிடம் இம்மன்னன் பொன் பெற்றுக்கொண்டு தேவதானமாகவிட்டான் என்று பொய்கையிலுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. (S. I. I. Vol. Nos. 59, 61, 62 and 64)

அத்திமல்லன் சம்புகுலப் பெருமாளான இராஜகம்பீரச் சம்புவராயன் என்பானும் மூன்றும் இராஜராஜசோழனது ஆட்சியின் 20-ம் ஆண்டாகிய கி. பி. 1236-ல் ஆட்சிபுரிந்துகொண்டிருந்தான் என்று தெரிகிறது. இவன் எதிரிலி சோழச்சம்புவராயனது தம்பியாயிருத்தல்வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. இவ்விருவேந்தரும் ஒரேகாலத்தில் ஆட்சிபுரிந்து வந்துள்ளார் என்பது பல கல்வெட்டுக்களால் நன்கறியக்கிடக்கின்றது. நமது இராஜகம்பீரச் சம்புவராயன் குன்றத்தூரை இராஜகம்பீரநல்லூர் என்னும் பெயருடன் நிலவுமாறு பங்களராயர்க்குக் காணியாகக் கி. பி. 1236-ல் அளித்தான். இச்செய்தியை உணர்த்தும் கல்வெட்டொன்றுவைகவூர்த்திருமலையிற்காணப்படுகின்றது. அதனை அடியில் குறிக்கின்றேன். "ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனச்சக்ரவர்த்திகள் ஶ்ரீ இராஜராஜதேவர்க்கு யாண்டு இருபதாவது முதல் ஜயங்கொண்ட சோழமண்டலத்துத்தமனூர் நாட்டு விரன்பாக்கத்து இலாலப்பெருமான் மகன் ஆண்டான்கள் பங்களராயர்க்குப் பல்குன்றக் கோட்டத்துப் பங்களநாட்டு நடுவில்..........க்குன்றத்தூரான ராஜகம்பீரநல்லூர் இவர்க்குக் காணியாகக் கீழ்நோக்கின கிணறும் மேனோக்கின மரமும் நாற்பாலெல்லையும் விற்றொற்றிப் பரிக்கிரயத்துக்கு உரித்தாவதாகக் கொடுத்தோம். அத்திமல்லன் சம்புகுலப்பெருமாளான ராஜகம்பீரச் சம்புவராயனேன்". (S. I. I. Vol. I No. 74)

இக்கல்வெட்டால் இராஜகம்பீரச் சம்புவராயன் மூன்றும் இராஜராஜசோழனது ஆட்சிக்குட்பட்டிருந்த ஒரு குறுநில மன்னன் என்பதும், 'சம்புகுலப்பெருமாள்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன் என்பதும் நன்கு விளங்குகின்றன. இராஜ

கம்பீரச் சதுர்வேதிமங்கலம் எனவும், சம்புகுலப்பெருமாள் அகரம் எனவும் அழைக்கப்படும் ஊர்கள் இம்மன்னன் பெயரால் அமைக்கப்பெற்ற ஊர்கள் போலும். இராஜகம்பீர நல்லூரும் இராஜகம்பீரச் சதுர்வேதிமங்கலமும் வேறு வேறு ஊர்களாதல் உணர்க.

இனிச் சம்புவராய மன்னர்களுள் இராஜகம்பீரச்சம்புவராயனே மிகவும் பெருமையுற்றவன். இவ்வேந்தன் காலத்தில் இவனது இராச்சியம் பெருகியதோடு 'இராஜகம்பீரவிராஜ்ஜியம்' என்னும் பெயரையும் எய்தியது. இவன் படைவீட்டில் ஒரு மலைக்கோட்டை யமைத்து அதனைத் தனக்கு உறைவிடமாகவுஞ் செய்துகொண்டான். கி. பி. 1258-ல் படைவீட்டில் வெட்டப் பெற்றுள்ள ஒருகல்வெட்டு இவன் சோழர்களுக்குக் கப்பஞ் செலுத்தாமல் தனி அரசுபுரிந்தான் என்று கூறுகின்றது. இதனால் இவன் காலத்தேதான் சம்புவராயர்கள் நெடுமுடிவேந்தராய் ஆட்சிபுரியும் பெருமையை அடைந்தனர் என்பது நன்கு வெளியாகின்றது. இவர்களது இராச்சியமும் 'தொண்டைமண்டலத்துப் படைவீட்டிராஜ்யம்' என்று புகழப்படும் சிறப்பையும் அடைந்தது. படைவீட்டினுள் அம்மையப்பேச்சுரர் ஆலயம் எடுப்பித்து அதற்கு நிபந்தங்கள் விட்டவனும் இவ்வேந்தனே யாவன். இவனது தந்தையாகிய அம்மையப்பன் கண்ணுடைய பெருமாளான விக்கிரமசோழச்சம்புவராயனது பெயரே இவ்வாலயத்திற்கு இடப்பட்டதுபோலும் சோழமன்னர்களது ஆட்சிக் காலங்களில் எடுப்பிக்கப்பெற்ற இராஜராஜேச்சுரம், கங்கைகொண்டசோழேச்சுரம், விக்கிரமசோழேச்சுரம் என்றஆலயங்கள் எய்தியுள்ள பெயர்களையும் ஆராய்ந்துநோக்குங்கால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

இனி இவனுக்குப் பின்னர் அரசுரிமை எய்தியவன் யாவன் என்பது இப்போதுபுலப்படவில்லை. ஆனால் இவனுக்குப்பின்னர்ப் பட்டம் பெற்றவன் தனது சுயேச்சையை இழந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இதற்கேற்ப, காஞ்சிபுரத்திலும் அதனைச் சூழ்ந்துள்ள சில இடங்களிலும் தெலுங்குநாட்டுச் சோழர்களது

கல்வெட்டுக்களும் சேந்தமங்கலத்துப்பல்லவனாகிய கோப்பெருஞ் சிங்கன் கல்வெட்டுக்களும் அக்காலத்தில் காணப்படுகின்றன. எனவே, சம்புவராயர்களும் சிலகாலம் இவர்களுக்குத் திறை செலுத்தும் நிலையிலிருந்தனரோ என்று ஐயுறவேண்டியிருக்கின்றது. ஆயினும் கி. பி. 1314–15-ல் வீரசோழச்சம்புவராயன் வீரசம்புவராயன் என்போரது கல்வெட்டுக்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. இன்னோர் சுயேச்சையுற்று வாழ்ந்துவந்தனர் என்று தெரிகிறது. அன்றியும் கி. பி. 1322-ல் சகலலோக சக்கிரவர்த்தி யென்று மண்கொண்ட சம்புவராயன் பட்டம் சூட்டப்பெற்று அரசாளத்தொடங்கினான். இவன் சக்கிரவர்த்தி என்ற பட்டம் பெற்றிருத்தலாலும் 'வென்றுமண்கொண்ட' என்றஅடைமொழிகளோடு விளங்குதலாலும் இவனே தெலுங்கு நாட்டுச் சோழர் முதலானோரைப் போரில் வென்று மீண்டும் சுயேச்சை யுற்றுத் தனியரசு புரிந்தவனாதல்வேண்டும் என்பது நன்கு புலப்படுதல் காண்க. இவன் கி. பி. 1338 வரைஆட்சிபுரிந்தான். இவன் காலத்தில் படைவீட்டுராஜ்யம் மகோன்னத நிலையிலிருந்தது. இவனுக்குப் பிறவேந்தரெல்லாம் அஞ்சுவாராயினர். விஜயநகர வேந்தர்களும் தமக்குத் தெற்கிலுள்ள சம்புவராயர்களைக்கண்டு அஞ்சி அவர்களை எவ்வாறாயினும் தம் சிற்றரசர்களாக்கித் திறைசெலுத்தச் செய்யவேண்டுமென்று காலங்கருதிக் கொண்டிருந்தனர். இன்னோரது முயற்சி வென்றுமண்கொண்ட சம்புவராயன் என்பானது ஆட்சியுள்ள வரையில் பயன்படவில்லை. கி. பி. 1338-ல் அவ்வேந்தன் விண்ணுலகெய்தவே அவனது புதல்வன் இராஜநாராயண சம்புவராயன் முடிசூட்டப்பட்டான். இவன் நாடாட்சியை எய்தியபின்னர்ச் சகலலோக சக்கிரவர்த்தி இராஜநாராயண சம்புவராயன் என்று அழைக்கப்பெற்றான். இவன் கி. பி. 1339 முதல் 1356 வரை ஆட்சிபுரிந்தான். இவனது கல்வெட்டுக்கள் காஞ்சி, மாமல்லபுரம், படைவீடு, வேலூர், திருப்புக்கொளி, போளூர்த்திருமலை முதலான இடங்களில் காணப்படுகின்றன. இவனும் தனது முன்னோர்கள் போலவே பல கோயில்களுக்கு நிபந்தங்கள் விட்டிருக்கின்றான். இவனது ஆட்சிக்காலத்தில்தான் விஜயநகரவேந்தனாகிய குமார

கம்பண்ணன் தமிழ் நாட்டின்மீது படையெடுத்து வந்தனன். இது கி. பி. 1365-க்கு முன்னர் நிகழ்ந்தது. பெரும்படையுடன் தென்னாடுபோந்த விஜயநகர வேந்தன் முதலில் படைவீட்டிராஜ்ஜியம் எனப்படும் இராஜகம்பீர விராஜ்ஜியத்தைத் தாக்கினன். தாக்கவே இராஜநாராயணசம்புவராயனும் தன் பகைவனை எதிர்த்துப் போர்புரிந்தான். இறுதியில் விஜயநகர வேந்தன் வெற்றியடைந்தமையின் சம்புவராயன் தன் நாட்டை இழந்தான். ஆயினும் குமாரகம்பண்ணன் தான் கைப்பற்றிய நாட்டைத் திரும்ப அச்சம்புவராயமன்னனுக்கே யளித்து அவனைத் தனக்கு ஆண்டுதோறும்திறைசெலுத்திவருமாறு கட்டளையிட்டுவிட்டுப் பாண்டிநாடு நோக்கிச்சென்றான். பிறகு கி. பி. 1366-ல் இராஜநாராயண சம்புவராயனும் இறந்தான். அவன் வழியில் தோன்றிய சம்புவராயர்களும் குறுநில மன்னராகி விஜயநகரத்தரசர்களுக்குக் கப்பஞ் செலுத்திவந்தனர். அன்னோர் பல ஆண்டுகள் அந்நிலையிலேயே இருந்துவந்தனர். பின்னர் அவர்களது ஆட்சியும் ஒழிந்தது. ஒழியவே அவர்களும் செல்வங்குன்றியவர்களாய்த் தாழ்ந்தநிலையை எய்தினர். வட ஆற்காடு சில்லாவில் வேலூருக்கண்மையிலுள்ள படைவீடென்ற இடத்தில் இன்றும் அவர்களது வழியினர் வசிக்கின்றனர். படைவீடு என்னும் அவர்களது தலைமைநகரம் இப்போது ‘படவேடு’ என்றழைக்கப்படுகிறது. அங்கு அழிந்துகிடக்கும் அரண்களையும் கோட்டையையும் அம்மையப்பேச்சுரர் ஆலயத்தையும் இன்றுங்காணலாம்.

இனி, இரட்டைப்புலவர்களால் பாடப்பெற்று கலம்பகம் கொண்டவனும் காஞ்சியைத்தலைமை நகராகக்கொண்டு அதனைச் சூழ்ந்துள்ள பகுதியை அரசாண்டவனும் காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதருக்கு அரிய பெரிய திருப்பணிகள் பல புரிந்தவனுமாகிய ஏகாம்பரச்சம்புவராயன் என்பானும் அச்சம்புவராயமன்னர்களின் வழித்தோன்றல்களுள் ஒருவன் என்பது ஈண்டு அறிந்து கோடற்குரியதாகும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

திருவாளர். K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தஞ்சை.

(முற்றொடர்ச்சி.)

II

பாண்டியன் நெடுஞ்செழியன் சிறந்தகுணங்கள் பலவுடையோன். இவன் அரசாட்சிசெய்யுங்கால் பொறைக்குணமும் போர்செய்யுங்கால் மிக்க வீரத்தன்மையையு முடையோன். இவன் பாண்டியநாடு 12 வருடகாலம் பஞ்சத்தினல்பீடிக்கப்பட்டகாலத்தின்பின் பாண்டியநாட்டை வளப்படுத்தி அதைத் தனது முன்னிலைமைக்குக் கொண்டுவர மிகப்பாடுபட்டு அதன்சீர்மையை நிலைநாட்டினுன். தன்குடியைச் சிறப்புறக்காத்தான். இவன் குடிகளை ஓம்பி ஆறில்ஒன்றாகியபகுதியை அவர்களைக் வருத்தாது வரியாக வாங்கிக்கொண்டான். பயிர்த்தொழிலையும்வாணிகத்தையும்பெரிதும்காத்துத் தனதுநாட்டில் செல்வம்நிறையும்படி முயற்சிகளெடுத்துஅதனுலுண்டாகியபுகழைமிகவுடையோன். யவனர்கள் இவனதுநாட்டின் வளத்தினையும், அமைதியினையும் கருதிக் கடல் மார்க்கமாய்வணிகம் செய்யத்தொடங்கினர்கள். இவன்நாட்டில் சிறிதும் சச்சரவுகளில்லாததினல் எங்கும் அமைதியேயிருத்தலின், இவன் தன்நாட்டில் சிறிதுநேரம்கூடத் தங்குகிறதில்லை, எப்பொழுதும் பிறிதொரு நாட்டைக் கவர்ந்து படையெடுத்தலே நோக்கமுடையவனுயிருத்தலின் தனதுநாட்டைத் தென்திசைக்குக் குமரி எல்லையாக, வடதிசைக்குப் பெரியமேரு எல்லையாகக் கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் கடல்எல்லையாகப் பரப்பி, அந்நாட்டிலுள்ளோர் இவனது ஏவல்கேட்கும்படியும் யாவருமஞ்சும்படியும் தனது செங்கோலைச் செவ்வனே திருத்திப் புகழ்பெற ஆண்டான். இதுபற்றியே,

> முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
> பரந்துபட்ட வியன்ஞாலம்
> தாளிற்றந்து தம்புகழ்நிறீஇ

என்றார் புலவர் குடபுலவியனார்.

இவன் மாங்குடிமருதனர் தலைவனுகவுள்ள குடபுலவியனர், கல்லாடனர், இடைக்குன்றூர்க்கிழார் ஆகிய ஏனையபுலவர்களை யும் பாதுகாத்து அவர்களுக்குச் செல்வம் வரையாதுகொடுக்கும் வண்மையுடையோன். குறுங்கோழியூர்க்கிழார் இவனது உதார குணத்தினைக்குறித்து

'வரையாவீகைக் குடவர் கோவே'

என்று பாடியுள்ளார். இவன்,

முழவுத்தோண் முரட்பொருநர்க்
குருகெழு பெருஞ்சிறப்பி
னிரும்பெயர்ப்பே ராயமொ
டிலங்குமருப்பிற் களிறு

வரையாது கொடுத்தவன். குறுநிலமன்னர்களை இவன் தோற் கடித்து அவர்களது நாடுகளிலிருந்த பொருள்களை யெல்லாம் வாரித் தன்குடிகளுக்கே கொடுத்தவன். வைகறையில் இவனது அரண்மனையில்வந்து பாடும்பாணர்களுக்குக் களிறுபல ஈந்தான். இவன் இப்பிறப்பின்கண் செய்ததொன்று மறுபிறப்பிற்குதவு மென்று நினைத்துப் பிறருக்குச் செல்வம் கொடுத்தவனல்லன்.

இவன் பெரும் புலமையடைந்து கவிபாடுதலில் வெகுசிறப் புப்பெற்றவன்.

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந'னும் இவன்

சேரசோழரும் மற்றைய குறுநில மன்னவரைவரும் இவனோடு போர் செய்யத் தலையாலங்கானத்திற்கு வருங்காலத்தில் மனத் தைக் கவரும் சொற்சுவை, பொருட்சுவை ததும்பியுள்ள இவ னது வஞ்சிப்பா ஈண்டு நோக்கத்தக்கது.

நாடுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்

படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தா
ணெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்கப் படேஎ னாயிற் பொருந்திய
வென்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக;
வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை;
புரப்போர் புன்கண் கூர
விரப்போர்க் கீயா வன்மையா னுறவே.

[புறம்—௭௨]

இவன் சிவமதத்தைச் சார்ந்து முருகனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்தவன். அந்தணர்களுக்குத் தனியே யுறைவதற்காகப் பள்ளியை ஏற்படுத்தினான். மறக்களவேள்விகளையும் அறக்களவேள்விகளையும் முருகனைக் குறித்து இடைவிடாது செய்தான்.

நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவுங்
களனகற்றிய வியலாங்க
ணொளிறிலைய வெஃகேந்தி
யரைசுபட வமருழக்கி
யுரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்

புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி
னடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய'னாகிய

இவன் சைவமதத்தைச் சார்ந்தவனேயாயினும் அவன் காலத்தில் மிகவும் விளங்கியுள்ள பலசமயங்களையும் போற்றினன். இவன் பல பௌத்தப் பள்ளிகளை ஏற்படுத்தியும், புதுப்பித்தும், பாது காத்தும் வந்தான். இவன் மிகவும் தெய்வபக்தியுடையவனாகை யால்,

'இலைவேய் குரம்பை யுழைய தட் பள்ளி
யுவலைக் கண்ணிவன் சொல்'

உடையராகிய தபசிகளை, தன் பகைவர்களிடமிருந்தும் கள்வர்க ளிடமிருந்தும் வரும் துன்பங்களை நீத்துப்பாதுகாத்து வந்தான். ஆலயங்களில் எவ்வெக்காலங்களில் திருவிழாக்கள் நடைபெற வேண்டுமோ அவ்வக்காலங்களில் அவைகள் செவ்வனே நடத் தப்பட்டுப் பாண்டியனது தலைமைபெற்று விளங்கின.

பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்தில் சேர சோழ பெருநில மன்னருடனும், குறுநில மன்னவர்களோடும் போர்செய்யுங்காலையில் கூதிர்காலம் நடுவேவந்து குறுக்கிட, இப் பாண்டியன் நடக்கும் அமரை நிறுத்திப் பாசறைக்குச் சென்ற செய்தி ஈங்குக் கூறுவாம். இவனது குணஞ்செயல்களை இது காறும் போல் ஈண்டும் சிறிது கவனிப்போம். இவன் கூதிர் காலத்தை எவ்வாறு கழித்தான்? இவன் தன் சேனாதிபதிய ரோடு நேரில், புண்பட்ட வீரர்களைப்போரில் கண்டு அவர்களுக்கு மிக்க அன்புடன் உபசார வார்த்தைகளைக்கூறிப் பின்பு அவர்கள் போரில்செய்த மறத்தையுன்னி அவர்களுக்கும் பரிசளித்தான். இவன் சிறிதும் செருக்கடைந்திலன். வீரர்கள், குடிகள் மற்றெல் லாரோடும் கலந்து உரையாடி அவர்களைப் பேடுசெய்யும் குணமு டையான். இத்தகையகுணம் இவனுக்கு நிரம்பவிருத்தலால் இவ னைப்பற்றி எல்லோரும் சிறப்புறப் புகழ்வார்கள். மேலும் அவர் கள் தம் தந்தை இவனேயென்றுன்னி அவனுதவியைத் தாங்கள் எக்காலத்திலுமடையும் பொருட்டு நாடுவார்கள். இதுபற்றியே மாங்குடி மருதனார்,

நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை

எனப்பாடியுள்ளார்.

இனி இவனது வீரத்தன்மையைக் கூறுவாம். இப்பாண்டியன் சிறந்தவீரர்களில் ஒருவனுகக் கருதப்படுபவன. இவனுடன் ஏனையோர் விற்போரில்பொருதல் வெல்லத்தகாத காரியமென்று இவன் காலத்துப் புலவர்கள் கூறியுள்ளார்கள்.

'ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை'

ஆனல் இவன் ஒருவனுயிருந்து 'புனைகழ லெழுவர் நல்வல மடங்க'த், தலையாலங்கானத்தில் போர்செய்தகாட்சியே இவனது வீரத்தன்மை எத்தன்மையதெனத் தெள்ளிதில் விளக்கும். மேலும் இவன் போருக்கு முன்சொல்லிய வஞ்சினப்பாவே இவனது வீர வெழுச்சியையும் கொழுந்திட்டு எரியும் அதன் தன்மையையும் குறிக்கின்றது. [12-ம் பக்கம்]. இவன் போரில் எழுவரைப் புறங்காட்டியோடும்படி துரத்திவிட்ட செய்தியையும். இவன் அப்பொழுது காட்டின வீரத்தன்மையினையும் மற்று இவன் மிகஎளிதில் வெற்றிபெரும் விதத்தினையும் தீரத்தினையும் இவன் காலத்திலுள்ள புலவர் பலர் பலவாருகப் புகழ்ந்து கூறுகின்றனர். குடபுலவியனுர்,

இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடைக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு
நின்னெடு தூக்கிய வென்வேற் செழிய— , என்றும்,

கல்லாடனுர்,

துன்னல் போகிய துணிவினேனெ
ஞால நெளிய வீண்டிய வியன்படை
யாலங் கானத் தமர்கடந் தட்ட
கால முன்ப என்றும்,

உடலருந் துப்பி னென்றுமொழி வேந்தரை
யணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்ட காலை
சிறைதலுய்ந் தன்றோ வென்வேற் செழிய'—

என்றும்

இடைக்குன்றூர் கிழார்,

விழுமியம் பெரியம் யாமே நம்மிற்
பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென
வெள்ளிவந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
வீண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே

என்றும் கூறியுள்ளார்.

(தொடரும்)

நறுந்தொகைப் பதிப்பு.$

திருவாளர், மாந்தை, வே. கோபால கிருஷ்ணையரவர்கள்.

தமிழ்மொழிக்குப் பலவகையாலும் சிறந்த தொண்டியற்றி வரும், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால், திருவாளர் பண்டிதர் வேங்கடசாமி நாட்டாரவர்களைக் கொண்டு நறுந்தொகை என்னும் நீதிநூல் பதிப்பிக்கப் பட்டுள்ள தென்பதைக் கேட்டுப் பெருமகிழ்வடைந்தோம். அளவிற் சிறிய இத்தகைய நூல்களைத் தக்க தமிழ்ப் புலவர்கள் பதிப்பிப்பார்களாயின், அதனால் விளையும் நலம் எத்துணைச் சிறந்ததென்பது தமிழன்பர்கள் யாவரும் நன்குணர்ந்ததே யாகும். திரு. நாட்டாரவர்களால் நறுந்தொகை பதிப்பிக்கப் பட்டுள்ளதெனவே, அப்பதிப்பின்கண் இதுவரை அச்சேறி

$ கட்டுரையின் பொறுப்பு கட்டுரையாளர்க்கே உரியது.

பொழிற்றொண்டர்.

வெளிவராத பல பாடவேறுபாடுகளும், பாடங்களும் காணக் கிடைக்குமெனஎண்ணினேம். அப்பதிப்பின் முகவுரையைப் பார்த்தவளவிலே நாம் கொண்ட எண்ணம் நிறைவேறாதெனத் தெரிந்தது; ஏனெனில், ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பார்த்துப் பதிப்பிக்க முயற்சித்ததாக அதில் யாதொரு குறிப்புங் காணப் படவில்லை.

பின்னர், வெளிவந்துள்ள பாடங்களுட் சிறந்தவையேனும் ஒரு சேரக் காணலாகுமென எண்ணின் அவ்வெண்ணமும் வறிதாயிற்று. இந்நூற்கு "வெற்றிவேற்கை" "நறுந்தொகை" என்னும் பெயர்களோடு "சுந்தர பாண்டியன் தொகுதி" என ஒரு பெயரும் வழங்கிவந்துள்ள தென்பதையும் அவர் குறிக்காமல் விடுத்தனர். அன்றியும்,

1. சிறியோர்க் கழகு பெரியோரைச் செறிதல்.
2. பெரியோர்க் கழகு பிழைபல பொறுத்தல்.
3. தேன்படு பெண்ணைத் திரள்பழத் தொருவிரை
   வானுற வோங்கி விசும்புற நிமிரினு
   மொருவற் கிருக்க நிழலா காதே
4. கற்றோ ரெல்லா மறிஞரு மல்லர்.
5. சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம்
   பெரியோ ராகிற் பொறுக்கவும் வேண்டும்;
   சிறியோ ரப்பிழை செய்கில ராகிற்
   பெரியோர்க் கப்புகழ் பெறுதலு மரிதே.
6. குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
   பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே;
   பாம்பின் பைத்தலை கொத்து மஞ்ஞை
   கோம்பிக் கஞ்சு மதனே போலப்
   பெண்டிற் கஞ்சும் பேதை யாண்மகன்
   கண்டுழிக் கண்டுழி விருந்தஞ் சும்மே.
7. அறுசுவை படிசி லமர்ந்திருந் துண்டவர்
   குடிமிசைப் பிடகைக் கூறினுங் கூறுவர்.

8. பிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோ
ரறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்;
அறக்கூ முண்டங் கந்நிலை திரிந்தோ
ரெமக்கும் பிறர்க்கு முதவினு முதவுவர்.

9. ஓத்துண ரந்தணி ரொழுக்கங் குன்றிப்
பாப்பு மறந்தோன் பதரெனப் படுமே.

10. அங்கண்மா ஞாலத் தரசுவீற் றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.

11. நன்மனைக் கிழத்தி தன்மனை யிருக்கப்
பிறன்மனைக் கிரங்கும் பேதையும் பதரே.

12. வித்தை கல்லா வெற்றுடம் பொருவனுங்
கொச்சை மக்களும் பதரெனப் படுமே.

13. அல்ல லில்லை யறிவுடை யோர்க்கே.

14. யானைக்கில்லை கானமு மிருளும்.

15. இரும்புலிக் கில்லை யிரவும் பகலும்.

16. பெரும்படைக் கில்லை யரணுஞ் சிறையும்.

17. காமுகற் கில்லை நாணமு மச்சமும்.

18. விரைந்தோர்க் கில்லை நாளுங் கோளும்.

19. இல்லோர்க் கில்லை யிருந்து வாழ்தல்.

20. எல்லா மில்லை சொல்லறி யார்க்கே.

21. பெறும்வழக் குடையோன் பெற்றிலா மையான்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறைமுறை கேளா மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே

எனவரும் பலபாடங்களும், தமிழ்நலங் கருதிய அறிஞர்கள் பலரும் முன்னமே அறிந்திருக்கக் கூடியவைகளாயிருந்தும், அவைகள் இப்பதிப்பில் காணப்படாமை பெரிதும் கருதத்தக்க தேயாகும். மேற்குறித்த பாடங்கள் யாவும் ஓர் தமிழறிஞரால் முன்னமேயே எடுத்துக் காட்டப்பெற்றவைகளாகும். பனை

யேட்டுச் சுவடிகளைத் தேடிப்பார்த்து அவற்றுள் காணக்கூடிய பாடங்களையும் இப்பதிப்பில் சேர்க்க இப்பதிப்பாசிரியர் முயன்றிருப்பாராயின் இன்னும்பல அரிய பாடங்கள் கிடைத்திருக்கவும்கூடும்.

தமிழ்நூல்களைத் தக்கவாறு புரப்பார்களில்லா விக்காலத்து, தமிழ் நூல்களைப் பதிப்பிக்க முன்வருவோர் தங்களால் இயன்றவரையிற் பாடுபட்டுச் செல்வாய்ப்படாது எஞ்சியுள்ள பாடங்களையேனும் பாதுகாப்பார்களாயின், தமிழ்நாட்டுக்குப் பேருதவி செய்தவர்களேயாவர்கள். ஒருவர் ஒரு நூலை அச்சிட்டு விட்டால் பிறகு எவரும் ஏட்டுச்சுவடிகளிற் காணப்படும் அந்நூலைக் கருதுவதில்லை யென்பது நம்மவர்யாவரும் உணர்ந்ததேயாகும். பதிப்பிப்போர், தக்கவாறு, ஏட்டிலும் அச்சிலும் கிடைக்கக்கூடிய சுவடிகளை ஒன்றோடொன்று ஒப்ப நோக்கிப் பல வேற்றுமைகளையும் காண்பித்துப் பதிப்பிக்காவிடில் பல பாடங்களும் நாளடைவில் அழிவனவாகும். அவ்வாறாயின் தமிழ்ப் பழநூல்களின்நிலை என்னவாகும்?

மேற்குறித்த பாடங்கள் முன்னரே பலரும் அறிந்திருக்கக் கூடியனவாயினும், பெருந்தமிழ்ப் புலவரான திரு. நாட்டாரவர்களே பலபதிப்பினும் சிறந்ததாகத் தாங்கள்பதித்த இப்பதிப்பில், அவற்றைக் காட்டாது விட்டுவிட்டபடியால் தமிழன்பர்கள் நாளடைவில் இப்பாடங்களை மறந்து விடுகின்றார்களோவென அஞ்சி அவற்றை வேறொருமுறை தமிழறிஞர்களது நினைவிற்குக் கொண்டுவரவெண்ணி இப்பொழில் வழித்தெரிவிக்கலானேம். ஏட்டுச்சுவடிகளைத் தேடிப்பார்ப்போர்க்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களிலும் நாட்டாரவர்கள் பதிப்பில் காணப்பெறாத பல அரிய பாடவேறுபாடுகளும் பாடபேதங்களும் காணக்கிடைக்குமென நம்புகின்றேம்.

மேற்காட்டிய குறைகளுள்ளதெனினும் திரு. நாட்டாரவர்கள் பதிப்பு, சிறந்தபதிப்புக்களுள் ஒன்றென்பதனைத் தமிழன்பர்கள் அனைவரும் கருதத்தக்கதேயாகும்.

திருத்தம்.

பக்கம் 82. வரி 10. பலவற்றுள்ளும் என்பதனோடு பெரும்
பான்மை என்பதைக் கூட்டுக.

" " கீழ்க்குறிப்புள். "கடுங்காலொட்டகத்தல்கு பசி
தீர்க்கும் கன்னெடுங் கவலைய கான நீந்தி"
மதுரை மருதனிள நாகனர்
என்பதனைக் கூட்டுக.

" 83. வரி 1. உரையாசிரியர்கள் காலத்தே என்பதனை
பிற்காலத்தே எனத்திருத்துக.